# அடிப்படைப் பாடநூல்

# தமிழ்

வகுப்பு IX

Kerala Reader - Tamil (BT)
Standard IX

கேரள அரசு
பொதுக்கல்வித்துறை

தயாரிப்பு
மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT), கேரளம்
2024

ST-321-1-TAMIL (BT)-9

## தேசிய கீதம்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப சிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிஸ மாகே
காகே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே! ஜய ஹே! ஜய ஹே!
ஜய ஜய ஜய ஜய ஹே!

## உறுதிமொழி

இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் எனது உடன் பிறந்தோர் எனது நாட்டை நான் உயிரினும் மேலாக மதிக்கிறேன். அதன் வளம் வாய்ந்த பல்வகைப் பரம்பரைப் புகழில் நான் பெருமைகொள்கிறேன். அதற்குத்தக நான் என்றும் நடந்துகொள்வேன்.

என் பெற்றோர், ஆசிரியர், மூத்தோர் இவர்களை நான் நன்கு மதிப்பேன். எல்லாருடனும் நான் பண்புடன் பழகுவேன். எனது நாட்டினிடமும் நாட்டு மக்களிடமும் பக்தியுடன் இருப்பேன் என உறுதி கூறுகிறேன். அவர்களின் நலத்திலும் வளத்திலும் எனது இன்பமும் அடங்கியிருக்கிறது.

# தமிழ்

9

*Prepared by*
State Council of Educational Research and Training (SCERT)
Poojappura, Thiruvananthapuram 695012, Kerala
Website : www.scertkerala.gov.in, e-mail : scertkerala@gmail.com
Typeset and design by : SCERT
First Edition : 2024
Printed at : KBPS, Kakkanad, Kochi
© Department of General Education, Government of Kerala

## முகவுரை

உலகில் நாம் காணும் உயிரினங்களை ஓரறிவு உயிர், ஈரறிவு உயிர், மூவறிவு உயிர் என ஆறுவகை உயிரினங்களாக வகைப்படுத்தியிருப்பதை நாம் அறிவோம். உயர்ந்தபட்சமாக ஆறறிவு படைத்தவன் மனிதன். ஆறாவது அறிவு என்பது சிந்திக்கும் ஆற்றல். அந்தச் சிந்தனைக்கு மூலகாரணமாக விளங்குவது மொழி. எனவே பிற உயிரினங்களிடமிருந்து மனிதனை வேறுபடுத்திப் பெருமைப்படுத்துவது மொழியே எனலாம்.

மொழி! அது கருத்துப் பரிமாற்றத்திற்கான ஒரு கருவியாக மட்டுமே பொதுவாகப் பலரும் கருதுகின்றனர். ஆனால் மொழி பன்முக ஆற்றல் வாய்ந்த ஒன்று. அதற்கு உயிருண்டு என்று கூறினாலும் தவறில்லை. மொழியானது மக்களின் பயன்பாட்டிற்கு ஏற்ப, காலந்தோறும் அதன் ஆழத்திலும் பரப்பிலும் வளர்ச்சியடைந்து கொண்டேயிருக்கும் தன்மையது.

இன்றைய அறிவியல் உலகில் உயர் வகுப்புகளுக்கு மொழிக்கல்வி தேவையா? என்ற கேள்வியைச் சிலரேனும் எழுப்புகின்றனர். எந்த வகுப்பு ஆனாலும் மொழிக்கல்வியும் அதனால் கிடைக்கும் பயனும் இல்லையென்றால் மனிதனும் எந்திரமாகிவிடுவான் என்பது உண்மை. மொழிப் பாடங்கள், படித்துச் சுவைப்பதற்கான பாடங்களாக மட்டும் இருந்துவிடக் கூடாது. அவை தனிமனித வாழ்க்கைக்கும் சமூகத்திற்கும் நாட்டிற்கும் பயன் தருவனவாக அமைதல் வேண்டும்.

மொழிக் கல்வியின் வாயிலாக மொழிப்பயிற்சி, மொழி அழகு, மொழி ஆற்றல், மொழிக்கூறுகள், மொழி வெளியீட்டு வடிவங்கள், படைப்பிலக்கியங்கள் முதலானவற்றிலும் மாணவர்கள் திறன்பெற வேண்டும். இவற்றையெல்லாம் உள்வாங்கியே இப்பாடநூல் வடிவமைக்கப்பட்டுள்ளது. அறிவு என்பது கேட்டுப் பெறுவதல்ல; ஆக்கிக்கொள்வது என்பதையும் நினைவில் கொள்ளுங்கள்.

வாழ்த்துகள்.


**முனைவர். ஜெயப்பிரகாஷ், ஆர்.கெ.**
இயக்குநர்,
எஸ்.ஸி.இ.ஆர்.டி.

# Textbook Development Team

## Tamil - IX (BT)

### Advisor

**Dr. Nainar, M.**
Reader in Tamil (Rtd.), University College, Thiruvananthapuram.

### Chairperson

**Dr. Jeyakrishnan, P.**
Prof. & Head of Tamil, University of Kerala, Kariyavattom.

### Experts

**Dr. Karthikeyan, A.**
Prof. (Rtd.), Dept. of Tamil, Tamil University Thanjavur.

**Dr. Rajendran, S.**
Associate Prof. & Head (Rtd.), University College, Thiruvananthapuram.

**Dr. Santhosh Kumar, G.**
HST (Rtd.), BPC
**Dr. Sathiyamoorthy, B.**
Asst. Prof. & Head of Tamil, Madurai Kamaraj University.

### Members

**Chidambaram, V.,** HM (Rtd.), GHSS, Kumarapuram, Palakkad.
**Dominic Savio, J.**, HST, SFXHS, Parisakkal, Palakkad.
**Hepsy Christinal, S.**, BPC, BRC Munnar, Idukki.
**Dr. Jayalekshmi, S.**, HM, GHSS, Devikulam, Idukki.
**Dr. Marikkannan, A.**, HST, TCNMGHSS, Nedumpara, Kazhuthurutty, Kollam.
**Dr. Nagaraj, G.**, HST, BRC Trainer, Parali BRC, Palakkad.
**Sheeba, M.**, HST, GHSS, Vagamon, Idukki.
**Soumya, S.**, HST, GHSS, Marayur, Idukki.
**Vijila Rani, M.**, HST, GTV & HSS, Chalai, Thiruvananthapuram.
**Bimal Kumar**, Drawing Teacher, Anchalamoodu, Kollam.
**Jessy, V.A.**, Drawing Teacher, St. Thomas HSS, Koorathund, Kozhikode.
**Lakesh, G.L.,** National HS, Vattoli, Kozhikode.
**Premjith Sureshbabu**, Nelolpana, Pakaloor, Thiruvananthapuram.
**Santhosh, K.**, Drawing Teacher, GHS, Neduva, Malappuram.

Academic Co-Ordinator

**Dr. Sahaya Dhas, D.**
Assistant Professor (Tamil), SCERT.

மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT)
வித்தியாபவன், பூஜப்புரை, திருவனந்தபுரம், 695 012

# உள்ளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| அலகு 1 | வருமுன் காப்போம் | 7 – 30 |
| | உணவே மருந்து | 8–14 |
| | துரிதம் தவிர் | 15 – 21 |
| | நோயின்றி வாழ் | 22 – 30 |
| அலகு 2 | சரி நிகராய் | 31 – 58 |
| | விடிவெள்ளி | 32 – 40 |
| | நிகரெனக் கொள்வதால் | 41 – 51 |
| | சாதனைப் பெண்மணிகள் | 52 – 58 |
| அலகு 3 | விண்ணைத் தொடுவோம் | 59 – 84 |
| | மனிதனைப்போல | 60 – 69 |
| | உள்ளங்கையில் உலகம் | 70 – 77 |
| | திரையினூடே | 78 – 84 |

# இந்திய அரசமைப்பு

## முகப்புரை

இந்திய மக்களாகிய நாம். இந்திய நாட்டினை இறையாண்மையும் சமநலச்சமுதாயமும் சமயச்சார்பின்மையும் மக்களாட்சிமுறையும் அமைந்ததொரு குடியரசாக நிறுவவும்.

அதன் குடிமக்கள் அனைவரும்

சமுதாய, பொருளியல், அரசியல் நீதி,
எண்ணம், அதன் வெளியீடு, கோட்பாடு,
சமயநம்பிக்கை, வழிபாடு இவற்றில் தன்னுரிமை,

சமுதாயப்படிநிலை, வாய்ப்புநலம் இவற்றில் சமன்மை
ஆகியவற்றை எய்திடச் செய்யவும்.

அவர்கள் அனைவரிடையேயும்
தனிமனிதனின் மாண்பு, நாட்டுமக்களின் ஒற்றுமை,
ஒருமைப்பாடு இவற்றை உறுதிப்படுத்தும்
உடன்பிறப்புரிமையினை வளர்க்கவும்

உள்ளார்ந்த உறுதியுடையராய்,

நம்முடைய அரசமைப்புப் பேரவையில், 1949 நவம்பர் இருபத்தாறாம் நாளாகிய இன்று, ஈங்கிதனால், இந்த அரசமைப்பினை ஏற்று, இயற்றி, நமக்கு நாமே வழங்கிக்கொள்கிறோம்.

அலகு 1

# வருமுன் காப்போம்



இயற்கை சார்ந்த உணவுகளை உட்கொள்வது உடல் ஆரோக்கியத்திற்கு நல்லது. வளமான எதிர்காலத்திற்கு ஆரோக்கியம் இன்றியமையாதது. "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்."

# உணவே மருந்து



## மீதூண் விரும்பேல்!



உண்பதே உடலைக் காக்க
    உணவையும் தேர்ந்தே உண்க!
எண்ணிற் கிலக்கம் போல
    இயங்கிட உடலும் தேவை!
எண்ணியே பொருந்த உண்ணின்
    எழில்மிகு உடலும் உண்டாம்!
கண்ணிற் கிமையைப் போல
    கனிகளும் உயிரைக் காக்கும்
பசித்திட உண்ணல் வேண்டும்!
    பயனுற உடலும் வேண்டும்
புசித்திடும் நல்லு ணவால்
    பொற்புடன் உடலி ருக்கும்!
நசித்திடும் உடலுக் கொவ்வா
    நலமிலா உணவை நீக்கிப்
புசிக்கிற காலம் மாறாப்
    பொருந்திட உண்ணல் வேண்டும்!
மிகுதியாய் உண்ணல் தீது
    மேவிடும் நோயால் கேடு

வெகுவாகச் செரிக்க உண்ணல்
　　வேண்டுநாள் வாழ்வாய் நீடு!
பகுத்திடும் உணவில் கூடப்
　　பற்பல சத்தொடு உண்க!
இகத்தினில் உணவே மருந்தாம்
　　ஏற்புடை உணவால் வாழ்க!

–ஜெ. சண்முகம்



**ஜெ. சண்முகம் :** ஜெகநாதன் சிவசண்முகம் 1901 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 24 ஆம் தேதி பிறந்தார். இவர் 1951 முதல் 1955 வரை சட்டமன்ற சபாநாயகராகப் பணியாற்றியுள்ளார். நேர்பட ஒழுகு என்ற நூலிலிருந்து மீதூண் விரும்பேல் என்ற கவிதை எடுக்கப்பட்டது. பல்வேறு ஆங்கில நூல்களையும் எழுதியுள்ளார். 1975 ஆம் ஆண்டு பிப்ரவரி 17 ஆம் தேதி மறைந்தார்.

## செயல்பாடுகள்

- "எண்ணிற் கிலக்கம் போல
  இயங்கிட உடலும் தேவை"
  
  இக்கவிதை வரியில் இடம்பெற்றுள்ள அணியைக் கண்டறிந்து விளக்கி எழுதுங்கள்.
- "மிகுதியாய் உண்ணல் தீது
  மேவிடும் நோயால் கேடு
  வெகுவாகச் செரிக்க உண்ணல்
  வேண்டு நாள் வாழ்வாய் நீடு"
  
  என்ற கவிதை வரிகளில் வெளிப்படும் கருத்தை விமர்சனம் செய்து எழுதுங்கள்.
- அளவுக்கு அதிகமாக உண்பதால் உடலுக்கு ஏற்படும் தீமைகளைக் கலந்துரையாடி வரிசைப்படுத்தி எழுதுங்கள்.

## சிறுதானிய லட்டுகள்

திண்டுக்கல் மாவட்டம், பழனி அருகே பழைய ஆயக்குடியைச் சேர்ந்தவர் இயற்கை விவசாயி கவிதா. இவர் பாரம்பரிய நெல் ரகங்களை இயற்கை விவசாயம் செய்து வருகிறார். மேலும் நரிப்பயறு, கம்பு, தினை, தட்டைப் பயறு, கேழ்வரகு, கொள்ளு உள்ளிட்ட சிறுதானிய வகைகளையும் பயிரிட்டு வருகிறார்.

இந்நிலையில் கோயம்புத்தூர் சரவணம்பட்டியில் இவரது அக்கா மகன் இல்லத் திருமண விழா நடந்தது. இவ் விழாவில் தாம்பூலப்



பைக்குப் பதிலாக, நரிப்பயறு லட்டு, கருப்புக் கவுனி லட்டு, தினை லட்டு, பாசிப்பயறு லட்டு, கேழ்வரகு லட்டு, கம்பு லட்டு, கடலை உருண்டை என ஏழு வகையான லட்டுகள் அடங்கிய பைகளைக் கொடுத்துள்ளார் கவிதா. இத்தகவல் இணையத்தில் பரவி மக்களிடையே நல்ல வரவேற்பைப் பெற, தாம்பூல லட்டு ஐடியா குறித்து அறிய கவிதாவிடம் பேசினோம்.

"என் கணவர் ரகு, மார்க்கெட்டிங் பணியிலும் நான் ஆசிரியப் பணியிலும் இருந்தோம். கடந்த 7 ஆண்டுகளுக்கு முன் எவ்வித முன் அனுபவமும் இல்லாத நிலையில் விவசாயத்தில் இறங்கினோம். அப்போது பயிர்களுக்குப் பூச்சி மருந்துகள் அடித்த எனக்கு உடல்நிலை சரியில்லாமல் போனது. இதனால் பூச்சி மருந்து, ரசாயன உரம் பயன்படுத்தாமல் இயற்கை முறையில் விவசாயம் செய்ய முடிவெடுத்தோம். அன்று முதல் எங்களுடைய 10 ஏக்கர் நிலத்தில் பாரம்பரிய நெல் ரகங்களைப் பயிரிட்டு வருகிறோம். மேலும் சிறுதானியங்களையும் விளைவித்து வருகிறோம்.

2023 ஆம் ஆண்டைச் சிறுதானிய ஆண்டாக அரசு அறிவித்திருக்கிறது. இதனால் பல்வேறு மாவட்டங்களிலும் பல்வேறு மாநிலங்களிலும் சிறுதானிய மதிப்புக் கூட்டப்பட்ட உணவுப் பொருள் கண்காட்சியை நடத்துகிறார்கள். இதை இயற்கை விவசாயிகளும் மக்களும் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். அதற்கு முதலில் சிறுதானிய உணவுகளைப் பயன்படுத்த மக்களைப் பழக்கப்படுத்த வேண்டும் என்ற எண்ணம் எழுந்தது.



உணவு முறையில் மிக முக்கியமானது சிறுதானியம். நம்முடைய பழமையான உணவில் சிறுதானியம் இருந்தது. நம் முன்னோர்கள் சிறுதானிய உணவுகளைச் சாப்பிட்டதால் உடல் வலிமையுடன் நல்ல ஆரோக்கியத்துடன் வாழ்ந்தார்கள். தற்போது பலருள்ளும் தினை எப்படி இருக்கும், வரகு எப்படி இருக்கும், கருப்புக் கவுனி அரிசி எல்லாம் எப்படி இருக்கும், நரிப்பயிறு எப்படி இருக்கும் என்ற கேள்வி எழுந்துள்ளது. பலரும் இப்படிப்பட்ட பயறு வகைகள் இருக்கிறதா? எனக் கேட்கிறார்கள்.

இதனால்தான் முதலில் உறவினர்கள்,





நண்பர்கள் கூடும் இடமான திருமண விழாவில் சிறுதானிய விழிப்புணர்வு ஏற்படுத்த முடிவெடுத்தேன். நாங்களே விளைவித்துச் சேமித்து வைத்திருந்த சிறுதானியங்களை அரைத்துப் பொடியாக்கிச் சலித்து, அதனுடன் நாங்கள் வளர்க்கும் நாட்டு மாடுகளில் இருந்து தயாரிக்கப்பட்ட நெய், மற்றும் நாட்டுச் சர்க்கரை கலந்த லட்டு வகைகளை இரண்டு நாட்களில் தயாரித்தேன்.

முதலில் என் அக்கா மகன் திருமண விழாவிற்கு வரும் எங்களுடைய உறவினர்கள், நண்பர்கள் என மொத்தம் ஆயிரம் பேருக்குக் கொடுக்க நினைத்தோம். ஆனால் ஆயிரம் பேருக்கு 7 வகையான லட்டுகளைத் தயாரிப்பது என்பது பெரும் சவாலான விஷயமாக இருந்தது. எங்களால் 400 பேருக்கு மட்டுமே கொடுக்க முடிந்தது.

லட்டுகள் பேக் செய்ய தயாரிக்கப்பட்டிருந்த பாக்ஸில் சிறுதானிய வகைகள் குறித்தும் நன்மைகள் குறித்தும் அச்சிட்டுக் கொடுத்தோம். திருமண விழாவில் பங்கேற்றவர்கள் இது புதுமையாக இருந்தது என்றும் அங்கேயே பாக்ஸைப் பிரித்துச் சாப்பிட்ட பலரும் இன்னும் கிடைக்குமா? எனவும் கேட்டனர். அவர்களுக்குச் சிறுதானிய பண்டத்தின் அருமையைக் கொண்டு சேர்த்திருக்கிறேன்.

சிறுதானிய விவசாயிகள் லாபம் இல்லை என வருந்த வேண்டாம். அதற்காக சிறுதானிய விவசாயத்தை விட்டு விலகிவிட வேண்டாம். அவர்கள் விளைவிக்கும் பொருட்களை மதிப்புக் கூட்டப்பட்டப் பொருள்களாக மாற்றி விற்பனை செய்தால் நல்ல லாபம் கிடைக்கும். இங்கு இயற்கை விவசாயிகள் மட்டும் உருவாகக் கூடாது, பாரம்பரிய நெல் ரகங்களையும் சிறுதானிய உணவுகளையும் பயன்படுத்தும் மக்களும் உருவாக வேண்டும். அதற்கான எனது சிறு முயற்சிக்கு நல்ல வரவேற்பு கிடைத்திருப்பதில் மகிழ்ச்சி" என்றார்.

– மு. கார்த்திக்

**மு. கார்த்திக் :** இயற்கை விவசாயி கவிதா அவர்களுடன் மு. கார்த்திக் என்பவர் நடத்திய உரையாடல், 2023 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வெளிவந்த ஆனந்த விகடனில் இடம் பெற்றுள்ளது.

## செயல்பாடுகள்

- உங்களுக்குத் தெரிந்த சிறு தானியங்களின் பெயர்களைப் பட்டியலிடுங்கள்.
- உங்கள் வட்டாரத்திலுள்ள இயற்கை விவசாயியிடம் நேர்காணல் காண்பதற்கான வினாக்களைத் தயாரியுங்கள்.
- பள்ளி உணவுத் திருவிழாவில் சிறப்பு விருந்தினராக இயற்கை விவசாயி கவிதா கலந்து கொள்கிறார். இந்நிகழ்வைப் பொதுமக்களுக்கு அறிவிக்கும் வகையில் சுவரொட்டி தயார் செய்யுங்கள்.

## இலக்கியங்களில் புஞ்சைப்பயிர்கள்

பண்டைய உணவுப் பண்பாட்டில் வரகரிசிச்சோறு முதன்மையான இடம் பெற்றுத் திகழ்ந்ததை ஔவையின் தனிப்பாடல் திரட்டு பதிவு செய்துள்ளது.

'வரகரிசிச் சோறும் வழுதுணங்காய் வாட்டும்
முரமுரென வேபுளித்த மோரும்– தரமுடனே
புல்வேளூர்ப் பூதன் புரிந்துவிருந் திட்டசோறு
எல்லா உலகும் பெறும்'

–தனிப்பாடல்

என்ற பாடலடியில் புல்வேளுரைச் சேர்ந்த பூதன் என்பவன் ஔவைக்கு உணவளித்த செய்தியைக் காணலாம். அவன் அளித்த விருந்து இவ்வுலகையே பரிசாக வழங்கியதற்கு ஒப்பானதாம். அப்படியென்றால் எந்த அளவிற்கு ஔவைப்பிராட்டிக்கு அவ்வுணவு சுவையானதாக இருந்திருக்கும்.

அதேபோன்று,

'கருங்கால் வரகே, இருங்கதிர்த் தினையே,
சிறுகொடிக் கொள்ளே, பொறிகிளர் அவரையொடு
இந்நான் கல்லது உணவும் இல்லை'

– புறநானூறு (335)

என்ற பாடலடியின் மூலம் சங்க இலக்கியப் புலவரான மாங்குடி கிழார் அன்றைய மானாவாரி உணவுத் தவசங்களையும், சங்க கால உணவு முறையினையும் நாம் அறியத் தருகிறார்.

'சிறுதினை கொய்யக் கவ்வை கறுப்பக்
கருங்கால் வரகின் இருங்குரல் புலர'

– மதுரைக்காஞ்சி (271–272)





என மதுரைக்காஞ்சி தினை குறித்தும் வரகு குறித்தும் சுட்டுகிறது,

குறுந்தொகையின் பெரும்பாலான பாடல்கள் தினை, சிறுதினை, தினைப்புலம் எனப் பல்வேறு வகையில் தினைப் பயிர் குறித்துக் குறிப்பிட்டுக் கூறுகின்றன.

'தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாகக்
கொள்வர் பயன்தெரி வார்'

–குறள் (104)

தினையளவு நன்மையை ஒருவர் செய்தாலும் கூட, அதனைப் பனையளவு கருத வேண்டும் என்று தினையை ஒப்பிட்டு உவமை கூறுகிறார் வள்ளுவர்.

சங்க இலக்கியத்திலும் சங்கம் மருவிய கால இலக்கியங்களிலும் புஞ்சைப் பயிர்கள் குறித்த குறிப்புகள் நிறையவே காணக் கிடக்கின்றன. இதன் வழியே அக்கால உணவுப் பண்பாட்டில் புஞ்சைத் தவசங்கள் பரவலான இடத்தைப் பெற்றுத் திகழ்ந்துள்ளன என்பதையும் அறிய முடிகிறது.

பாலையைத் தவிர்த்த நால்வகை நிலங்களையும் ஆண்ட மன்னர்கள் பற்றி சங்க காலத் தமிழிலக்கியங்கள் பலவும் விரித்துரைக்கின்றன. குறிஞ்சி நிலப்பகுதியைக் குறுநில மன்னர்களும் மருத நிலப்பகுதிகளை முதுகுடிமன்னர்களும் முல்லை நிலப் பகுதிகளைச் சீறூர் மன்னர்களும் ஆட்சி செய்தனர். பின்னர் மருத நிலப்பகுதிகளிலும் நெய்தல் நிலப்பகுதிகளிலும் தமது செல்வாக்கை நிலைநிறுத்தியவர்களே வேந்தர் என்ற நிலைக்கு உயர்கின்றனர். வரகு, தினை விளையும் புன்செய் நிலமே சீறூர் மன்னரின் வாழ்விடம். குடிகளோடு குடியாய் சீறூர் மன்னர் வாழ்ந்த செய்திகளும் சங்க இலக்கியங்களில் பாடப்பெற்றுள்ளன.

முப்பதாண்டுகளுக்கு முன்பு வரை தமிழகத்தில் புஞ்சைத் தவசங்களைச் சார்ந்தே மக்களின் உணவுப் பழக்க வழக்கங்கள் இருந்தன. பசுமைப்புரட்சிக்குப் பின்னர் அனைவரும் நெல்லரிசியை முதன்மையாகக் கொண்டு தங்களின் உணவுப் பழக்கத்தை மாற்றிக் கொண்டனர். நெல்லுச்சோறு உண்பவர்கள் சமூகத்தில் மேன்மை மிக்கவர்கள் என்ற கருத்துருவாக்கம் திட்டமிட்டுப் பரப்புதல் செய்யப்பட்டது. புஞ்சைத் தவசங்கள் உண்போர் மிகக் கீழானோர் என்ற கருத்துருவால் பின்னாளில் சிறுதானியப் பயன்பாடு பெருமளவு குறைவதற்குக் காரணமாய் அமைந்துவிட்டது. இதற்கு எடுத்துக்காட்டாக முப்பது ஆண்டுகளுக்கு முன்பு வந்த ஒரு திரைப்படத்தில் இடம் பெற்ற பாடலில் 'நித்தம் நித்தம் நெல்லுச்சோறு, நெய் மணக்கும் கத்தரிக்கா' என்ற சொற்றொடரை நோக்கலாம்.

'வரகரிசிச்சோறும் வழுதுணங்காய் வாட்டும்' (வழுதுணங்காய் – கத்தரிக்காய்) என்று அவ்வை பாடிய பாடல், ஈராயிரம் ஆண்டுகளுக்குப் பின்னர் மாற்றமடைந்துள்ளது.

நெல் மற்றும் கோதுமையில் இருக்கின்ற நுண்ணூட்டங்களைக் காட்டிலும், மிக அதிக புரதம், நார், தாது உப்புகள், இரும்பு, சுண்ணாம்பு போன்ற மனித உடலுக்குத் தேவையான அனைத்து விதமான சத்துக்களும் புஞ்சைத் தவசங்கள் என்றழைக்கப்படுகின்ற சிறு தானியங்களிலே நிறைந்துள்ளன.

ஒரு பயிரினச் சாகுபடியிலிருந்து பல பயிரினச் சாகுபடிக்கு மீண்டும் மாறினால்தான் இந்த மண்ணின் வளத்தையும் மக்களின் நலத்தையும் சூழல் காப்பையும் உறுதி செய்ய முடியும். நெல் அல்லது கோதுமை என்ற பசுமைப்புரட்சியின் ஒற்றைச் சிந்தனையிலிருந்து விடுபட்டு, வரகு, கேழ்வரகு, காடைக்கண்ணி, தினை, சாமை, குதிரைவாலி போன்ற பன்மய புஞ்சைத் தவசங்களுக்கு மாறியாக வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

இலக்கியங்களில் புஞ்சைப் பயிர்கள் என்னும் இக்கட்டுரை பல்லுயிர் ஓம்புவோம் என்னும் கட்டுரை தொகுப்பு நூலில் இடம்பெற்றுள்ளது. இதனை தானம் அறக்கட்டளை, மதுரை வெளியிட்டுள்ளது.

## செயல்பாடுகள்

- ஔவைக்கு வழங்கிய உணவு வகைகளை வரிசைப்படுத்துங்கள்.
- சங்க கால உணவு முறைகளைக் கலந்துரையாடிக் குறிப்பு எழுதுங்கள்.
- நமது அன்றாட வாழ்வில் சிறுதானியங்களை உட்படுத்த வேண்டிய தேவையினைச் சுட்டிக்காட்டி நண்பனுக்குக் கடிதம் எழுதுங்கள்.



# துரிதம் தவிர்



## மொறு.. மொறு,...

சுசீத்தின் பேண்ட் பாக்கெட்டின் இருபுறமும் புடைத்திருந்தன.

தனகோபால் கண்கள் விரியப்பார்த்தார்." என்னடா இது"

" இது புதுச் சட்டையப்பா"

" அதை நான் கேட்கலைடா .. பேண்ட்.."

" நீங்க தானே வாங்கப் பணம் குடுத்தீங்க"

" ரெண்டு பாக்கெட்லியும் நெறஞ்சு கெடக்குது"

" ரெண்டு பாக்கெட்லியும் மொறுமொறுதா அப்பா"

" பத்து ரூபா தானே குடுத்தேன்"

" ஒவ்வொரு பாக்கெட்டும் அஞ்சு ரூபாதான்ப்பா"

வலது புறத்திலிருந்து ஒன்றை எடுத்தான். நகத்தால் கீறினான். பொட்டலம் பட்டென்று உடைந்தது. பொட்டலத்தை உடைக்கும் அளவு நகம் கூர்மையாக வளர்ந்திருக்கிறதா? சட்டென பயம் ஏற்பட்டது தனகோபாலுக்கு.

"பாதி காத்தப்பா.. கொஞ்சந்தா மொறு மொறு இருக்கும்"

"செரிதா.. இதை எதுக்கு அடிக்கடி சாப்புடறே"



மிதிவண்டியை ஓட்டிச் சென்ற சிறுவன் ஒருவன் சுசீத்தைப் பார்த்தான். "என்ன மொறு மொறுவா.. என்ஜாய்" மிதிவண்டி விரைந்தது.

"அஞ்சு ரூபாக்கு உடனே கெடைக்குதப்பா.. வூட்லே திங்க என்ன இருக்கு"

"அதுக்கு இப்பிடியாடா"

"வேறெ?"

"எங்க சின்ன வயசிலெ"

"போப்பா.. எப்பப் பாத்தாலும் பிளாஷ்பேக்தா..!"

தனகோபாலின் சின்ன வயதில் வீட்டில் எப்போதும் ஏதாவது தின்பண்டம் இருக்கும். முறுக்கு, தட்டு வடை, ரவா உருண்டை, வேர்க்கடலை, பொரி, என்று ஏதாவது இருக்கும்.

பள்ளிக்குப் போய் விட்டு வந்தால் அம்மா தினமும் ஏதாவது தட்டில் போட்டு நீட்டுவார். ஒரு நாள் முறுக்கு, ஒரு நாள் பொரி, இன்னொரு நாள் ரவா உருண்டை என்று மாறி மாறித் தருவார்.

அவருக்குக் கை முறுக்கு ரொம்பவும் பிடிக்கும்.

"கை முறுக்கு எப்பம்மா சுடுவே"

"நேரம் கெடைக்கற போது பண்ணித் தருவன். பண்ணி வைக்கறண்டா"

"எப்போ"?

"சனி, ஞாயிறு லீவு வர்றப்போ பண்ணி வைக்கறேன் "அம்மா அலுவலக வேலை என்று அலைவாள். ஞாயிறு ஓய்வு தினத்தில் நிறைய வேலைகள் அமைந்து விடும். தனகோபால் கேட்கிறான் என்று நேரம் ஒதுக்கிச் செய்து தருவாள். பாட்டியும் உதவி செய்வாள். பாட்டி தானியம் புடைக்கும் முறத்தைத் திருப்பிப் போடுவாள். கலந்து வைத்த மாவை உருட்டிக் கொள்வாள். முறத்தின் பின் புறத்தில் ஏழு சுற்றுக் கைமுறுக்கைப் பிழிவாள். வெகுவிரைவாய் சுற்றுவாள். சட்டென முறத்தில் முறுக்கு விழும். பார்த்துச் சிரிக்கும். என்ன மாயாஜாலம் என்று சொல்வார் தனகோபால்.

பாட்டி இருக்கிற வரைக்கும் காரச் சேவு, தேன்குழல், சீடை, கைமுறுக்கு,







பக்கோடா, ரிப்பன் பக்கோடா என்று வகை வகையாய்ச் செய்வாள். நொறுக்குத் தீனி செய்வதில் எக்ஸ்பர்ட் பாட்டி.

"ரிப்பன் பக்கோடா தெரியுமா?"

"ஊதா கலர் ரிப்பன்தா தெரியும்ப்பா.. ஊதா கலர் ரிப்பன் பாட்டு"

"நல்ல கதைதா போ." அம்மாவிடம் நச்சரித்துக் கொண்டே இருப்பான். "என்னம்மா.. பாட்டி இருக்கறப்போ செஞ்சு தந்தாங்களே"

"இப்போ அவங்க இல்லியே"

"செரி.. செரி.. பாட்டியை நெனச்சு அழுகாதே"

"பாட்டி வீட்லெ இருந்தாங்க. நேரம் கெடச்சது. நாந்தா வேலைக்குப் போக வேண்டியிருக்கே.. நேரம் கெடைக்கற தில்லையே"

தனகோபாலின் சின்ன வயதில் வீட்டில் வகைவகையாய்த் தின்பண்டங்கள், நொறுக்குத் தீனிகள் இருக்கும். டப்பாவில் அடைபட்டுக் கிடக்கும். இதைத் தவிர எள் உருண்டை, தட்டுவடை, ஜிலேபி என்று சாப்பிடக் கிடைக்கும் .

பக்கத்து வீடுகளில் செய்யும் பலகாரங்களும் வீட்டிற்கு வரும். இங்கிருப்பதும் பக்கத்து வீடுகளுக்குச் செல்லும். நல்ல நாட்கள், திருவிழா என்று வருகிற நாட்களில் பலகாரங்கள் பரிமாறிக் கொள்ளப்படுவது சாதாரணம்.

இப்போது எல்லாம் மாறி விட்டது. எல்லாம் வீட்டிற்கு எதிரில் உள்ள கடைகளில் கிடைக்கின்றன. வகை வகையாய் இருக்கும்.

ஐந்து ரூபாய், பத்து ரூபாய்க்கு என்று கிடைக்கின்றன. பணம் வாங்கிக் கொண்டு சுசீத் சட்டென கடைக்குள் நுழைந்து விடுவான். திருப்தியானவன் போல் எதையாவது வாங்கிக் கொண்டு திரும்புவான்.

"இதெல்லா ஒடம்புக்கு ஆகாது சுசீத்"

"எதுதா ஒடம்புக்கு ஆகும்கறேப்பா. பாலும் கூட வேண்டாங்கறே.. மில்க் சைலண்ட் கில்லர்ங்கறே"

"ஒடம்புக்கு எது தேவையோ அது போதும். இதெல்லா வேண்டாடா.. உங்க மாமா பொண்ணு ஹேமா போன வாரம் ஒடம்புக்குச் செரியில்லாமப் போனப்போ என்ன சொன்னார் டாக்டர்ன்னு கேட்டுட்டுதானே இருந்தே.."

ஹேமாவைப் பார்க்க அவனும் மருத்துவமனைக்குச் சென்றிருந்தான்.

"பசி எடுக்காது.. சரியா உணவு வயித்திலெ ஜீரணம் ஆகாது . உடம்புலெ சத்து சேராது. உடல் நோய் எதிர்ப்பாற்றல் கொறையும். வாய்ப்புண்,

வயிற்றுப்புண், தோல் வியாதியெல்லாம் வரும். தவிர்க்க வேண்டும்" என்றார் மருத்துவர்.

"நான் நல்லாத்தானே இருக்கேன்."

"இப்போ நல்லாத்தான் இருப்பே. ஆனா இதெயெல்லா சாப்புட்டுட்டு இருந்தா எப்போ கெடுதி பண்ணுமுன்னு தெரியாது."

தனகோபால் அவனின் கையிலிருந்த பொட்டலத்தைப் பார்த்தார். சிப்ஸ் வகையறாக்கள் கோணல்மாணலாய் இருந்தன. ரொம்பவும் ருசியாகத்தான் இருக்கும். மொறுமொறுவென்று இருக்கும். விதவிதமான மசலாப்பொடிகள், வர்ணம் கொடுக்கும் பொடிகள், உப்பு, சுவையூட்டிகள், மணமூட்டிகள், ரசாயனங்கள், கொஞ்ச நாள் கெட்டுப் போகாதிருக்க வேதி உப்புகள் எல்லாம் சேர்ந்து 200 டிகிரிக்கு மேலுள்ள சூட்டில் வறுத்து எடுக்கப்படும். அதன் பின் இந்த மொறுமொறு ருசி வந்து விடும்.

"ரசாயனப் பொருட்கள் மொறுமொறுன்னு வர்றதுக்கு நெறைய சேக்கறாங்க. அது ஒடம்புக்கு நல்லதல்ல சுசீத்"

"ரொம்பதா பயமுறுத்துறீங்க அப்பா"

"உண்மைதாண்டா, நோய் எதிர்ப்புச் சக்தி முழுசா இல்லாமெப் போகும் இதையெல்லாம் தின்னா நல்ல புரதம் கூட அழிஞ்சு நரம்புகளைப் பாதிக்கும். மோசமானப் புரதங்களா மாறிடும். ஒடம்புக்கு நல்லதில்லெ"

பொட்டலத்தில் இருந்தவற்றைக் கையில் எடுத்துப் பார்த்தான் சுசீத். வழுவழுவென்று இருந்தது. கார மிளகாய்த் தூள்களாய் மின்னியது. அதன் வினோத உருவங்கள் கவர்ச்சியாக இருந்தன.

"ரொம்பவும் பயப்பட வைக்கறப்பா.. நானும் யோசிக்க வேண்டியிருக்கு". பிரித்திருந்த பொட்டலத்தை மடக்கி உள்ளங்கைக்குள் அடக்கிக் கொண்டான். உள்ளங்கையையே பார்த்துக் கொண்டிருந்தான்.

"நீங்க பயப்படறதிலெ அர்த்தம் இருக்கு.. நானும் பயப்பட வேண்டியிருக்கு.. சரிதா.. புரிஞ்சுக்க முயற்சி பண்றேன்"

– சுப்ரபாரதி மணியன்



**சுப்ரபாரதி மணியன் :** இவர் 1955 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் திருப்பூரில் பிறந்தார். சாயத்திரை, தேநீர் இடைவேளை, சப்பரம் போன்ற நாவல்களையும் அப்பா, ஆழம், வேட்டை போன்ற சிறுகதைத் தொகுப்புகளையும் வெளியிட்டுள்ளார். தமிழக அரசின் சிறந்த நாவலுக்கான விருது, கதா விருது, திருப்பூர் கலைமாமணி விருது போன்ற பல விருதுகளைப் பெற்றுள்ளார்.

### செயல்பாடுகள்

- 'மொறு மொறு' சிறுகதையில் இடம் பெறும் சுசீத் என்ற கதாபாத்திரத்தை விமர்சனம் செய்து எழுதுங்கள்.
- இன்று கடைகளில் விற்கப்படும் தின்பண்டங்களைத் தின்பதால் ஏற்படும் விளைவுகளைக் கலந்துரையாடி குறிப்பாக எழுதுங்கள்.
- "நீங்க பயப்படறதிலெ அர்த்தம் இருக்கு நானும் பயப்பட வேண்டியிருக்கு சரிதா ... புரிஞ்சுக்க முயற்சி பண்றேன்" – இப்பகுதியைத் தூயதமிழ் நடையில் எழுதுங்கள்.

## எதிரிகள் ஆகும் துரித உணவு!

கடந்த கால் நூற்றாண்டில் நம் உணவுப் பண்பாடு நிறைய மாறிவிட்டது. இந்திய மரபு உணவை மறந்துகொண்டிருக்கிறோம். கண்ணைக் கவரும் நிறம், மூக்கைத் துளைக்கும் மணம், நாவைச் சொக்க வைக்கும் ருசி, சமைப்பது எளிது, சமைக்கும் நேரம் குறைவு போன்ற காரணிகளால் துரித உணவு வகைகள் அட்டைபோல் நம்முடன் ஒட்டிக் கொண்டுவிட்டன.

இன்றைய இயந்திர கதியிலான வாழ்க்கை முறையில் துரித உணவை நம்மால் தள்ளிவைக்க முடியவில்லை. இந்த அந்நிய உணவு வகைகளால் ஆரோக்கியத்துக்கு ஆபத்து எனத் தெரிந்தே அதிக இடம் கொடுத்துவிட்டோம் என்பதுதான் துயரம்.

### துரித உணவுக்கு நாம் ஏன் அடிமையாகிறோம்?

நாகரிகமாகச் சாப்பிட வேண்டும் என்ற விருப்பம் ஒருபுறம் இருக்க, வித்தியாசமான ருசிக்கு ஏங்குவதுதான் இதற்கு முக்கியக் காரணம். இந்த ஏக்கம் எந்த வயதிலும் வரலாம். அப்படி ஆட்படும்போதுதான் அதிக இனிப்பு, உப்பு, காரம், மசாலா, காஃபின், ஆல்கஹால் போன்றவற்றைத் தேடிச் செல்கிறோம். வழக்கமான வீட்டு உணவு வகைகளில் இவை அளவோடுதான் இருக்கும்.

துரித உணவு வகைகளில் இவை தூக்கலாகவே இருக்கும். அதனாலேயே அவற்றைச் சாப்பிட்டதும் வயிறு நிரம்பிய உணர்வையும் பசி அடங்கிய திருப்தியையும் அடைகிறோம். இவற்றிலுள்ள வேதிப் பொருட்கள் போதை ஊட்டுபவை. நாம் அடிக்கடி இவற்றைச் சாப்பிட விரும்புவதற்கு இதுவும் ஒரு காரணம்.

இன்றைய வாழ்க்கை முறை மன அழுத்தம் மிகுந்ததாக மாறிவிட்டது. நாம் மன அழுத்தத்துக்கு ஆட்படும்போதெல்லாம் உடலில் மகிழ்ச்சியைத் தூண்டக்கூடிய செரட்டோனின் ஹார்மோன் மிகவும் குறைந்துவிடுகிறது. அப்போது நாம் மகிழ்ச்சியான சூழலுக்கு மாறிக்கொள்ள விரும்புகிறோம்.

அதற்குத் துரித உணவு வகைகளே உடனடியாக உதவிக்கு வருகின்றன. நாம் மிகவும் விரும்பிச் சாப்பிடும் இந்த உணவு வகைகள் மனதுக்கு மகிழ்ச்சியையும் வயிற்றுக்குத் திருப்தியையும் தருகின்றன. அதேநேரத்தில், இந்த உணவு வகைகளில் குவிந்திருக்கும் உப்பும்



இனிப்பும் கொழுப்பும் நமக்கு வெகு சீக்கிரத்தில் 'நோயாளிப் பட்டத்தை' வழங்குகின்றன என்பதை மறந்துவிடுகிறோம்.

### துரித உணவு நம் எதிரியாவது ஏன்?

பெரும்பாலான துரித உணவு வகைகள் பதப்படுத்தப்பட்டவையாகவே இருக்கின்றன. அவை நீண்ட நாட்களுக்குக் கெட்டுப்போகாமல் இருப்பதற்கு அவற்றில் கலக்கப்படும் உப்பும் பல வேதிப் பொருட்களும் நம் ஆரோக்கியத்தையே அசைத்துப் பார்க்கும் தன்மை உடையவை. அவற்றில் ஊட்டச்சத்து அவ்வளவாக இல்லை; கொழுப்பும் கலோரிகளுமே அதிகம். இதனால் உடல் எடை கூடும்.

அப்போது உயர் ரத்த அழுத்தம், நீரிழிவு மட்டுமல்லாமல், ஆஸ்துமா உள்ளிட்ட சுவாசத்தடை நோய்களும் ஆரம்பிக்கும். பேக்கரி பண்டங்கள், ஃபிரஞ்சு ஃபிரை, பீட்சா, பர்கர், பேஸ்ட்ரி, குக்கீஸ், கிராக்கர்ஸ் போன்ற நொறுக்குத் தீனிகளில் ஊடுகொழுப்பு (Trans fat) அதிகம்.

இது கெட்ட கொலஸ்ட்ராலைக் கூட்டும். இது இதயத்துக்கு ஆபத்து. அப்போது மாரடைப்பு ஏற்படும். இதேப்போல், மூளைக்கு ரத்தம் பாய்வது தடைபடும்; பக்கவாதம் வரும். துரித உணவு வகைகளில் உள்ள தாலேட் எனும் வேதிப் பொருள் பெண்கள் கர்ப்பமாவதற்குத் தடை போடுகிறது; குழந்தைகளுக்குப் பிறவி ஊனம் ஏற்படுவதற்குக் காரணமாகிறது. ஆண்களுக்கு மலட்டுத்தன்மையை ஏற்படுத்துகிறது. இளமையிலேயே எலும்புகள் பலவீனம் ஆவதற்கும் பி.சி.ஓ.டி. போன்ற பல பிரச்சினைக்கும் துரித உணவுகள் பாலம் அமைக்கின்றன.

### ஒதுக்கப்படும் நார்ச்சத்து!

நம் ஆரோக்கியம் காக்கும் உணவுச் சத்துகளில் நார்ச்சத்துக்கு அதிக இடமுண்டு. இந்த நார்ச்சத்து உணவுச் செரிமானத்துக்கு உதவுகிறது; மலச்சிக்கலைப் போக்குகிறது; புற்றுநோய் வராமல் தடுக்கிறது; சர்க்கரை நோயாளிகளுக்கு ரத்தச் சர்க்கரை அதிகமாகாமல் பார்த்துக்கொள்கிறது; ரத்தத்தில் கொழுப்பு சேருவதையும் தடுக்கிறது.

இது முழுத் தானியங்கள், காய்கறிகள், பழங்கள் ஆகியவற்றில்தான் இருக்கிறது. உதாரணத்துக்கு, கோதுமை, கேழ்வரகு, கொள்ளு, கீரை, வாழைத்தண்டு, முட்டைக்கோஸ், காலிஃபிளவர், புடலங்காய், பாகற்காய், சுண்டைக்காய், கொய்யாப்பழம், அத்திப்பழம் போன்றவற்றைச் சொல்லலாம்.

தவிர, மஞ்சள், மிளகு, வெந்தயம், சீரகம், லவங்கம், ஓமம், கொத்துமல்லி, மிளகாய் போன்ற உணவுத் தயாரிப்புப் பொருட்களிலும் இருக்கிறது. ஆனால், இன்றைய தலைமுறையினர் காய்கறிகளைக் குறைவாகவே சாப்பிடுகிறார்கள். அவர்கள் சாப்பிடும் துரித உணவு வகைகளிலும் நொறுக்குத் தீனிகளிலும் நார்ச்சத்து சிறிதுகூட இல்லை. ஊட்டச்சத்தின் இடத்தை துரித உணவுகள் ஆட்கொண்டு விடுவதால், இளமையிலேயே





உயர் ரத்த அழுத்தம், நீரிழிவு, உடற்பருமன், புற்றுநோய் போன்றவை இடம் பிடிக்கின்றன.

### துரித உணவுகள் விஷயத்தில் பெற்றோர் என்ன செய்ய வேண்டும்?

துரித உணவு வகைகளுக்கு, அதிகமாக அடிமையாவது குழந்தைகள் தானே! ஏற்கெனவே இன்றைய குழந்தைகளுக்கு விளையாடும் நேரம் குறைந்துவிட்டது. தொலைக்காட்சி, அலைபேசி என அமர்ந்த இடத்திலேயே பொழுதைக் கழிக்கின்றனர். இதனால் அவர்களுக்கு உடற்பயிற்சி என்பதே இல்லாமல் போகிறது. இதனுடன் பீட்சா, பர்கர், பரோட்டா, சிப்ஸ், நூடுல்ஸ், பானிபூரி போன்ற துரித உணவு வகைகளும் சேருவதால், குழந்தைப் பருவத்திலேயே உடற்பருமனால் அவதிப்படுகின்றனர்.

இவர்கள் துரித உணவைச் சாப்பிட்டதும் செயற்கைக் குளிர்பானங்களையும் குடிக்கின்றனர். அவற்றில் செயற்கை இனிப்புகளும், ஆரோக்கியத்தைக் கெடுக்கும் வேதிப் பொருட்களும் அதிகம். உதாரணத்துக்கு, ஒரு புட்டியில் 8 தேக்கரண்டி சர்க்கரை இருக்கிறது. இது 40 கிராம் சர்க்கரைக்குச் சமம். குளிர்பானம் குடிப்பது அன்றாடப் பழக்கமாக மாறினால், இளமையிலேயே நீரிழிவு ஏற்படுவதைத் தடுக்க முடியாது.

நம் பாரம்பரிய உணவு வகைகளைச் சாப்பிடும் வழக்கம் உள்ளவர்களுக்கு இப்படிக் குளிர்பானங்களைக் குடிக்கும் வழக்கம் இருக்காது. ஆகவே, நம் முன்னோர் பின்பற்றிய உணவு வகைகளையே நம் குழந்தைகளும் பின்பற்றுவதற்குப் பெற்றோர்தான் வழிவகை செய்ய வேண்டும். குழந்தைகள் உடற்பயிற்சி செய்வதையும் விளையாடுவதையும் ஊக்கப்படுத்த வேண்டும்.

–டாக்டர் கு. கணேசன்

## செயல்பாடுகள்

- பண்டைய கால, தற்கால உணவு முறைகளை ஒப்பிட்டுக் குறிப்பாக எழுதுங்கள்.
- இன்றைய தலைமுறையும் துரித உணவுகளும் என்ற தலைப்பில் சொற்பொழிவுரை தயார் செய்யுங்கள்.
- துரித உணவின் தீமைகளைக் கலந்துரையாடிக் குறிப்பாக எழுதுங்கள்.



# நோயின்றி வாழ்



## மனம்தான் காரணம்

"பிசிராந்தையாரே! உமக்கு என்ன ஐயா வயது இப்போது?"

"ஏன்? எவ்வளவு இருக்கலாம் என்று நீங்கள்தான் ஒரு மதிப்புப் போட்டுச் சொல்லுங்களேன் பார்ப்போம்?" தம்மிடம் கேள்வி கேட்ட புலவர்களைப் பார்த்து எதிர்க் கேள்வி போட்டார் பிசிராந்தையார்.

"உம்மைப் பார்த்தால் முப்பது அல்லது முப்பத்தைந்து வயதுக்குமேல் மதிக்க முடியாது!"

"நிஜம்தானா?"

"சந்தேகமென்ன? அதற்குமேல் மதிப்பதற்கு உம்முடைய தோற்றம் இடங்கொடுக்காது!"

"என் உண்மை வயதுக்கும் நீங்கள் கூறுவதற்கும் நிறைய வித்தியாசம் இருக்கும் போலிருக்கிறதே?"

"அப்படியானால் உம்முடைய உண்மை வயதுதான் என்ன? சொல்லுமேன்!"





"சொல்லட்டுமா? நான்சொன்னால் நீங்கள் நம்ப மாட்டீர்களே? பொய் சொல்கிறேன் என்பீர்கள்!"

"பரவாயில்லை! சொல்லுங்கள்..."

"இப்போது எனக்கு அறுபத்தெட்டாவது வயது நடக்கின்றது."

"என்ன? அறுபத்தெட்டா? நாங்கள் ஆச்சரியப்பட வேண்டுமென்பதற்காக வேண்டுமென்றே பொய் சொல்கிறீரா?"

"நான் நிஜத்தைத்தான் சொல்கின்றேன். உங்களால் நம்ப முடியவில்லை என்றால் அதற்காக நான் என்ன செய்ய முடியும்?"

"எப்படி ஐயா நம்ப முடியும்? தலை சிறிதுகூட நரைக்கவில்லை. தோலிலும் தசையிலும் கொஞ்சம்கூட சுருக்கம் விழக்காணோம். இருபத்தைந்து வயது வாலிபன் மாதிரிக் குடுகுடு என்று நடக்கிறீர். கண்கள் தாமரை இதழ்களைப்போல மலர்ச்சியும் ஒளியும் குன்றாமல் இருக்கின்றன. உமக்கு அறுபது வயதுக்கு மேல் ஆகிவிட்டதென்றால் படைத்தவனே வந்து சத்தியம் பண்ணினாலும் நம்ப முடியாதே ஐயா!"

"நம்ப முடியாவிட்டால் என்ன? உண்மையைப் பொய்யாக மாற்றிவிடவா முடியும்?"

"முடியாது என்றாலும் காரணத்தைத் தெரிந்து கொள்ளலாமல்லவா?"

"காரணம் என்னவோ சர்வ சாதாரணமானது தான்!"

"இல்லை பிசிராந்தையாரே! இந்த அழியா இளமையின் காரணம் ஏதோ பெரிய இரகசியமாகத்தான் இருக்கவேண்டும். சர்வ சாதாரணமாக இருக்க முடியாது."

"என் மனைவி மாட்சிமை நிரம்பியவள். எனக்கு மக்களும் உள்ளனர். அவர்கள் அறிவு நிரம்பிய மக்கள். என்னுடைய ஏவலாளர்கள் ஒருபோதும் என் கருத்துக்கு மாறாக நடந்து கொண்டதில்லை. எம்நாட்டு அரசன் தீமை புரியாத நல்வழியில் நடக்கிறான். சான்றோர்கள் நிறைந்த நல்ல ஊரில் நான் வாழ்கிறேன்!"

"அது சரி! இவைகளுக்கும் உம்முடைய இளமைக்கும் என்ன ஐயா சம்பந்தம்?"

"சம்பந்தம் இருப்பதனால்தான் சொல்லுகிறேன்!"

"அந்தச் சம்பந்தம் எங்களுக்குப் புரியவில்லையே?"

"புரியாதுதான்! புரிய வைக்கிறேன்! கேளும்."

"சொல்லுங்கள்! கேட்கிறேன்."

"உடல் மூப்பு அடைவதும் அடையாததும் மனத்தைப் பொறுத்து அமைகின்றது. கவலைகள் குறைந்து மனம் உற்சாகமாக இருந்தால், ஒருவனுடைய உடலும் உற்சாகமாக இருக்கிறது. எனக்கு மனைவியாலும் கவலை இல்லை மக்களாலும் கவலை இல்லை. ஏவலாளர்களாலும் கவலை இல்லை. என் நாட்டு அரசாட்சியினாலும் கவலை இல்லை. என்னைச் சுற்றி வாழுகின்றவர்களாலும் கவலை இல்லை. சான்றோர்களின் அறிவைப் பருகி என் மனம் புஷ்டியாக இருக்கிறது. ஆகவே இளமை நிறைந்து இருக்கிறது."

"அப்புறம்.."

"மனம் நரைக்கவில்லை; திரைக்கவில்லை; சுருங்கவில்லை; தளரவில்லை; தாழவில்லை! அதனால், உடலும் நரை திரை சுருக்கம், மூப்பு, முதிர்ச்சிக்கு ஆளாகவில்லை. இப்போது புரிகிறதா புதிர்?"

"புதிர் புரிகிறது! ஆனாலும், உம்முடைய இளமை அதிசயமானது! அற்புதமானது! அறுபத்தெட்டு வயதை முப்பது வயதாகக் காட்டும் அளவிற்கு உயரியது."

"ஏதோ, என் பாக்கியம்! இதை நினைத்து நான் ஒரேயடியாகப் பெருமைப்படுவதில்லை!"

"பெருமை, சிறுமை உணர்வுகளை வென்றதனால்தானே நீர் இந்த இளமையைக் காப்பாற்றுகிறீர்."

"இருக்கலாம்!" பிசிராந்தையார் வேண்டா வெறுப்பாகப் பதில் கூறினார்.

சந்தேகமென்ன? இளமைக்கு மனம்தான் காரணம்!

"யாண்டு பலவாக நரையில ஆகுதல்
யாங்கு ஆகியர்என வினவுதிர் ஆயின்
மாண்டஎன் மனைவியொடு மக்களும் நிரம்பினர்
யான்கண் டனையர் என் இளையரும் வேந்தனும்
அல்லவை செய்யான் காக்கும் அதன்தலை
ஆன்றவிந் தடங்கிய கொள்கைச்
சான்றோர் பலர்யான் வாழும் ஊரே!"

(புறநானூறு 191)

–நா. பார்த்தசாரதி



**நா. பார்த்தசாரதி :** இவர் 1932 ஆம் ஆண்டு டிசம்பர் 18 ஆம் தேதி விருதுநகர் மாவட்டம் சிவகாசி வட்டத்தில் பிறந்தார். குறிஞ்சி மலர், பொன்விலங்கு, மலைச்சிகரம் போன்ற நாவல்களையும், நா. பார்த்தசாரதியின் சிறுகதைகள், தமிழ் இலக்கிய கதைகள் போன்ற சிறுகதைத் தொகுப்புகளையும் வெளியிட்டுள்ளார். சமுதாய வீதி என்னும் இவருடைய நாவலுக்கு சாகித்ய அகாதமி விருது கிடைத்தது. நம் பாடப்பகுதியில் இடம் பெற்றுள்ள கட்டுரை புறநானூற்றுச் சிறுகதைகள் என்னும் தொகுப்பில் இடம் பெற்றுள்ளது.

## செயல்பாடுகள்

- பிசிராந்தையாருக்கு வயதாகியும் இளமையாகக் காட்சியளிப்பதற்கான காரணங்களைக் குறிப்பாக எழுதுங்கள்.
- மனிதர்கள் ஆரோக்கியமாக வாழ்வதற்குக் காரணம் உடல் நலமே!/ மன நலமே! என்னும் தலைப்பில் நடைபெறும் விவாத அரங்கிற்கு விவாதக் குறிப்பு தயார் செய்யுங்கள்.
- உலகச் சுகாதார நாளன்று 'மனமே மனித சக்தி' என்னும் தலைப்பில் வெ. இறையன்பு சிறப்புரை நிகழ்த்தவுள்ளார். இதற்கான சுவரொட்டி தயார் செய்யுங்கள்.

## தன் நோய்க்குத் தானே மருந்து

"உற்ற நோய்நீக்கி உறாஅமை முற்காக்கும்
பெற்றியார் பேணிக் கொளல்"

வந்த நோய் நீக்கி, நோய் வராமல் முன்னரே காக்கவல்ல பேறு பெற்றவர்களைப் போற்றித் துணையாகக் கொள்ள வேண்டும் என்கிறது திருக்குறள்.

"வருமுன் பாதுகாப்பது நலம்" என்பதே இதன் பொருளாகும்.

உடம்பார் அழியின் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன், உயிர் வளர்த்தேனே'

உடம்புக்குக் குறைபாடு ஏற்படின் உள்ளமும் சேர்ந்து மாறுபடும் என்பது திருமூலர் வாக்கு.

யோக சாதனைக்குள் நுழைந்து விட்டால் உடம்பினுள் பல உயரிய மாற்றங்கள் ஏற்படும். தெளிவான, அமைதியான மனநிலையைப் பெறுவதே யோகத்தின் குறிக்கோளாகும். யோகிகள், உடம்பு என்பது உண்மையை அறிந்து கொள்வதற்குரிய சிறந்த சாதனம் என்கிறார்கள். வளமாக வயதைக் கடக்க இளமையில் யோகத்தை மேற்கொள்ள வேண்டும்.

யோகப் பயிற்சி அனைத்தும் விஞ்ஞானத்தின் செயல் முறையாகும். மருத்துவர்களும் உளவியல் வல்லுநர்களும் இதன் மாபெரும் சக்தியை அளவிட முடியாது என்கிறார்கள். யோகத்தின் எட்டு நெறி முறைகளை திருமந்திரம் விரித்துக் காட்டுகிறது.

"இயமம் நியமமே எண்ணிலா ஆதனம்
நயமுறு பிராணாயாமம் பிரத்தியாகாரஞ்
சயமிகு தாரணை தியானஞ்சமாதி
அயமுறு மட்டாங்கம் ஆவதுமாமே"



இயமம், நியமம். பலவகைப்பட்ட ஆசனம், பிராணாயாமம் பிரத்தியாகாரம். தாரணை, தியானம், சமாதி என்பவை எட்டுவகை யோக நெறிகள். இதில், பிராணாயாமம் அல்லது மூச்சுக்கட்டுப்பாடு முக்கியமானதாகும். அகமுக வளர்ச்சிக்குப் பெரிதும் உறுதுணை ஆவது பிரணாயாமமே. பிராணன் என்றால் காற்று, மூச்சு, வளி என்று பொருள். பிரணாயாமம் என்பது பதஞ்சலி முனிவரைப் பொறுத்தவரை காற்றை வெளியே விட்டு உள்ளிழுத்து சிறிது நேரம் அடக்குவதேயாகும்.

பிராணன் என்பது மூச்சல்ல. அது ஒரு சக்தி. பிராணாயாமத்தால் உடலின் வெவ்வேறு இயக்கங்களையும் நரம்பு ஓட்டங்களையும் அடக்கி ஆளலாம். மூலாதாரத்தில் தொடங்கி மூளை வரை செல்லும் முதுகுத்தண்டில் சக்கர மையங்கள் உள்ளன. பிராணாயாமத்தால் அனைத்து சக்கர மையங்களும் ஒழுங்கான செயல்பாட்டிற்கு வரும். அதன் ஆற்றல் அதிகரிக்கும். அதனால் உடலில் செல்லும் உணர்ச்சி ஓட்டங்களை வசப்படுத்தலாம். பிராணாயாமம் மேற்கொண்டால் மூளையில் அறிவுப் பூர்வமான பாதை ஏற்பட்டு, புது எண்ணங்கள் தோன்றும். பிராணாயாமம், நுரையீரல்களின் இயக்கத்தைக் கட்டுப்படுத்திச் சிறிது சிறிதாக அந்த இயக்கம் உடலில் உள்ள எல்லா தசைகளையும் அடக்கி ஆளும்.

**பயிற்சியின் போது உட்காரும் முறை:**

பிராணாயாமம் செய்யும் இடம் தூய்மையானதாகவும் வசதியாகவும் இருக்க வேண்டும். முதலில் நிமிர்ந்து உறுதியாக உட்கார வேண்டும். முதுகெலும்பு நிமிர்ந்திருக்கும்படி வைத்துக் கொள்ள வேண்டும். மார்பு, தலை இவை நேர்கோட்டில் இருக்குமாறு அமர்ந்திருக்க வேண்டும். மார்பு வளைந்திருந்தால், உயர்ந்த சிந்தனைகள் தோன்றாது. முக்கியமாக தனிமையான இடத்தைத் தேர்ந்தெடுக்க வேண்டும். பயிற்சிக்குச் சாதகமான சூழலை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். அதிகாலையும் மாலையும் பயிற்சிக்கு உகந்த வேளையாகும். பயிற்சிக்கு முன்னர் உணவு அருந்துவது நல்லதல்ல. முக்கியமாக நம்பிக்கையோடும் குருவின் துணையோடும் பயிற்சியை ஆரம்பிக்க வேண்டும். எந்த ஒரு யோகப் பயிற்சியையும் குருவின் துணையின்றிச் செய்தால் பலனின்றிப் போய்விடும்.

பிராணாயாமப் பயிற்சியைத் தொடங்குவதற்கு முன்னர் நாடிகள் தூய்மைப்படுத்தப்பட வேண்டும்.

முதலில் அளவாக மூச்சை உள்ளே இழுத்து, வெளியே விடக் கற்றுக் கொள்வது தான் முதல் பாடம். காற்றை சுவாசிக்கும் பொழுது அதை வாசிக்க வேண்டும். சுவாசத்தை உள்ளே இழுக்கும் பொழுதும் வெளியேவிடும் பொழுதும் முழுக் கவனத்தையும் அதில் செலுத்த வேண்டும். இது உடலை ஒழுங்கு நிலைக்குக் கொண்டு வரும். உடல் முழுவதும் ஒருவித லயத்திற்கு வசப்படும். அந்த சுவாசமே நமக்கு நல்ல

ஓய்வைத் தரும். களைப்புடன் இருக்கும் நரம்புகள், அமைதி அடையும். சில மாதப் பயிற்சியிலேயே நல்ல அறிகுறிகள் தோன்றும். இந்த ஆரம்பப் பயிற்சிக்குப் பின்னரே, பிராணாயாமத்தின் உயர்ந்த பயிற்சியை மேற்கொள்ள வேண்டும்.

முதலில் வலது நாசியை அடைத்துக் கொண்டு, இடது நாசி வழியாக இயன்றவரை காற்றை உள்ளே இழுக்க வேண்டும். சிறிதும் இடைவெளி இன்றி, இடது நாசியை மூடிக் கொண்டு வலது நாசி வழியாகக் காற்றை வெளியேற்ற வேண்டும். இயன்ற அளவு அதே வலது நாசியின் வழியாகக் காற்றை உள்ளே இழுத்து இடது நாசி வழியாக விட வேண்டும். இந்தப் பயிற்சியை மூன்று முறை அதிகாலை, நண்பகல், மாலை, இரவு என்று நான்கு வேளைகளில் செய்யலாம். இவ்வாறு செய்தால் நாடிகள் தூய்மையடைந்துவிடும்.

மூச்சைச் சுவாசப்பையில் நிறுத்தி வைக்கும் பிராணாயாமப் பயிற்சியைக் கற்றுத் தெளிந்த குருவின் துணையின்றிச் செய்தல் கூடாது. எந்த ஒரு யோகப் பயிற்சியையும் செய்யும் பொழுது தகுந்த நேரத்தில், தகுந்த முறையில், தகுந்த ஆசிரியரிடம், மருத்துவரின் ஆலோசனையோடு மேற்கொள்ள வேண்டும்.

பிராணாயாமத்தின் பயிற்சியால் ரத்த ஓட்டம், வெப்ப ஓட்டம், காற்று ஓட்டம் நன்கு கிடைக்கும். முக்கியமாக சைனஸ், ஆஸ்துமா, ரத்த அழுத்தம், நீரிழிவு, மலச்சிக்கல் போன்ற நோய்கள் வராமல் தடுத்துக் கொள்ளலாம். மூளைக்குப் போதுமான காற்று கிடைப்பதால் மன அமைதி கிடைக்கும். மன அமைதி கிடைத்தால், வாழ்க்கையின் பல இன்னல்களில் இருந்து விடுபடலாம்.

சக்கரமாக ஓடும் காலத்துக்குள் மாட்டிக்கொண்டு, மனிதர்கள் தன்னைத்தானே புறக்கணித்துக் கொள்கிறார்கள். அவர்களுக்கு விழிப்புணர்வு என்ற எச்சரிக்கை மணி தேவை. சுவாமி விவேகானந்தர், தனது யோகப்பயிற்சி பற்றிய நூலில், முத்துச்சிப்பியானது சுவாதி நட்சத்திரம் உச்சத்தில் இருக்கும்பொழுது மழைவரும் காலம் அறிந்து, கடலின் மேற்பரப்பிற்கு வந்து, ஒரு துளி மழை நீரைப் பெற்று, சிப்பியை மூடிக் கடலுக்குக் கீழே சென்று, துளிநீர் முத்தாக மாறும் வரை காத்திருப்பது போல், யோகப்பயிற்சி செய்பவர்கள், பொறுமையுடன், பலனை அடைவதற்குக் காத்திருக்க வேண்டும்.



சுடர்கொடி இராஜேந்திரன்

தன் நோய்க்குத் தானே மருந்து என்னும் இக் கட்டுரையை முனைவர். ச. சுடர்கொடி இராஜேந்திரன் எழுதியுள்ளார். யானையின் பலம் தும்பிக்கையில்... மனிதனின் பலம் நம்பிக்கையில் என்னும் கட்டுரைத் தொகுப்பில் இது இடம் பெற்றுள்ளது.

## செயல்பாடுகள்

- உலக யோகா தினத்தன்று (ஜூன் 21) பள்ளிக் காலைக் கூட்டத்தில் கூறுவதற்கு உறுதிமொழி தயார் செய்யுங்கள்.
- உடம்பார் அழியின் உயிரார் அழிவர் – திருமூலர்

  சுவர் இருந்தால் தான் சித்திரம் வரைய முடியும் – பழமொழி

  ஒப்பீட்டுக் குறிப்பு எழுதுங்கள்
- யோகாசனம் பற்றிய ஐயங்களை அறிந்துகொள்ள யோகா ஆசிரியரிடம் நேர்காணல் காண்பதற்கான வினா நிரல் தயார் செய்யுங்கள்.

## ஒரே நோய் திரும்பத் திரும்ப வருமா...?

தெனாலிராமனின் பூனைக் கதை கேட்டிருக்கிறீர்களா? ஓர் அரசர் பூனை வளர்ப்பதில் போட்டி வைத்தார். அதில் பலர் கலந்து கொண்டார்கள். தெனாலிராமனும் பங்கேற்றான். பூனையைச் சிறப்பாக வளர்ப்பதற்காக ராஜா ஒரு பசுமாடும் கொடுத்திருந்தார். தெனாலிராமன் பசும்பாலைக் கறந்து பாலைக் காய்ச்சிக் குடித்து விட்டு மீதியை விற்றுக் காசாக்கிவிட வேண்டும் என்று திட்டமிட்டான். இதற்காகப் பூனைக்கு ஒரு அதிரடி சிகிச்சையை மேற்கொண்டான். பாலைக் கறந்து நன்கு சூடாக்கி, கொதிக்கக் கொதிக்க அந்தப் பூனைக்குட்டியின் முன்பு கொண்டு போய் வைத்தான். பூனைக்குட்டி ஆசையோடு அதைக் குடிக்க வாய் வைத்தது. ஒரு மடக்கு கூடக் குடிக்கவில்லை. பூனையின் நாக்கு பொத்துப் போய் விட்டது. பிறகு அந்தப் பாலைக் குடிக்கவில்லை. மறுநாளும் இதே போல் சூடான பாலைக் கொண்டுபோய் அதன் முன்பு வைத்தான். அதைக் கண்டதும் பூனை பயந்து ஓடிப்போய் விட்டது. தெனாலிராமனின் திட்டம் நிறைவேறிவிட்டது.

ராஜா, "எல்லோரும் பூனையைக் கொண்டு வாருங்கள்! சிறப்பாக வளர்த்தவர்களுக்குப் பரிசு தருகிறேன்!" என்று அறிவித்தார்.

தெனாலிராமன் பூனை மட்டும் மெலிந்து, எலும்பும் தோலுமாக இருந்தது. அதைக் கண்ட ராஜா கோபம் அடைந்தார். உடனே தெனாலிராமன், "ராஜா, நீங்கள் கோபம் கொள்ள வேண்டாம். இந்தப் பூனை பாலைக் கண்டாலே பயந்து ஓடுகிறது. நான் என்ன செய்வேன்? என்றான் கவலை தோய்ந்த முகத்துடன். ராஜாவுக்கு அதை நம்ப முடியாமல் இருந்தது.

வேலைக்காரனிடம் பால் கொண்டு வந்து வைக்க உத்தரவிட்டார். வேலைக்காரன் பாலைக் கொண்டு வந்து வைத்ததும் தெனாலிராமன் சொன்னபடி வழக்கம் போல் பூனை பயந்து ஓடி விட்டது. இந்தத் தெனாலிராமன் பூனைக்கதை பொய்யோ? நிஜமோ? இந்தப்பூனையைப் போன்ற மனிதர்கள் நிறையவே இருக்கிறார்கள்.

ஒருமுறை ஒருவருக்கு வயிற்றுக்கோளாறு ஏற்பட்டுவிட்டது. டாக்டரிடம் சென்றார். டாக்டர் சோதித்து விட்டு, "நேற்று என்ன சாப்பிட்டீர்கள்?" என்று கேட்டார். இவர், "சோறு சாம்பார், ரசம் உருளைக் கிழங்கு" சாப்பிட்டதாகச் சொன்னார். உடனே டாக்டர் "உருளைக்கிழங்கு வாயு என்பது தெரியாதா? இனிமேல் உருளைக் கிழங்கு சாப்பிடுவதைத் தவிர்த்து விடுங்கள்" என்று ஆலோசனை தெரிவித்தார். அதிலிருந்து அந்த மனிதருக்கு உருளைக்கிழங்கைக் கண்டாலே பயம். காத தூரம் ஓடிவிடுவார்.

உண்மையில் வயிற்றுக் கோளாறு வர எத்தனையோ காரணங்கள் உள்ளன. அதை எல்லாம் கண்டு பிடிக்காமல் ஒரு பட்டிக்காட்டானைப் போல் இந்த டாக்டர் சொன்னதால் என்ன ஆயிற்று? அந்த மனிதருக்கு உருளைக்கிழங்கைக் கண்டாலே பயம் வந்து விட்டது.

உணவு விசயத்தைப் பொருத்தமட்டில் நூற்றுக்கு தொண்ணூறு பேர் இந்தத் தெனாலிராமன் பூனைக் கதையாகத்தான் இருக்கிறார்கள்.

ஒருவர் கத்தரிக்காய் என்றால் பிடிக்காது என்று சொன்னார். "இந்தக் காய் நோயாளிகளின் தேசீயக் காயாயிற்றே. இது ஏன் பிடிக்கவில்லை?" என்று கேட்டபோது, அவர் சொன்னார். "ஒருமுறை ஜலதோசம் பிடித்திருந்தபோது இந்தக் கத்தரிக்காயைச் சாப்பிட்டதால் மூக்கு அதிகமாக ஒழுகி விட்டது. அதிலிருந்து கத்தரிக்காய் என்றாலே பயம்" என்றார்.

உங்களுக்குப் பிடிக்காத உணவு என்று ஏதாவது இருந்தால் நீங்கள் நினைவுபடுத்திப் பாருங்கள். நிச்சயம் தெனாலிராமன் பூனையைப் போன்ற அனுபவம் உங்களுக்கும் ஏற்பட்டிருக்கும். உணவின் குணபாவம் எப்போதும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை

உருளைக் கிழங்கு வாயு என்று உங்களுக்குத் தெரியும். ஆனால் வயிற்றோட்டம் ஏற்பட்ட அன்று பசியாத கோளாறு இருந்திருக்கும். அதுவும் சேர்ந்ததால் வயிற்றோட்டம் ஏற்பட்டதே தவிர, உருளைக்கிழங்கைச் சாப்பிட்டதால் மட்டும் வயிற்றோட்டம் ஏற்படவில்லை.



மனிதன் உணவு விசயத்தில் மட்டும் அல்லாமல் நோய் விசயத்திலும் இந்தத் தெனாலிராமன் பூனைபோலவே இருப்பதால், பிடித்த உணவு, பிடிக்காத உணவு என்று பிரித்து வைத்திருப்பதுபோலவே, நம் செய்கை களையும் ஒதுக்கி வைத்திருக்கிறோம்.




ஒருநாள் மழையில் நனைந்து விட்டதால் ஜலதோசம் பிடித்து விட்டது என்றால் அதன் பிறகு மழையில் நனைவதென்றாலே பயமாக இருக்கும்.

ஒரு நோய்க்காக உடனே மருந்து சாப்பிடும்போது நோய் எதிர்ப்புச் சக்தி செயலிழந்து போய்ச் சோம்பேறியாகி விடுகிறது. இதனால்தான் அடிக்கடி மாத்திரை மருந்து உபயோகிப்பவர்களுக்கு, திரும்பத் திரும்ப நோய் வருகிறது. இப்படி நோய் அடிக்கடி வரும்போது வெவ்வேறு நோய் மாறி மாறி வருமே தவிர ஒரே நோய் வராது. ஆனால் இந்த விசயத்திலும் நாம் தெனாலிராமன் பூனையாகவேதான் இருக்கிறோம்.

உதாரணமாக ஒருமுறை நாம் மழையில் நனைந்ததால் ஜலதோசம் பிடித்து காய்ச்சல் வந்து விட்டது என்றால் இதை நினைவில் வைத்துக் கொண்டு ஒவ்வொரு முறையும், இதேபோல் காய்ச்சல் வரும் என்று கற்பனை செய்யும்போதுதான் நீங்களும் தெனாலிராமன் பூனையாகி விடுகிறீர்கள்.

நாம் ஒரு பீரோவில் நமக்குப் பிடித்தப் பொருள்களை அடுக்கி வைக்கிறோம். பட்டுச் சேலையை அடுக்கி வைப்பதா, பாத்திரங்களை அடுக்கி வைப்பதா என்பது அவரவர் விருப்பத்தைப் பொருத்தது. இந்த சுபாவம் நமது உடம்பில் நோய் எதிர்ப்புச் சக்திகளைச் சேமிப்பதிலும் உள்ளது.

–தேனி தினகரன்

'நமக்கு நாமே மருந்துவராவது எப்படி' என்னும் கட்டுரை நூலை தேனி தினகரன் எழுதியுள்ளார். இந்நூலில் இருந்து நமது பாடப்பகுதி எடுக்கப்பட்டுள்ளது.

## செயல்பாடுகள்

- தெனாலிராமன் பூனைக் கதை போன்று உங்கள் வாழ்வில் நடைபெற்ற ஒரு நிகழ்வை அனுபவக் குறிப்பாக எழுதுங்கள்
- 'உணவும் மனமும்' என்னும் தலைப்பில் கட்டுரை தயார் செய்யுங்கள்
- சிறுதானியங்களின் முக்கியத்துவத்தைச் சுட்டிக்காட்டும் வகையில் கட்டுரை தயாரியுங்கள்.
- 'ஆரோக்கிய வாழ்வில் மன நலம்' என்னும் தலைப்பில் சொற்பொழிவுரை தயார் செய்யுங்கள்.
- தற்கால வாழ்வியல் சூழலில் யோகாவின் முக்கியத்துவத்தை எடுத்துக் கூறும் வகையில் தலையங்கம் தயார் செய்யுங்கள்.



அலகு 2

# சரி நிகராய்...



ஒரு சமூகக் கட்டமைப்பிற்குள் பால் வேறுபாட்டால் கல்வி, நீதி, உரிமைகள், வாய்ப்புகள் போன்றவற்றை மறுப்பது முறையல்ல. சமூகத்தில் அனைவரும் சமமானவர்களே.

# விடிவெள்ளி



## ஔவையும் அதியமானும்

பறம்புமலைப் பாரிக்கு ஒரு கபிலர் கிடைத்தது போல, அதியமான் நெடுமானஞ்சிக்கு ஓர் ஔவையார் கிடைத்தது அவன் செய்த பெருந்தவமே என்று கூறல் வேண்டும். அதியன் கடையெழு வள்ளல்களில் சிறந்தவன். கொங்கு நாட்டையாண்ட குறுநில மன்னன். மிகச் சிறந்த போர் வீரன், தகடூரைத் தலைநகராகக் கொண்டு தனியரசோச்சிய தலைவன். மழவர் என்னும் வீரர் கூட்டத்திற்குத் தலைவனாய் விளங்கியவன்.

பாரியின் பெருமையை உலகமறிய உயர் பாவால் பெருங்கவிஞர் கபிலர் பாடிப் பரவியது போலவே அதியனைப் பற்றிப் பலப்பல பாடல்களால் ஔவையார் பாடிப் புகழ்வதைப் புறநானூறு நமக்கு எடுத்துக்காட்டுகின்றது. ஔவை, அதியன் பற்றிய நிகழ்ச்சிகளில், சிறப்புடைய நிகழ்ச்சிகள் ஒருசில குறிக்கத் தக்கவையாகும்.

அஞ்சி குறுநில மன்னனாயினும் மாமன்னர் போல அரசோச்சிய மாட்சியுடையவன். கொங்கு நாட்டின் 'குதிரை மலை' என்னும் 'முதிர மலை' இவனுடையது. இவனது ஆட்சி 'நடு நாடு' வரை விரிந்து கோவலூரையும் தன்னகத்தே கொண்டு விளங்கியது.



தமிழ்நாட்டிற்குக் கரும்பினை முதன் முதலாகக் கொணர்ந்தவர் இவன் முன்னோரேயாவர். உயர் மரபில்தோன்றிய அதியமான் அறிவு நலமும் அருள் நலமும் மிக்கவன். தமிழ்ப் பற்றாளன். அவன் முத்தமிழ்ப் புலவரை மதித்துப் போற்றிப் புரந்த புரவலன். அவன் அவையில் எக்காலத்தும் புலவரும் பாணரும் கூத்தரும் நிறைந்து விளங்குவர்.

ஔவைப் பெருமாட்டிக்கு அதியமானிடத்தில் அளவற்ற அன்பு. தமக்கென வாழாப் பிறர்க்குரியாளரால்தான் இவ்வுலகம் நிலை பெற்று விளங்குகின்றது. அத்தகைய அருளாளரைப் போற்றுதலும் அவ்வறச் செயலை மேன்மேலும் ஊக்குதலும் தம் போன்ற புலவர் கடமையென அவர் அடிக்கடி எண்ணுவார்.

ஒருகால் ஔவையார், அதியமான் நெடுமானஞ்சியைக் காணப் புறப்பட்டார். தேரையோ, வண்டியையோ எதிர் பார்க்காமல் எங்கும் நடந்தே செல்லும் பழக்கம் அவருக்குண்டு. தகடூர் செல்லும் வழியில் அவர் நடந்துகொண்டிருந்தார். வழி நீண்டு செல்வது போலத் தோன்றியது. தகடூர் நெடுந்தொலைவிலிருந்தது. இரவு வேறு நெருங்கிக்கொண்டிருந்தது.அவ்வேளையில் பாதையின் ஒரு புறத்தில் சிறு மண்டபமொன்று அவர் கண்களுக்குப் புலப்பட்டது. 'உணவில்லாவிட்டாலும் இரவு தங்கியிருக்க இடம் கிடைத்ததே' என்று மகிழ்ச்சியோடு அதை நெருங்கினார்.

ஒரு பெரிய அறையும் முன்னால் திண்ணையும் கூடிய அம்மண்டபம் வழிப்போக்கர் தங்குவதற்காகவே அமைக்கப்பட்டிருத்தலைக் கண்டு, கட்டியவனை வாழ்த்தியவாறே திண்ணையில் சாய்ந்தார்.

கதிரவன் தன் நீண்ட செங்கதிர்களைச் சுருட்டிக்கொண்டு மேற்றிசை மறைந்தான். மண்டபத்துள் பதுங்கியிருந்த இருள் துணிந்து வெளி வந்து எங்கும் பரவியது. முன்புறத்திலிருந்த மரங்களிலிருந்து குளிர்ந்த காற்று வீசிக்கொண்டிருந்தது.களைப்பாலும் பசியாலும் ஔவையார் மெய் மறந்து உறங்கி விட்டார்.



நள்ளிரவு நேரம். ஏதோ மனிதக்குரல் கேட்டு ஔவையின் உறக்கம் கலைந்தது. எதிர்ப்புறத் திண்ணையில் சிலர் பேசிக் கொண்டிருப்பது கேட்டது. அவர்கள் பேச்சிலிருந்து, அவர்கள் படை வீரர்களென்று தெரிந்தது. ஔவையார் மறு புறம் திரும்பிப் படுத்தார். உறக்கம் மீண்டும் வருவதாயில்லை. பேச்சுக்குரல் தொடர்ந்து கேட்டுக்கொண்டேயிருந்தது.

அவர்கள் பேச்சு, நாட்டு நடப்பிலிருந்து அரசியலுக்குத் திரும்பியது, "நம்மிடம் கூழைப் படை, தார்ப் படை இரண்டும்

உள்ளவரை கவலையே இல்லை. மேலும் நம் வீரர் கூட்டத்தினை அதியமான் அவ்வளவு எளிதில் முறியடித்துவிட முடியாது" என்று ஒருவன் குரல் கேட்டது.

உறக்கம் வராமல் புரண்டுகொண்டிருந்த ஔவையார் அதியன் என்ற பெயர் சொல்லக் கேட்டதும் திடுக்கிட்டு, அவ்வீரரின் பேச்சினைக் கூர்ந்து கவனித்தார். அவர்கள் பேச்சிலிருந்து, அவ்வீரர் அதியமானின் பகை நாட்டு வீரரெனவும் விரைவில் அதியமானின் மீது போர் தொடுக்க அவர்தம் மன்னன் சூழ்ச்சி செய்து வருவதும், அதியனின் படை பலமறிய ஒற்று வந்தவர்களே அவர்களெனவும் பல செய்திகள் அவருக்குப் புலப்பட்டன.

அவர் உள்ளம் கொதித்தது. 'போரை நீக்கி, நாட்டின் நலத்தை மேற்கொண்டு அறம் பல செய்து வாழும் புரவலன் மீதா இவர்கள் போர் தொடுக்கிறார்கள்? நன்மை கண்டு பொறுக்காத உலகமிது. அதியனை இவர்கள் கோழை என்று கருதிவிட்டார்கள் போலும்! அவனது வீரத்தினை உலகறியச் செய்ய ஒரு வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்கவே இவர்கள் முயல்கிறார்கள்' என்று நினைந்தவாறு கண்ணுறங்கினார்.

மரங்களில் தங்கியிருந்த புள்ளினங்களின் ஒலி எழுந்தது. கீழ்வானம் மெல்ல வெளுத்தது. இருள் கரையத் தொடங்கியது. பறவைகள் பேரொலி செய்த வண்ணம் எழுந்து பறந்தன. மாவீரன் வருவதறிந்து ஓடி மறையும் கோழைகள் போல வானத்து மீனினம் ஒவ்வொன்றாக மறைந்தன.

வைகறைத் துயிலெழுந்த ஔவையார் முன்னைய இரவின் நினைவில் ஆழ்ந்திருந்தார். அதியனின் பகைவருக்கு அறிவுரை பகர எண்ணினார். இரவு பேசிக்கொண்டவர்கள் எதிர்த் திண்ணையில் எழுந்து பயணத்திற்கு ஆயத்தம் செய்து கொண்டிருப்பது தெரிந்தது. ஔவையார் அவர்களிடம் மெல்லப் பேச்சுக் கொடுத்தார். அவர்கள் தம் வீரத்தைப் பற்றிச் சொல்ல வாய்ப்புக் கொடுத்தார். இறுதியில் அஞ்சியின் வீரத்தைப் பற்றிப் பெயர் குறிப்பிடாமல் அழகிய சிறிய பாடலொன்றில் புகழ்ந்தார்.

"பகைவர்களே! போர்க்களம் புகுவதை நிறுத்துங்கள். எதிர்த்துப் போரிடும் ஆற்றலுடையவன் எம்மிடையிலும் ஒருவன் இருக்கின்றான். அவன்









எத்தகையவன் தெரியுமா? நாள் ஒன்றுக்கு எட்டுத் தேர்களைச் செய்யவல்ல ஆற்றல் படைத்த தச்சன் ஒரு மாதங் கூடி ஒரு தேர்க்காலை முயன்று செய்தால் அத்தேர்க்கால் எவ்வளவு திண்மையும் விரைவும் பெற்றிருக்கும்? அத்தகைய தேர்க்காலைப் போன்றவன் நான் சொல்லும் வீரன்"

"களம்புகல் ஓம்புமின் தெவ்விர்! போர்
　　எதிர்ந்து
எம்முளும் உளன் ஒரு பொருநன்; வைகல்
எண்தேர் செய்யும் தச்சன்
திங்கள் வலித்த காலன் னோனே."

(புறம் 87)

பாடலைக் கேட்டுத் திகைத்தனர் வீரர். இந்த மூதாட்டியார் புலவரோ? ஒரு கால் ஔவையாராகவிருக்குமோ? என்று ஐயுற்றனர். 'பகைவரே!' என்று விளித்தது எம்மைத்தானோ என்று நினைந்து வாய் பேசாதிருந்தனர். அவர் குறிப்பிடும் வீரன் யாரென அறிய ஆவல் கொண்டனர். ஆனால் அதற்குள் மீண்டும் அவர் பாடத் தொடங்கினார். "நீவிர் எப்படிப்பட்டவராயினும் அவனோடு போரிடுவோம் என்று மட்டும் சொல்லாதீர். அது உங்களால் முடியாது. சிறந்த வலிமையுடையவன் அவன். ஒளிவீசும் நெடுவேலேந்திய மழவர்க்குத் தலைவன்; வீரக் கவசம் அணிந்த பரந்த மார்பினன். களவேள்வியாற்றிச் சிறந்த போர் செய்யும் முழவு போன்ற தோளினையுடையவன் அவனே எம் தலைவன். அவனைக் காணாமுன் 'வெல்வோம்' என்று கூறாதீர்! கண்டால் அவ்வாறு நினைப்பதற்கே அஞ்சுவீர்கள்.

வீரர்கள் திடுக்கிட்டனர். அவர் தம்மை நோக்கியே கூறுகிறார் என்பது புலப்பட்டது. ஒருகால் தாம் இரவு பேசிக் கொண்டிருந்ததைக் கேட்டிருப்பாரோ? அவ்வாறானால் அவர் குறிப்பிடும் வீரன் யார்?

ஔவையார் தொடர்ந்தார். "திகைத்திருக்கும் வீரரே! நீங்கள் பேசியது கேட்டேன். உங்கள் வீரத்தை மிஞ்சுவோர் இல்லையென்று தருக்கம் வேண்டாம். அடிக்குங் கோலுக்கு எதிரே சீறி எழும் பாம்பு போன்ற வலிய படை மறவர் கணக்கற்றோர் எந்தலைவன் கீழுள்ளனர்.

மன்றத்தில் கட்டப்பட்டுள்ள முழவின் மேல், காற்று மோத எழுந்த ஓசையைப் போர் முழக்கமென்று எண்ணிப் பொங்கி யெழும் தன்மையுடையவன் எம் தலைவன்." (புறம்:89)

அம்மையார் ஔவையாரே என்பது வீரர் மனதில் நன்கு உறுதியாகப் புலப்பட்டது. நினைத்த அளவில் செறிந்த தீந்தமிழ்ச் சொற்களால் இவ்வாறு பாட வல்ல மூதாட்டியார் வேறு யாராக இருக்க முடியும்?

வீரரில் ஒருவன் பணிந்த குரலில், "அம்மையே! தாங்கள் சுட்டும் அப்பெருவீரனின் வலிமை கேட்டோம். அவர் எம் நட்புடைய நாட்டுத் தலைவராயின் மகிழ்வோம். பகைவனாயினும் அத்தகைய வீரனோடு போர் செய்யவே விரும்புகின்றோம். அவர் யார்?" என்று கேட்டான்.

ஔவையார் திண்ணையை விட்டு எழுந்தார். மண்டபத்தின் வாயிலருகே வந்தார். கனையிருளகன்று காலையாம் பொழுதாகி விட்டது. கதிரவனின் பொன் கதிர்கள் எங்கும் ஒளி வெள்ளம் பாய்ச்சிக் கொண்டிருந்தன. தொடர்ந்து வந்த வீரரைத் திரும்பிப் பார்த்தார்.

"நேற்று இரவெல்லாம் யாரை வெல்ல சூழ்ச்சி செய்து கொண்டிருந்தீர்களோ, அதே வீரன்தான் நான் சொன்ன மன்னன். அதியமான் நெடுமான் அஞ்சி!" என்று கூறிவிட்டு மெல்ல நகைத்தவாறே தன் வழி நோக்கி நடக்கலானார் ஔவையார்.

வீரரிருவரும் திகைத்து, அவர் சென்ற திக்கையே வெறித்து நோக்கிக் கொண்டிருந்தனர்!

–கவிஞர் புவியரசு

**புவியரசு:** திருப்பூர் மாவட்டம், உடுமலை வட்டத்தில் லிங்கநாயக்கன் புதூரில் சுப்பையா, தாயம்மாள் ஆகியோருக்கு மகனாக 19.09.1931 இல் பிறந்தார். இவரது இயற்பெயர் சு. சகன்னாதன். தமிழ் ஆசிரியராகப் பணிபுரிந்துள்ளார். அதே நிலா, மனிதன் போன்ற நூல்களை எழுதியுள்ளார். இவரது கவிதைத் தொகுப்பான கையொப்பம் என்ற நூலுக்கு 2009 ஆம் ஆண்டு சாகித்ய அகாதமி விருதும், 2007 இல் கவிதை புரட்சிக்காரன் என்ற நூலுக்கு மொழிபெயர்ப்புக்கான சாகித்ய அகாதமி விருதும் கிடைத்துள்ளது. கேரளப் பண்பாட்டு மையம் வழங்கும் சாகித்ய புரஸ்கார் விருதினையும் பெற்றுள்ளார்.



## செயல்பாடுகள்

- உங்களுக்குத் தெரிந்த சங்க கால ஆண், பெண் புலவர்களின் பெயர்களை வரிசைப்படுத்துங்கள்.
- சங்க காலப் பெண்கள் ஆண்களுக்கு இணையாகவே புலமை பெற்றவர்களாகவும் திறமை வாய்ந்தவர்களாகவும் வாழ்ந்தனர் என்ற கருத்தினைப் பாடப்பகுதியின் அடிப்படையில் விளக்கி எழுதுங்கள்.
- ஔவையும் அதியமானும் என்ற பாடப்பகுதியை நாடக வடிவில் எழுதி வகுப்பில் நடித்துக் காட்டுங்கள்.

## ஆண் பெண் நிகர்

ஆண் உயர் வென்பதும் பெண்உயர் வென்பதும்
நீணிலத் தெங்கணும் இல்லை
வாணிகம் செய்யலாம் பெண்கள்–நல்
வானூர்தி ஒட்டலாம் பெண்கள்
(ஆணுயர் வென்பதும்....)



ஏணை அசைத்தலும் கூடும் – அதை
யார்அசைத் தாலுமே ஆடும்
வீணை மிழற்றலும் கூடும் – அது
மெல்லியின் விரலுக்கா வாடும்?
நாணமும் அச்சமும் வேண்டும் – எனில்
ஆணுக்கும் பெண்ணுக்கும் வேண்டும்
(ஆணுயர் வென்பதும்...)

சேயிழை மார்நெஞ்ச மீது – நாம்
சிறுபுலி யைக்காணும் போது
தீயதோர் நிலைமைஇங் கேது? –நம்
தென்னாட்டில் அடிமைநில் லாது
தூயராய்த் தொண்டாற்ற வேண்டும். பல
தொழிற்கல்வி யுங்கற்க வேண்டும்.
(ஆணுயர் வென்பதும்...)

– பாரதிதாசன்



**பாரதிதாசன்:** தமிழின் முப்பெரும் கவிஞர்களுள் ஒருவர். 1891 ஆம் ஆண்டு புதுச்சேரியில் (பாண்டிச்சேரி) பிறந்தார். இயற்பெயர் கனக சுப்புரத்தினம். சுப்ரமணிய பாரதியார் மீது கொண்ட பற்றுதலால் பாரதிதாசன் என்று தம் பெயரை மாற்றிக் கொண்டார். புரட்சிக் கவிஞர் என்றும் பாவேந்தர் என்றும் அழைக்கப்படுபவர். பாண்டியன் பரிசு, குடும்ப விளக்கு, இருண்ட வீடு, அழகின் சிரிப்பு போன்றவை இவருடைய முக்கியமான படைப்புகள். பிசிராந்தையார் என்னும் நூலுக்கு சாகித்ய அகாதமி விருது பெற்றார்.

### செயல்பாடுகள்

- ஆண் பெண் நிகர் என்ற கவிதையின் மையக்கருத்தினைக் குறிப்பிட்டு நயம் பாராட்டி எழுதுங்கள்.
- 'நாணமும் அச்சமும் வேண்டும் – எனில்
  ஆணுக்கும் பெண்ணுக்கும் வேண்டும்'

  இவ்வரிகளை விமர்சனம் செய்து எழுதுங்கள்.

'ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்
அறிவில் ஓங்கி இவ்வையம் தழைக்குமாம்.' –பாரதியார்

'ஆண் உயர்வென்பதும் பெண் உயர்வென்பதும்
நீணிலத் தெங்கணும் இல்லை' –பாரதிதாசன்

இவ்வரிகளை ஒப்பிட்டுக் குறிப்பு தயாரியுங்கள்.

## பெண்மை

பெண்ணினம் இல்லாதிருந்திருந்தால் மண்ணில் ஏது வாழ்க்கை? ஒரு நிமிடம் எண்ண ஓட்டத்தைச் சற்றே நிறுத்தி, உங்களைச் சுற்றி இருக்கும் பெண்களைப் பாருங்கள்.



தாயாக..... தமக்கையாக.... தாரமாக.... தோழியாக.... மாற்றுத்தாயாக..துணையாக... செவிலியராக.... ஆசிரியராக.... சக ஊழியராக.... இன்னும் எத்தனை எத்தனை உறவுகளாக... என எங்கெங்கு காணினும் நம்மைச் சுற்றி நிற்கும் பெண்களை!

இந்த உலகிற்கு நாம் வருவதற்குக் காரணம் ஓர் ஆணாக இருந்தாலும், நாம் வந்ததற்குக் காரணம் ஒரு பெண்ணே! அத்தகைய பெண்கள் சற்றே தன்னை நிலைநிறுத்திக் கொண்டது கடந்த இரு நூற்றாண்டுகளாகத்தான் என்பது வரலாறு நமக்குச் சொல்கிறது. ஏன் பெண்கள் என்றாலே சற்று இளைத்தவர்கள் எனவும் ஓர் ஆணால் சாதிக்க முடிவதை, ஒரு பெண் சாதிக்க இயலாது என்றும் பெண் என்றாலே ஓர் ஆணைச் சார்ந்துதான் வாழவேண்டும் எனவும் சில ஆண்கள் நினைக்கின்றனர்.

பெண்களுக்குக் கல்வி மறுக்கப்பட்டு, அதிகாரம் மறுக்கப்பட்டு, உரிமைகள் மறுக்கப்பட்டு, நிலைமைகள் பறிக்கப்பட்டு இருந்த ஒரு இருண்ட காலத்திலிருந்து, அவர்களுக்காக இந்த நூற்றாண்டில் குரல் கொடுத்த மிக முக்கியக் கவிஞன் மகாகவி பாரதியார்!

"ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமை என்று
எண்ணியிருந்தவர் மாய்ந்து விட்டார்;
வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டி வைப்போம் என்ற
விந்தை மனிதர் தலைகவிழ்ந்தார்." –பாரதியார்.

இவ்வளவு ஆழமாக அழுத்தமாக பாரதியை விட யார் சொல்ல முடியும்? தன் பெயரின் சுருக்கத்திலேயே பெண்ணியம் வாழ வழிவகுத்தவனாயிற்றே!

இதற்குப் பின்னர்தான் ஆண்களின் சிந்தனையில் ஓரளவு மாற்றம்

ஏற்பட்டதும், பெண்கள் தானே தலையெடுத்ததும் என்றால் மிகையாகாது.

ஓர் ஆணை விடப் பெண் தீர்க்கமாகச் சிந்திக்கக்கூடிய ஆற்றல் பெற்றவள் என்பதற்குத் தமிழ் இலக்கியங்களின் ஒப்பற்ற படைப்பாளியான ஔவையார் மிகப் பெரிய சான்று!

'கடுகைத் துளைத்து ஏழ் கடலைப் புகட்டிக் குறுகத் தறித்த குறள்' – என்று திருவள்ளுவரின் திருக்குறளை முதலில் புகழ்ந்தவர் இடைக்காடர் எனும் ஆண் புலவர்.

ஆனால் அடுத்துவந்த பெண் புலவரான ஔவையார் அதை மாற்றி 'அணுவைத் துளைத்து ஏழ் கடலைப் புகட்டிக் குறுகத் தறித்த குறள்! என்று பாடுகிறாரென்றால் சற்று யோசியுங்கள் பெண்களின் அறிவு எத்தகைய வலிமை வாய்ந்தது என்று!

கவியரசர் கண்ணதாசன் ஒரு பாடலில் சொல்கிறார் பெண்ணின் மேன்மை எத்தகையது என்பதை. . ..

கருவினில் வளரும் மழலையின் உடலில்
தைரியம் வளர்ப்பாள் தமிழன்னை!
களங்கம் பிறந்தால் பெற்றவள் மானம்
காத்திட எழுவான் அவள் பிள்ளை..... என்று !

அத்தகைய உயர்ந்த சக்தியாக விளங்கும் பெண்களுக்கு எதிரான வன்கொடுமைகளைத் தடுக்கவேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

அவர்களையும் சமமாக, சரிநிகராக மதிப்பதற்குத் தடையாக இருப்பது எது? சிந்தனையா? செயலா?

அப்பப்பா.. எத்தனை கொடுமைகள் பெண்ணாகப் பிறந்ததற்காக இச் சமூகத்தில் ஏவி விடப்படுகின்றன?

இன்னமும் ஏதோ ஒரு இடத்தில்... ஏதோ ஒரு பெண் சமூகக் கொடுமைகளுக்கு ஆளாகிக் கொண்டுதான் இருக்கிறாள்!



இதையெல்லாம் செய்பவர்கள் யார்? ஓர் ஆண்மகன்தானே! ஒரு தாயின் வயிற்றில் பிறந்தவன்தானே? ஒரு சகோதரியோடு உதித்தவன்தானே? ஏன் ஒரு பெண் குழந்தைக்குத் தகப்பனாக இருக்கக்கூடியவன் தானே?

பெண்களைத்தான் தெய்வமாக வணங்குகிறோம். அத்தகைய பெண்களின் வளர்ச்சியில்தான் ஒரு நல்ல சமூகம் மலரும். ஆகவே, இன்னமும் பெண்கள் தனக்கான உரிமையை நிலைநாட்டச் சட்டத்தை நாடும் இழிசெயலைத் தடுத்து, தானாகவே பெற நாம் அனைவரும் உறுதி பூண வேண்டும்.

–சுரேஜமீ

**சுரேஜமீ:** இவர் மதுரையில் 15.05.1971 அன்று பிறந்தார். இவரது பெற்றோர் காளீஸ்வரன், மீனாட்சி ஆகியோர் ஆவர். இவர் சிகரம் தொடுவோம், நூலேணி போன்ற பல நூல்களை எழுதியுள்ளார். இவர் தற்போது ஓமானில் வசித்து வருகிறார்.

## செயல்பாடுகள்

- "ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமை என்று
  எண்ணியிருந்தவர் மாய்ந்து விட்டார்
  வீட்டுக்குள்ளே பெண்ணைப்
  பூட்டி வைப்போம் என்ற
  விந்தை மனிதர் தலைகவிழ்ந்தார்"

  இது பாரதியார் அன்று கண்ட கனவு. இன்று இக்கனவு மெய்யாகி உள்ளதா? உங்கள் கருத்துகளை விளக்கி எழுதுங்கள்

- இன்றும் பெண்களுக்கு எதிரான வன்கொடுமைகள் நிகழ்ந்த வண்ணம் உள்ளன. இதைத் தவிர்க்க நீங்கள் கூறும் வழிமுறைகளை வரிசைப்படுத்துங்கள்.

- குடும்ப, பொருளாதார வளர்ச்சிக்கு ஆண்– பெண் பங்களிப்பு குறித்து விவாதம் செய்யுங்கள் /குறிப்பு எழுதுங்கள்.



## நிகரெனக் கொள்வதால்



### மனோன்மணீயம்

தமிழின் முதற் செய்யுள் நாடகமான மனோன்மணீயத்தின் முதல் அங்கம் நான்காம் களத்தில் இடம்பெற்றுள்ள சீவக மன்னன், வாணி உரையாடலே இப்பாடப்பகுதி, வாணி தனக்கு விருப்பமான ஒருவரைத் திருமணம் செய்ய ஆசைப்படுகிறாள். அவளது தந்தையோ இன்னொருவருக்குத் திருமணம் செய்து வைக்க நினைக்கிறார். வாணி அதற்கு இசையவில்லை. எனவே, மன்னனைக் கொண்டு அவளிடம் பேச வைக்கிறார். ஆனால், வாணியோ அரசனே தன்னிடம் வேண்டிய போதும் விருப்பமில்லாத ஒருவனை மணக்கமாட்டேன் என்று துணிச்சலாகக் கூறுகிறாள். அன்றைய காலத்தில் பெண்கள் அரசனேயானாலும் தன் கருத்தை துணிச்சலுடன் எடுத்துரைப்பவர்களாகக் காணப்பட்டனர் என்பதற்கு வாணி என்னும் கதாபாத்திரம் சான்றாகிறாள்.

**கதாபாத்திரங்கள்**

1. சீவகன் : பாண்டிய மன்னன்
2. குடிலன் : சீவகனின் அமைச்சன்
3. சகடர் : அரண்மனை வேலையாள்
4. மனோன்மணி : சீவக மன்னனின் மகள்
5. வாணி : சகடரின் மகள் (மனோன்மணியின் தோழி)
6. பலதேவன் : குடிலனின் மகன்
7. நடராசன் : வாணியின் காதலன்

ஜீவகன் : குழந்தாய்! என்குலக் கொழுந்தே! அழாய்நீ;
அழுவையே லாற்றேன்; நீயழல் இதுவரை
கண்டது மிலை; யான் கேட்டது மிலையே!
பெண்களின் பேதமை யென்னே! தங்களைப்
பெற்றா ருற்றார் களுக்குந் தமக்கும்,
விழுமம் விளைத்துத் தாமே யழுவர்,
என்னே யவர்தம் ஏழைமை! (வாணியை நோக்கி)
மின்னேய்
மருங்குல் வாணி! வாராய் இப்புறம்.
அருங்கலை யாய்ந்தநின் தந்தைசொன் மதியும்
உன்புத் தியுமுருத் துழல்வதென் வம்பில்
நலமே சிறந்த குலமே பிறந்த
பலதே வனாமொரு பாக்கிய சிலாக்கியன்
தன்னை நீவிடுத்தும் பின்னையோர் பித்தனை
நச்சிய தென்னை சீச்சீ!
நகையே யாகும் நீசெய்யும் வகையே

வாணி : அகலிடந் தனிபுரந் தாளும் வேந்தே
நிகழுமென் சிறிய நினை வெலாம் விரித்து
விநயமாய் நின்பால் விளம்ப எனது
நாணம் நாவெழா தடக்கு மாயினும்
பேணி யொருமொழி பேசுவன்.
நேசமில் வதுவை நாசகா ரணமே.



ஜீவகன் : புதுமை நீ புகன்றாய்! வதுவைமங் கையர்க்குப்
பெற்றா ராற்றுவர்; ஆற்றிய வழியே
தையலார் மையலாய் நேயம் பூண்டு
வாழ்வது கடமை; அதனில்
தாழ்வது தகுதியோ தருமமோ சாற்றே.

வாணி : கற்பனைக் கெதிராய் அற்பமும் மொழியேன்;
ஆயினும் ஐயமொன் றுண்டு, நேயமும்
ஆக்கப் படும்பொ ருளாமோ? நோக்கில்
துன்பே நிறையும் மன்பே ருலகாம்
எரியுங் கானல் விரியும் பாலையில்
திரியும் மனிதர் நெஞ்சஞ் சிறிது
தங்கி அங்கவர் அங்கங் குளிரத்
தருவாய்த் தழைத்தும். ஓயாத் தொழிலில்
நேருத் தாகம் நீக்குவான் நிமல
ஊற்றா யிருந்தவ ருள்ளம் ஆற்றியும்,
ஆறலை கள்வர் அறுபகை மீறில்
உறுதுணை யாயவர் நெறிமுறை காத்தும்,

முயற்சியாம் வழியில் அயர்ச்சி நேரிடில்
ஊன்றுகோ லாயவர் ஊக்க முயர்த்தியும்,
இவ்விதம் யாரையுஞ் செவ்விதிற் படுத்தி,
இகத்துள சுகத்திற்கு அளவுகோ லாகி,
பரத்துள சுகத்தை வரித்தசித் திரமாய்;
இல்லற மென்பதன் நல்லுயி ரேயாய்
நின்ற காதலின் நிலைமை, நினையில்.
இரும்பும் காந்தமும் பொருந்துந் தன்மைபோல்
இருவர் சிந்தையும் இயல்பா யுருகி
ஒன்றாந் தன்மை யன்றி,ஒருவரால்
ஆக்கப் படும்பொரு ளாமோ?
வீக்கிய சுழற்கால் வேந்தர் வேந்தே;

ஜீவகன் : ஆமோ அன்றோ யாமஃதறியேம்;
பிஞ்சிற் பழுத்த பேச்சொழி; மிஞ்சலை;
மங்கை யரென்றுஞ் சுதந்தர பங்கர்
பேதையர்; எளிதிற் பிறழ்ந்திடு முளத்தர்:
முதியவுன் தந்தை மதியிலுன் மதியோ
பெரிது? மற்றவர் தமில்உன்னயம் பேண
உரியவர் யாவர்? ஓதிய படியே
பலதேவனுக்கே உடன்படல் கடமை.

வாணி : இலை யெனில்?

ஜீவகன் : கன்னியா யிருப்பாய் என்றும்.

வாணி : சம்மதம்.

ஜீவகன் : கிணற்றிலோர் மதிகொடு சாடில்
எம்மதி சொண்டுநீ யெழுவாய்? பேதாய்!
கன்னியா யிருக்கில் உன்னழ கென்னாம்?
அரைக்கிலன்றோ சந்தனங் கமழும்?

வாணி : விரைதரு மோசிறு கறையான் அரிக்கில்?

ஜீவகன் : தானே பிடித்த முயற்கு. மூன்று கால்
ஆனால் எங்ஙனம்.....

வாணி : (அரிவையர் பிழைப்பர்)

(சேடி வர)

சேடி : சுந்தர முனிவர் வந்தனர் வாயிலில்;
காலம் நோக்கினர்.

ஜீவகன் : சாலவு மினிதே;
ஆசனங் கொணர்தி.

(வாணியை நோக்கி)

யோசனை வேண்டாம்
எப்படி யாயினுஞ் சகடர் சொற்படி
நடத்துவம் மன்றல்: நன்குநீ யுணர்தி;
ஆயினுந் தந்தனம் ஐந்து நாள்!
ஆய்ந்தறி விப்பாய் லாய்ந்தவுன் கருத்தே.

வாணி : இறக்கிலும் இறைவ! அதற்கியா னிசையேன்:
பொறுத்தருள் யானிவண் புகன்ற
மறுத்துரை யனைத்தும் மாற்றல ரேறே.

– பெ. சுந்தரம்பிள்ளை.

**பெ. சுந்தரம்பிள்ளை:** கேரள மாநிலத்தில் ஆலப்புழை என்னும் ஊரில் பெருமாள், மாடத்தி அம்மாள் தம்பதியினருக்கு மகனாக 1855 ஆம் ஆண்டு பிறந்தார். நூற்றொகை விளக்கம், திருவிதாங்கூர் பண்டை மன்னர் கால ஆராய்ச்சி, மனோன்மணீயம் போன்ற நூல்களை இயற்றியுள்ளார். இந்நாடகநூலில் இடம் பெறும் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடல் தமிழக அரசின் வாழ்த்துப் பாடலாகவும் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும். இவர் 1897 ஆம் ஆண்டு காலமானார்.



## செயல்பாடுகள்

- மனோன்மணீயம் நாடகப் பகுதியைச் சிறுகதையாக மாற்றி எழுதுங்கள்.
- வாணியின் பேச்சாற்றல் திறமையைக் கலந்துரையாடி குறிப்பாக எழுதுங்கள்.
- 'பெண்கள் தங்கள் கருத்துகளை நிலை நாட்ட ஆண்களுக்கு இணையாக விளங்கியுள்ளனர்/இல்லை' என்னும் தலைப்பில் நடைபெறும் விவாத அரங்கில் பேசுவதற்குக் குறிப்பு தயார் செய்யுங்கள்.

✍ கீழ்க்காணும் தன் விவரப் பட்டியலை வாழ்க்கைக் குறிப்பாக எழுதுங்கள்.

| | | |
|---|---|---|
| பெயர் | : | பெ. சுந்தரனார் |
| பிறப்பு | : | 04/04/1855 |
| பெற்றோர் | : | பெருமாள், மாடத்தி அம்மாள் |
| ஊர் | : | ஆலப்புழை, கேரளம் |
| கல்வி | : | முதுகலைப் பட்டம் |
| பணி | : | பேராசிரியர், எழுத்தாளர் |
| படைப்புகள் | : | மனோன்மணியம், நூற்றொகை விளக்கம் |
| மறைவு | : | 26/04/1897 |

## புதுமைப்பெண்

"ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்
அறிவில் ஓங்கி இவ்வையம் தழைக்குமாம்
பூணும் நல்லறத் தோடிங்கு பெண்ணுருப்
போந்து நிற்பது தாய் சிவசக்தியாம்



நாணும் அச்சமும் நாய்கட்கு வேண்டுமாம்
ஞான நல்லறம் வீர சுதந்திரம்
பேணு நற்குடிப் பெண்ணின் குணங்களாம்
பெண்மைத் தெய்வத்தின் பேச்சுகள் கேட்டீரோ"

"நிமிர்ந்த நன்னடை நேர் கொண்ட பார்வையும்
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும்
திமிர்ந்த ஞானச் செருக்கும் இருப்பதால்
செம்மைமாதர் திறம்புவதில்லையாம்
அமிழ்ந்து பேரிருளாம் அறியாமையில்
அவலமெய்திக் கலையின்றி வாழ்வதை
உமிழ்ந்து தள்ளுதல் பெண்ணறமாகுமாம்
உதய கன்னி உரைப்பதைக் கேட்டீரோ"

– சுப்பிரமணிய பாரதியார்



**பாரதியார் :** இவர் சின்னச்சாமி ஐயர், இலக்குமி அம்மாள் ஆகியோரின் மகனாக டிசம்பர் 11, 1882 இல் எட்டயபுரத்தில் பிறந்தார். கவிஞர், எழுத்தாளர், இதழாசிரியர், விடுதலை வீரர், சமூகச் சீர்திருத்தவாதி எனப் பன்முகம் கொண்டவர். பாரதியார், சுப்பையா, முண்டாசுக் கவிஞன், மகாகவி, சக்திதாசன் எனப் பலப்பெயர்களில் அறியப்படுகிறார். பாஞ்சாலி சபதம், கண்ணன் பாட்டு, குயில் பாட்டு ஆகிய படைப்புகள் பாரதியாரின் முப்பெரும் படைப்புகள். செப்டம்பர் 11, 1921 இல் மறைந்தார்.

## செயல்பாடுகள்

- பாடலில் இடம்பெறும் கடின சொற்களுக்குப் பொருள் எழுதி அகர வரிசைப் படுத்துங்கள்.
- 'பாரதி கண்ட புதுமைப்பெண்' என்ற தலைப்பில் சொற்பொழிவுரை தயார் செய்யுங்கள்.
- பாரதியார் பெண்கள் பற்றி கண்ட கனவு இன்று நனவாகியுள்ளதா? இல்லையா? என்னும் தலைப்பில் நடைபெறும் பட்டிமன்றத்திற்குத் தேவையான குறிப்பு தயார் செய்யுங்கள்.

## கடிதம்

**அன்புள்ள தங்கை,**

முன்னோரின் வாழ்க்கையைப் பற்றிப் பல கேள்விகள் கேட்டிருக்கிறாய். முன்னோரின் வாழ்க்கையைக் கண் மூடிப் பின்பற்றி நடக்கவேண்டும் என்று நான் எப்போதும் சொல்ல மாட்டேன். காலம் மாறிவிட்டது; காலமாறுதலுக்கு ஏற்பச் சூழ்நிலையும் வாழ்க்கையும் மாறி அமைந்துள்ளன. அவற்றை உணராமல் பழையபடியே வாழ விரும்புதல் அறியாமை. பழமையில் நல்லவை எவை? வாழ்க்கைக்கு அடிப்படையானவை எவை? என்றும் பின்பற்றத் தக்கனவாக உள்ளவை எவை? இவ்வாறு ஆராய்ந்து. இன்றியமையாத நல்லவற்றை மட்டும் போற்றினால் போதும்.

முன்னோர் எல்லோர்க்கும் அடிமை உணர்ச்சியே இருந்தது என்று கூற முடியாது. அவர்களில் பலர்க்கு உரிமை உணர்ச்சி இருந்தது. பெண்கள் எல்லோரும் அடிமைகளாகவே நடத்தப்பட்டார்கள் என்றும் கூற முடியாது. சங்க இலக்கியம், பெண்கள் பலர் உரிமையோடு வாழ்ந்த நிலைமையைத் தெரிவிக்கிறது. பொதுவாகக் கூறுகிறேன் எங்கெல்லாம் தோள்வலியை விட நெஞ்சின் திட்பம் பெரிதாகப் போற்றப்படுகின்றதோ, எங்கெல்லாம் வாள் வலியை விடச் சொல்லின் செம்மை சிறந்ததாகப் போற்றப் படுகின்றதோ, அங்கெல்லாம் நாகரிகம் உண்டு; அத்தகைய நாகரிகம் நிலவும் இடங்களே உரிமை (ஆண் உரிமை, பெண் உரிமை எல்லாம்) நிலவும் இடங்கள். அந்த நாகரிகம் இல்லாத நிலையே அடிமைத் தன்மை மிக்க நிலை. அது பழங்காலத்திலும் ஓர் அளவு உண்டு; இக்காலத்திலும் ஓர் அளவு உண்டு.

அந்தக் கால நிலையை ஒட்டி இல்வாழ்க்கை சீராய் நடைபெறுவதற்காக முன்னோர் சில திட்டங்கள் அமைத்திருந்தனர். ஆண் உடல் வலிமை மிகுந்தவன்; ஆகையால் அவன் வெளியுலகில் அலைந்து பொருள் தேடுக என்று அமைத்தனர். பெண் உடல்வலிமை குறைந்தவள்; ஆக்க வேலையில் ஆர்வம் நிறைந்தவள். ஆதலால் வீட்டிலிருந்து அமைதியைக் காத்து வருக என்று அமைத்தனர், அலைவுக்கு ஏற்றது ஆண் உடல், அமைதிக்கு உரியது பெண் உடல் என்று அவர்கள் வகுத்த முறை இயற்கையோடு இயைந்த முறையாக இருந்தது. அதற்கு ஏற்றவாறே ஆண் வயதில் மூத்தவனாக இருக்குமாறும் பெண் இளையவளாக இருக்குமாறும் ஏற்படுத்தினர். இந்த ஏற்பாட்டில் தவறு காண முடியவில்லை, இன்றைக்கும் பெரும்பான்மையோர் இதையே போற்றி வருகின்றனர்.

இக்கால விஞ்ஞான முன்னேற்றத்தின் பயனாக உடல் வலி மிகுதியாக இல்லாமலே பொருள் தேட முடியும்; யந்திரங்களைக் கொண்டே தொழில்களைச் செய்து முடிக்க இயலும். ஆதலின் இன்றைய நிலையில் பெண்ணும் வெளியுலகக் கடமைகளுக்கு ஏற்றவளாக இருக்கிறாள். பழைய குறை மாறுவதற்கு இடம் உள்ளது.

முன்னோர்களின் அறிவுரை என்ன? இல்வாழ்க்கையில் தியாகம் வேண்டும். ஒருவர்க்கு ஒருவர் விட்டுக் கொடுத்து வாழ வேண்டும். ஒருவரிடத்தில் குறை இருக்கலாம். அந்தக் குறையைக் கடந்து மற்றவர் அன்பு செலுத்த வேண்டும். வாய்ப்புக் கிடைக்கும் போது எடுத்துக் கூறித் திருத்த முயலலாம். உரிமையோடு போராடலாம். எப்போதும் அன்பு மாறக் கூடாது.

உன் அன்புள்ள வளவன்

–மு. வரதராசன்

**மு. வரதராசன் :** இவர் வடஆற்காடு மாவட்டத்தில் வேலம் என்னும் ஊரில் முனுசாமிக்கும், கண்ணு அம்மாளுக்கும் மகனாக 25.04.1912 இல் பிறந்தார். கள்ளோ காவியமோ, அகல் விளக்கு, குறட்டை ஒலி, இலக்கிய ஆராய்ச்சி போன்றவை உட்பட பல நூல்களை எழுதியுள்ளார். அன்னைக்கு, தம்பிக்கு, தங்கைக்கு, நண்பர்க்கு போன்ற கடித இலக்கியங்களையும் எழுதியுள்ளார். 1961 இல் சாகித்ய அகாதமி விருதும், தமிழக அரசின் விருதும் பெற்றுள்ளார். அக்டோபர் 10 , 1974 இல் மறைந்தார்.



### செயல்பாடுகள்

- இக்காலத்தில் பெண்களும் ஆண்களுக்கு இணையாக அனைத்துத் தொழில்களையும் செய்ய முடியுமா? இக்கருத்தினை வகுப்பறையில் கலந்துரையாடிக் குறிப்பு எழுதுங்கள்.
- "குடும்ப வளர்ச்சியில் பெண்களின் பங்கு" என்னும் தலைப்பில் கட்டுரை தயாரியுங்கள்.

## மனதில் உறுதிவேண்டும்

மதுரை மாவட்டத்தில் வண்டியூர் மாரியம்மன் தெப்பக்குளம் அருகே அனுப்பானடி என்றொரு சிற்றூர். அங்கே பெருமாள் பிள்ளை–சந்திரம்மாள் எனும் தம்பதியினர் வாழ்ந்து வந்தனர். அவர்களுக்குப் பத்து குழந்தைகள். அந்தப் பத்துக் குழந்தைகளில் ஐந்தாவதாகப் பிறந்த ஆண்குழந்தை நடராஜ். இளமையில் சுறுசுறுப்பாகவே விளையாடித் திரிந்தான். நாட்கள் செல்லச்செல்ல நடராஜின் நடத்தையிலும் பாவனையிலும் ஒரு பெண்குழந்தையின் பண்பு வெளிப்படத் தொடங்கியது. சுமார் பத்து வயதானபோது தனக்குள்ளே ஒரு பெண்மை ஒளிந்திருப்பதை அவன் உணர்ந்தான். இத்தகைய ஒரு அவலநிலையை யாரிடம் சொல்வது, எப்படிச் சொல்வது, நடராஜுக்கு மனக்கவலையாக இருந்தது இனியும் இதனை மறைத்துவைப்பது சரியில்லை என்று தோன்றியபோது, பெற்றோரிடம் எடுத்துச்சொன்னான். அச்செய்தியைக் கேட்டதும் பெற்றோர்கள் அதிர்ச்சியுற்றனர். இப்படியொரு குழந்தையைப் பற்றி ஊருக்குத் தெரிந்தால் தங்களுக்கு மிகுந்த அவமானம் ஏற்பட்டுவிடுமே என்ற ஆதங்கமும் வருத்தமும் அக் குடும்பத்திற்கு ஏற்பட்டது.

ஆணாகவே நடந்துகொள், ஆண் குழந்தைகளோடு மட்டுமே பழகு என்று பெற்றோர்கள் அவனை வற்புறுத்தினர். ஆனால் நடராஜால் அது இயலவில்லை. நடராஜின் பெண்மைத்தன்மை அதற்கு இடம்கொடுக்கவில்லை. பெண்களின் உடையை அணியத் தொடங்கினார். கோபம் கொண்ட அவரது குடும்பம் நடராஜைப் பலவாறு துன்புறுத்தியது. என்ன செய்வதென்று அறியாது விழித்தார் நடராஜ். ஒருநாள் நடராஜை வீட்டைவிட்டு வெளியேற்றிவிட்டனர். திக்குத்

ST-321-7-TAMIL (BT)-9



தெரியாத காட்டில் அகப்பட்டதுபோல் நிலை தடுமாறினார் நடராஜ். செய்வதறியாது திகைத்தார். ஆனாலும் ஒரு கோழையாக உயிரை விட்டுவிடாமல், இரந்துண்ணாமல், மன தைரியத்துடன் இந்த உலகில் நல்லபடியே வாழ்ந்துகாட்டவேண்டும் என்றோர் உறுதிச்சுடர் அவருக்குள் ஒளிவீசியது. கால ஓட்டத்தில் நடராஜ் ஒரு திருநங்கையாக மாறினார். அவரைப் போன்ற இன்னொரு திருநங்கையான சக்திபாஸ்கர் என்பவர் அவருக்குத் தோழியாகக் கிடைத்தார். அந்த நட்பு நடராஜின் வாழ்க்கையில் ஒரு சக்தியாக மாறியது. திருப்புமுனையாக அமைந்தது.

தம் பெயருக்கு ஏற்ப சிறுவயதிலேயே நடராஜுக்குப் பரதநாட்டியத்தில் மிகுந்த ஆர்வம் இருந்தது. நடிகை வைஜெயந்திமாலாவின் நடனம் என்றால் உயிர். திரையில் வைஜெயந்திமாலா, பத்மினி போன்றோரின் பரதநாட்டியத்தைப் பார்த்துப் பார்த்தே சுயமாக நடனம் கற்றுக்கொண்டார். அந்தப் பயிற்சியின் துணையால் கோயில்களிலும் மற்றும் பல இடங்களிலும் ஆடிக் கிடைத்த சிறு வருவாயில் வாழ்க்கையை ஓட்டினார். வைஜெயந்திமாலாவின் குருவாகிய தஞ்சாவூர் கிட்டப்பா பிள்ளையிடம் முறைப்படி நடனம் கற்க ஆசைப்பட்டார். அதற்காக நடராஜும் சக்தியும் தஞ்சை சென்றனர்.

ஆனால் நடராஜின் ஆசை நிறைவேற வில்லை. முதலில் பரதநாட்டியம் நடைபெறும் இடங்களுக்குச் சென்று நேரடியாகப் பார்த்து அதன் நுணுக்கங்களைத் தெரிந்துகொள் என்று அனுப்பிவிட்டார் கிட்டப்பா பிள்ளை. நடரஜுக்குப் பெரும் ஏமாற்றமும் வருத்தமும் உண்டானது. ஆனாலும் மனம் தளராமல், பொருளாதார நெருக்கடியிலும் ஊர் ஊராகச் சென்று நடன நிகழ்ச்சிகளைப் பார்த்தார். ஒருநாள் திடீரென கிட்டப்பா பிள்ளை நடராஜை அழைத்து அவரைச் சீடராக ஏற்றுக்கொண்டார். நடராஜின் கனவு நனவாகியது. அவர் மகிழ்ச்சியின் எல்லையைத் தொட்டார். வாழ்க்கையில் முன்னேறக் கலைத் திறன் மட்டும் போதாது. கல்வியறிவும் தேவை என்பதை நன்கு உணர்ந்திருந்த நடராஜ் 'பிளஸ்டு' வரை பயின்று சிறந்த முறையில் வெற்றிபெற்றார்.

பரத நாட்டியத்தை ஒரு திருநங்கை ஆடுவதைக் கண்டு முகம் சுளித்தனர். சிலர் வெளிப்படையாகவே எதிர்ப்புத் தெரிவித்தனர். தனது பயிற்சிப் பாதையில் தடைகளும் இடையூறுகளும் ஏற்பட்டன. எதற்கும் அஞ்சாமல் மனம் தளராமல் முன்னேறினார் நடராஜ். ஓராண்டுத் தீவிரப் பயிற்சிக்குப்பின் 1983 ஆம் ஆண்டு முக்கியமானவர்களின் முன்னிலையில் வெற்றிகரமாக அரங்கேற்றம் கண்டார். நடராஜ், அன்றிலிருந்து நர்த்தகி நடராஜாக நாடெங்கும் அறியப்பட்டார். இன்று நர்த்தகி நடராஜ் என்றால் உலகமே அறியும். மன உறுதியும் விடாமுயற்சியும் தளராத பயிற்சியும் தன்னம்பிக்கையும் உற்ற தோழியின் உறுதுணையும் அவருக்குக் கைகொடுத்தன. அவர் புகழின் உச்சியைத் தொட்டு நிற்கிறார்.



பாரதத்தின் பல பகுதிகளிலும் ஐரோப்பிய நாடுகள் அமெரிக்கா, கனடா, லண்டன், ஜப்பான் போன்ற வெளிநாடுகளிலும் இவர் நிகழ்த்திய நடன நிகழ்ச்சிகள் எண்ணிலடங்கா. ஒரு குறுகிய காலத்திற்குள். இவரைத் தேடிவந்த விருதுகளும் பட்டங்களும் அங்கீகாரங்களும் ஏராளம்! ஏராளம்!. தமிழ்நாடு அரசின் 'கலைமாமணி' விருது தஞ்சாவூர் பெரியார் மணியம்மை பல்கலைக்கழகத்தின் மதிப்புறு முனைவர் பட்டம், மியூசிக் அகாதமியின் 'நிருத்திய கலாநிதி' விருது, சென்னை கிருஷ்ணகான சபையின் 'நிருத்திய சூடாமணி' விருது அமெரிக்காவின் க்ளிவ்லேண்ட் தியாகராஜ ஆராதனை குழுவின் 'நிருத்திய இரத்தினாகரா' விருது முதலான விருதுகள் அவற்றுள் ஒருசில. புகழின் உச்சமாக 2019 ஆம் ஆண்டு இந்திய அரசு 'பத்மஸ்ரீ' விருது வழங்கிச் சிறப்பித்தது. பத்மஸ்ரீ விருதுபெற்ற முதல் திருநங்கை இவரே என்பதும் குறிப்பிடத்தக்கது.

உலகப் புகழ்பெற்ற கல்வி நிறுவனங்களில் வருகை தரு பேராசிரியராக அழைக்கப்பட்டு வருகிறார். தற்போது தமிழ்நாடு மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழுவின் உறுப்பினராக இருந்து வருகிறார். 'யாம் பெற்ற பெருமை பெறுக இவ் வையகம்' என்ற கூற்றிற்கு இணங்க தம் அன்புத்தோழி சக்தி பாஸ்கர் அவர்களின் உதவியுடன் 'வெள்ளியம்பலம்' அறக்கட்டளை எனும் நடனக் கலைக்கூடம் நிறுவி இளைஞர்களுக்கு நடனப் பயிற்சி அளித்துவருகிறார்.

ஒரு திருநங்கை என்ற காரணத்தால் பெற்றோர்களால் கைவிடப்பட்டு, இந்த சமூகமே ஒதுக்கிவைத்த போதிலும், மன உறுதியுடன், தன்னம்பிக்கையுடன் இடையூறுகளை எதிர்கொண்டு. எதிர்ப்புகளை முறியடித்து சவால்களைச் சமாளித்து புகழின் சிகரத்தில் ஏறி வெற்றிக்கொடி நாட்டியவர் கலைமாமணி பத்மஸ்ரீ நர்த்தகி நடராஜ் அவர்கள். அவரது போராட்ட வாழ்க்கை பிற திருநங்கைகளுக்கு மட்டுமல்ல, ஒரு காலத்தில் அவரை எள்ளி நகையாடிய இந்தச் சமூகத்திற்கும் ஒரு பாடமாக அமையவேண்டும்.

இப்பாடப்பகுதி இணையச் செய்திகளிலிருந்து தொகுக்கப்பட்டது.

## செயல்பாடுகள்

- மூன்றாம் பாலினத்தவர் எதிர்கொள்ளும் சிக்கல்களைக் குறிப்பாக எழுதுங்கள்.
- மூன்றாம் பாலினத்தவரில் சாதனை புரிந்தவர்களைக் குறித்த தகவல்களைத் திரட்டி வாழ்க்கைக் குறிப்பு/ தன்விவரப் பட்டியல் தயார் செய்யுங்கள்.
- மூன்றாம் பாலினத்தவரின் வாழ்வு மேம்பட நீங்கள் கூறும் பரிந்துரைகளைப் பட்டியலிடுங்கள்.



# சாதனைப் பெண்மணிகள்



## பெண்கல்வி

"மங்கையராய்ப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டுமம்மா!" என்றார் கவிமணி. ஆனாலும் பெண்ணாகப் பிறந்து விட்டால் மட்டும் பெருமை கிடைத்து விடாது. தானும் தன்னைச் சார்ந்த குடும்பமும் சமூகமும் நலம்பெறவும் வளம் பெறவும் பெண்கல்வி அவசியமாகின்றது.

### கல்வி

அறியாமை இருளை அகற்றும் விளக்கு கல்வி. கல்வியறிவு இல்லாத மனிதர்கள் கண்ணில்லாதவர்கள் என்று கூறுகின்றார் வள்ளுவர். ஆகவே மண்ணில் மாந்தராய் பிறந்தவர் அனைவருக்கும் கல்வி அவசியமாகின்றது.

"பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான்
புவிப்பேணி வளர்த்திடும் ஈசன்
மண்ணுக்குள்ளே சில மூடர்
நல்லமாதர் அறிவைக் கெடுத்தார்"

என்பது போன்று பெண்கள் இரண்டாம் தரக் குடிகளாகவும், முழுமையான அறிவற்றவர்களாகவும் மட்டுமே கருதப்பட் டார்கள். ஆனால் பெண்களும் அறிவுடையவர்களாகவும் உலாவந்துள்ளனர் என்பதனையும் நாம் சங்ககால ஔவையார்



தொடங்கிப் பலரை அறிய முடிகின்றது. எனவே பெண்ணடிமை என்ற நிலையும் அறியாமையில் தள்ளப் பட்ட கொடுமையும் பாதியில் வந்து சேர்ந்த பச்சாதாபங்கள்.

ஆனால் இன்றைக்கு அனைவராலும் பெண்கல்வியின் அவசியம் உணர்த்தப் படுகின்றது. பெண்களும் அதனை உணர்ந்துகொள்ள ஆரம்பித்து விட்டனர்.

### பெண்கல்வியின் அவசியம்

"கல்லாத பெண்கள் களர்நிலம் – அங்கே
புற்கள் விளைந்திடலாம் நல்ல புதல்வர்கள் விளைந்திட இயலாது"

என்று பாரதிதாசன் பெண்கல்வியின் அவசியத்தை உணர்த்துகின்றார். ஒருபெண், கல்வி கற்கின்றபோது அவள் தன்னை முன்னேற்றிக் கொள்வது மட்டுமின்றி தன் குடும்பத்தில் உள்ளவர்களின் முன்னேற்றம் பற்றியும் பேசுகின்றாள். இதனால் வீடு மட்டுமின்றி நாடும் முன்னேற்றமடையும். எனவேதான் பாரதி பாவேந்தனுக்கும் முன்னரே "எட்டும் அறிவினில் ஆணுக்குப் பெண் இங்கே இளைப்பில்லை காணென்று கும்மியடி" என்று பெண்ணுரிமை பேசி பெண்கல்விக்கு வழிவகுத்தார்.

இன்று அரசும் பெண் கல்வியை வலியுறுத்துகின்றது. படித்த பெண்களுக்குரிய பல இடஒதுக்கீடு வழங்குகின்றது. 33 சதவீதம் பெண்களுக்கு இடஒதுக்கீடு வழங்கப்படுகின்றது. சட்டங்கள் மற்றும் வாய்ப்புகளின் மூலமாக ஓரளவிற்குப் பெண்கள் கல்வி கற்று இன்று அனைத்துத் துறைகளிலும் முத்திரை பதித்து முன்னேறத் தொடங்கி உள்ளனர்.

"ஆணுக்குப் பெண் சரிநிகர் சமானமாய் வாழ்வோம் இந்த நாட்டில்" என்று சொன்னால் மட்டும் போதாது, அதனைச் செயலில் காட்ட கல்வி ஒன்றே வழியாகும். பெண்கல்வி தந்து பெண்களும் வீடும் நாடும் உயர்ந்திட வழி செய்வோம்! வாழ்ந்திடுவோம்! உயர்ந்திடுவோம்!

இப்பாடப்பகுதி மாணவர் பொதுக் கட்டுரைகள் என்ற கட்டுரைத் தொகுப்பு நூலிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது.

## செயல்பாடுகள்

- பெண் கல்வியை வலியுறுத்துகின்ற பாடல்களைத் திரட்டுங்கள்
- உங்கள் பள்ளி இலக்கிய மன்றத்தில் உரையாற்ற "கல்வியும் சமுதாய வளர்ச்சியும்" என்ற தலைப்பில் சொற்பொழிவுரை தயாரியுங்கள்.
- சர்வதேச மகளிர் தினத்தன்று பள்ளிக் காலைக்கூட்டத்தில் கூற ஆண் பெண் சமத்துவத்தை வலியுறுத்தும் நோக்கில் உறுதிமொழி தயார் செய்யுங்கள்.
- பின்வரும் நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் பத்திரிகைச் செய்தி தயாரியுங்கள்.

**அரசு உயர்நிலைப் பள்ளி**

திருவனந்தபுரம்

**மகளிர் தினவிழா**

நாள் : மார்ச் 8

| | | |
|---|---|---|
| இறை வணக்கம் | : | பள்ளி மாணவர்கள் |
| வரவேற்புரை | : | மாணவர் தலைவர் |
| தலைமையுரை | : | தலைமை ஆசிரியர் |
| சிறப்புரை | : | கவிஞர். குட்டி ரேவதி (எழுத்தாளர்) |
| வாழ்த்துரை | : | பெற்றோர் ஆசிரியர் சங்கத் தலைவர் |
| நன்றியுரை | : | இலக்கிய மன்றச் செயலாளர். |

# அப்துல் கலாம் சொற்பொழிவு



## பாரதி மகளிர் கல்லூரியில் டாக்டர் அப்துல் கலாம் ஆற்றிய உரை

மாணவிகளே,! பேராசிரியர்களே,! கல்லூரி நிர்வாகிகளே! சிறப்பு அழைப்பாளர்களே! உங்களை எல்லாம் இன்றைக்குச் சந்திக்கக் கிடைத்த வாய்ப்பிற்கு மிக்க மகிழ்ச்சி. பல்லாயிரக்காணக்கான மாணவிகளை உருவாக்கி, இன்றைக்கு அவர்களில் பலபேர் பல்வேறு உயர்ந்த நிலைக்கு வந்திருக்கிறார்கள் என்றால், அதற்கு முழு முதற் காரணம், இந்தக் கல்லூரியின் முன்னாள் மற்றும் இன்னாள் நிர்வாகிகளும் கல்லூரி முதல்வரும் பேராசிரியர்களும் ஆசிரியர்களும் ஊழியர்களும் தான். எனவே இந்தத் தருணத்தில், அவர்கள் அனைவருக்கும் என் மனமார்ந்த நல்வாழ்த்துக்கள்.

எனது அனுபவத்தில் பெண்கள் சக்தி எப்படிப்பட்ட சமூக மாற்றத்தைக் கொண்டு வந்திருக்கிறது என்று உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

நான் 1973–80 களில் ஐ.எஸ்.ஆர்.ஒ வில் வேலை செய்யும் போது, பல அறிவியல் மற்றும் தொழில் நுட்ப அறிஞர்கள் என்னுடன் இணைந்து பணியாற்றினார்கள். குறிப்பாக காம்போஸிட் துறையில் பெண் விஞ்ஞானிகள் அதிகமாக பணிபுரிந்தார்கள். அதே போல், பாதுகாப்புத்துறையில் தொலைதூர அக்னி ஏவுகணைத் திட்டத்தில், நான் வேலை செய்யும் போது, பல பெண் விஞ்ஞானிகள் என்னுடன் ஏவுகணை வடிவமைப்பு மற்றும் மேம்பாட்டுத்துறையில் பணியாற்றினார்கள். உங்களுக்கெல்லாம் தெரியும், டாக்டர் டெஸி தாமஸ் என்ற பெண் விஞ்ஞானியைப் பற்றி மிக நீண்ட தூர அக்னி ஏவுகணைத் திட்டத்தில் மிகச் சிறப்பாகச் செயல்பட்டு இன்றைக்கு அரிய சாதனை படைத்த பெண்மணி அவர்.

2003–ஆம் ஆண்டு கோயம்புத்தூரில் ஏற்பட்ட தண்ணீர் பிரச்சினையையும், சுற்றுப்புற சுகாதாரப் பிரச்சினைகளையும் ஒரு சவாலாக ஏற்றுக்கொண்டு, மாநில அரசிற்கு மட்டும் இது பொறுப்பல்ல, மக்களுக்கும் இந்தப் பொறுப்பு சாரும் என்று உணர்ந்து, இந்தச் சவாலைச் சந்தித்து வெற்றி பெறவேண்டும் என்ற உயரிய இலட்சிய நோக்கோடு ஆரம்பிக்கப்பட்டது தான் சிறுதுளி இயக்கம். அந்த சிறுதுளி இயக்கத்தைத் தலைமையேற்று வழிநடத்துபவர் ஒரு பெண் தான். அவர் தான் சிறுதுளி வனிதா மோகன்.

குப்பை மேடாக இருந்த 7 குளங்களை மக்கள், அரசு, தனியார் நிறுவனங்களின் ஒத்துழைப்போடு சீரமைத்தார். இன்றைக்கு எங்குப் பார்த்தாலும் தண்ணீர், தண்ணீர், தண்ணீர். எங்குப் பார்த்தாலும் பறவைகள். அழகான கரை அமைக்கப்பட்டிருக்கிறது.

"முயற்சி திருவினையாக்கும்"

என்பதற்குச் சிறுதுளியின் இந்தச் சாதனையே சாட்சி. சிறுதுளி பெரு வெள்ளம் என்ற கருத்தை மெய்யாக்கும் வகையில் கோயம்புத்தூரை ஒரு பசுமையான, நீர் நிலைகள் நிரம்பிய, சுகாதாரமான ஊராக மாற்றி, அதன் பூமி தண்ணீர் இருப்பைப் பன் மடங்கு உயர்த்திய பெருமை சிறுதுளியைச் சாரும். எந்த ஓர் இயக்கமும், மக்கள் இயக்கமாக மாறி அது ஒரு சமூகம் சார்ந்த பொது நல நோக்கோடு இயங்கும் பொழுது அதன் கொள்கையை விட்டுப் பிறழ்வதற்கு வாய்ப்பு மிக அதிகம். ஆனால் கொண்ட கொள்கையைச் சிரமேற்கொண்டு, மக்கள் அனைவரது ஒத்துழைப்புடன் அரசு மற்றும் மாவட்ட நிர்வாகத்தின் துணை கொண்டு தொழில், வர்த்தகம் மற்றும் சேவை நிறுவனங்களின் பங்களிப்புடன் ஓர் இயக்கம் சாதித்துக் காட்டியிருக்கிறது என்றால் அது சிறுதுளி இயக்கம்தான்.

சமூக மாற்றத்திற்கான மக்கள் இயக்கத்தை எப்படி நீதியாக, நேர்மையாக, இளைஞர்களையும், மாணவர்களையும், சின்னஞ் சிறார்களையும், மற்றும் காவல் துறையையும் இணைத்துச் சாதிக்க முடியும் என்ற மேலாண்மை தத்துவத்தை நாட்டிற்கு எடுத்துக் காட்டியது சிறுதுளி இயக்கத்தின் சாதனை.

இங்குக் கூடியிருக்கும் மாணவிகளைப் பார்க்கிறேன். நீங்கள் எல்லோரும் வெற்றியடைய, வளமான வாழ்வு பெற ஒரு சிறு கவிதை மூலம் என் கருத்தை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். அந்தக் கவிதையின் தலைப்பு, "வாழ்வில் நான் பறந்து கொண்டேயிருப்பேன்" என்பதாகும். இதை எல்லோரும் என்னுடன் சொல்கிறீர்களா?

வாழ்வில் நான் பறந்து கொண்டேயிருப்பேன்
நான் பிறந்தேன் அரும்பெரும் சக்தியுடன்,
நான் பிறந்தேன் நற்பண்புகளுடன்,
நான் பிறந்தேன் கனவுகளுடன், வளர்ந்தேன் நல்ல
எண்ணங்களுடன்,
நான் பிறந்தேன் உயர் எண்ணங்களைச் செயல்படுத்த,
நான் பிறந்தேன் ஆராய்ச்சி உள்ளத்துடன்,
நான் பிறந்தேன் நல்ல மன உறுதியுடன்,
நான் பிறந்தேன் ஆகாய உச்சியில் பறக்க,
நான் பூமியில் ஒரு போதும் தவழமாட்டேன்,
தவழவே மாட்டேன், ஆகாய உச்சிதான் என் லட்சியம்.
பறப்பேன், பறப்பேன், வாழ்வில் பறந்து கொண்டே இருப்பேன்.

பறக்கவேண்டும் என்ற உணர்வு வாழ்வில் பெரிய லட்சியத்தை அடைய வழிவகுக்கும். அந்த லட்சியத்தை அடைய என்ன செய்ய வேண்டும். நீ யாராக இருந்தாலும் பரவாயில்லை. உன்னால் வெற்றியடைய முடியும்.

– டாக்டர் அப்துல்கலாம்

**டாக்டர் அப்துல் கலாம்:** இவர் 1931 ஆம் ஆண்டு அக்டோபர் 15 ஆம் நாள் இராமேஸ்வரத்தில் ஜைனுலாபுதீனுக்கும், ஆஷியம்மாவுக்கும் மகனாகப் பிறந்தார். 1960 ல் விஞ்ஞானியாக பணியைத் தொடங்கிய கலாம் ஏவுகணைகளை வடிவமைப்பதில் பெரும்பங்காற்றினார். எனவே ஏவுகணை நாயகன் என்ற பட்டத்தையும் பெற்றார். இவரது வியத்தகு பணிக்காக மத்திய அரசு பத்ம பூஷன் விருது, பத்மவிபூஷன் விருது, பாரதரத்னா விருது வழங்கி கவுரவித்தது. 2002 ஆம் ஆண்டு இந்திய குடியரசுத் தலைவராகவும் பொறுப்பேற்றார். அக்னிச் சிறகுகள், இந்தியா 2020 போன்ற பல நூல்களை எழுதியுள்ளார். இவர் 2015 ஜூலை 27 அன்று மறைந்தார். நமது பாடப்பகுதி அப்துல்கலாம் சொற்பொழிவுகள் என்னும் நூலிலிருந்து பகுதி எடுக்கப்பட்டது.

### செயல்பாடுகள்

- சிறுதுளி வனிதா அவர்கள் நடத்திய சாதனையைக் குறிப்பாக எழுதுங்கள்
- இந்திய விண்வெளி ஆராய்ச்சித் துறையில் பணிபுரிகின்ற பெண் விஞ்ஞானிகளையும் அவர்களின் சாதனைகளையும் பட்டியலிடுங்கள்.
- உங்கள் பள்ளியில் "கல்வியும் பாலின சமத்துவமும்" என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடைபெற உள்ளது. இந்நிகழ்வில் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் தலைமை தாங்குகிறார். அதற்கான சுவரொட்டி தயாரியுங்கள்.

## நிகர் ஷாஜி

சென்னை : சந்திரயான் 3–ஐத் தொடர்ந்து சூரிய ஆராய்ச்சிக்காக இஸ்ரோ அனுப்பும் ஆதித்யா எல் 1 திட்டத்தின் இயக்குநராக உள்ள தென்காசியைச் சேர்ந்த விஞ்ஞானி நிகர் ஷாஜி, தற்போது பிரபலமாகி வரும் நிலையில் பள்ளி, கல்லூரி படிப்பிலும் அவர் பல சாதனைகளைப் படைத்து இருக்கிறார்.



வெற்றிகரமாக நிலாவுக்கு அனுப்பப் பட்ட சந்திரயான் 3 திட்டம், சந்திரயான் 1, சந்திரயான் 2 என்று மூன்று திட்டங்களின் இயக்குநர்களும் தமிழர்கள் என நமது மக்கள் பூரித்து வரும் நிலையில் அடுத்து சூரியனை ஆராய்ச்சி செய்ய இஸ்ரோ அனுப்ப உள்ள ஆதித்யா எல் 1 திட்டத்தின் இயக்குநராகவும் தமிழரே செயல்படுகிறார் என்ற தகவல் நமது மக்களை மகிழ்ச்சியடைய வைத்து உள்ளது.

தென்காசி மாவட்டத்தைச் சேர்ந்த நிகர் ஷாஜி என்ற பெண் விஞ்ஞானிதான் இந்த திட்டத்தின் இயக்குநராக நியமிக்கப்பட்டு இருக்கிறார். தென்காசி மாவட்டம் செங்கோட்டை பகுதியைச் சேர்ந்த நிகர் ஷாஜியின் இயற்பெயர் நிகர் சுல்தானா. இவரது தந்தை ஷேக் மீரான். தாய் ஜைத்தூன் பீவி. இவர்களின் 2 வது மகள்தான் நிகர் ஷாஜி.

பள்ளிக் காலத்திலிருந்தே படிப்பில் கெட்டிக்காரராக இருந்து இருக்கிறார். செங்கோட்டை எஸ்.ஆர்.எம். அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் பயின்றுள்ளார்

உயர் கல்விக்காக நெல்லை அரசு பொறியியல் கல்லூரியில் இளநிலை பொறியியல் படித்த அவர். அதைத் தொடர்ந்து உலகப் புகழ்ப் பெற்ற பிர்லா இன்ஸ்ட்டிடியூட் டெக்னாலஜி நிறுவனத்தில் மேற்படிப்பு படித்தார்.

படிப்பை நிறைவு செய்த பின் இஸ்ரோவில் அவருக்குப் பணி கிடைத்தது. அமெரிக்காவில் அமைந்து இருக்கும் நாசா விண்வெளி ஆராய்ச்சி மையம் உட்பட பல்வேறு நாடுகளில் உள்ள விண்வெளி ஆராய்ச்சி நிறுவனங்களுக்குச் சென்று நிகர் ஷாஜி விண்வெளி ஆராய்ச்சி தொடர்பான கூடுதல் அனுபவங்களைப் பெற்று இருக்கிறார்.

நிகர் ஷாஜியின் கணவர் ஷாஜகான் துபாயில் பொறியாளராகப் பணிபுரிந்து வருகிறார். நிகர் ஷாஜிக்கு ஒரு மகனும் ஒரு மகளும் உள்ளனர். நெதர்லாந்தில் விஞ்ஞானியாகப் பணியாற்றி வருகிறார் நிகர் ஷாஜியின் மகன் முஹம்மது தாரிக். அவருடைய மகள் தஸ்னீம் பெங்களூரில் மருத்துவம் படித்து வருகிறார்.

தமிழ்நாட்டில் ஒரு கடைக்கோடி கிராமத்தில் பிறந்து கல்வியால் உயர்ந்து தலை சிறந்த உயர் கல்வி நிறுவனத்தில் சேர்ந்து இஸ்ரோவில் விஞ்ஞானியாகி அதன் பல்வேறு திட்டங்களில் பணிபுரிந்து தற்போது இஸ்ரோவின் சூரிய ஆராய்ச்சி செய்யும் மிக முக்கிய திட்டமான ஆதித்யா எல் 1 திட்டத்தின் இயக்குநராக உயர்ந்து நாட்டிற்குப் பெருமை சேர்த்துள்ளார்.

இணைய செய்திகளிலிருந்து தொகுக்கப்பட்டது.

## செயல்பாடுகள்

- உலகையே திரும்பிப் பார்க்க வைத்த பெண் விஞ்ஞானி நிகர் ஷாஜியின் தன் விவரப் பட்டியல் தயாரியுங்கள்.
- தேசிய அறிவியல் தினத்தன்று ஆதித்யா எல் 1 திட்ட இயக்குநர் நிகர் ஷாஜி அவர்கள் உங்கள் பள்ளிக்கு வருகை தர உள்ளார். அவரை வரவேற்பதற்கான வரவேற்புரை தயாரியுங்கள்.
- ஆதித்யா எல் 1 திட்ட இயக்குநர் நிகர் ஷாஜியிடம் நேர்காணல் நடத்தத் தேவையான வினாநிரல் உருவாக்குங்கள்.
- ஆண் – பெண் சமநிலையை எடுத்துரைக்கும் வகையில் தலையங்கம் தயார் செய்யுங்கள்.
- மூன்றாம் பாலினத்தவர் எதிர்கொள்ளும் பிரச்சினைகளையும் அவற்றிற்கான தீர்வுகளையும் விளக்கி கட்டுரை எழுதுங்கள்.



அலகு 3

# விண்ணைத் தொடுவோம்



ஒவ்வொரு காலகட்டத்திலும் ஊடகத் துறையில் பல்வேறு பரிணாம வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. மனிதனின் விரல் நுனியில் உலகம் இருப்பதன் காரணம் தகவல் தொழில் நுட்பத்தின் வளர்ச்சியே. இன்றைய நிலையில் மின்னணு ஊடகங்கள் இணையப் பயன்பாட்டு வசதியுடன் சார்ந்து தகவல் பரிமாற்றத்தை எளிமையாக்கியுள்ளது.

# மனிதனைப் போல



## செயற்கை நுண்ணறிவு

பிஞ்சுத் தோழர்களே,

செயற்கை நுண்ணறிவு என்கிறோம், சரி. ஆனால், அப்படி என்றால் என்ன? எளிமையாகச் சொன்னால் அப்படியே மனிதனைப் போலவே சிந்திக்கும் எந்திரங்கள். மனிதனைப் போலவே, புரிந்துகொள்ளும் எந்திரங்கள். மனிதனைப் போலவே நுண்ணறிவு கொண்ட எந்திரங்கள். ஒரு செயலை மனிதனைப் போலவே செய்யும் எந்திரங்கள். மனிதனைப் போலவே முடிவெடுக்கும் எந்திரங்கள். மனிதனைப் போன்ற எந்திரம் எந்திர மனிதன் – எந்திரன்.



மனிதனைப் போலவே என்றால்? ஒரு சிக்கல். மனிதன் ஒரு செயலை அவன் உடல் உதவியுடன் செய்கிறான், மதி (அறிவு) உதவியுடன் செய்கிறான். அப்படி என்றால் செயற்கை நுண்ணறிவு என்பது மனிதன் உடலைப் பற்றிச் சொல்லுகிறதா? அல்லது மனிதனின் மூளையைக் குறிக்கும் மதியைப் பற்றிச் சொல்கிறதா? இரண்டும் தான். மனிதனைப் போன்ற செயல்களில் ஈடுபடும் வன்பொருள் மற்றும் மென்பொருள் கொண்டு உருவாக்கப்பட்ட ரோபோ (Robot) என்று அழைக்கிறோம். வெறும் கணினி உதவியுடன் மென்பொருள் மட்டும் என்றால் அதை செயற்கை நுண்ணறிவு செயலி என்றழைக்கிறோம். ரோபோ என்றால்

செகோஸ்லோவேகிய மொழியில் 'அடிமை' என்று பொருள். இதை இன்னும் எளிமையாகப் புரிந்து கொள்வோம், மனிதன் சிந்திக்கிறான்; செயல்படுகிறான் அல்லவா? அதாவது சிந்திப்பது ஒரு செயல், நடைமுறையில் செயல்படுவது ஒரு செயல்.

நீங்கள் ஒரு கதை எழுதுகிறீர்கள் என்று வைத்துக் கொள்வோம், முழுக்க முழுக்க உங்கள் கற்பனைக் கதை. முதலில் ஒரு கதையை நீங்கள் சிந்திக்கிறீர்கள், பின்பு அந்தக் கதையை எழுதுகிறீர்கள். அதேபோல் நீங்கள் கற்பனையாக ஓர் ஓவியம் வரைகிறீர்கள் என்று வைத்துக் கொள்வோம். முதலில் அந்த ஓவியத்தைச் சிந்திக்கிறீர்கள், பின்பு அதை வரைகிறீர்கள்.

இந்த இரண்டு வேலையையும் எந்திரம் செய்ய வேண்டும். பகுத்தறிவுடன் சிந்திப்பது, பகுத்தறிவுடன் செயல்படுவது. ஒரு ரோபோ முன்பு ஒரே நேரத்தில் ஒரு கார் மூழ்கிக் கொண்டிருப்பதைப் பார்க்கிறது. இன்னொரு பக்கம் ஒரு சிறுமி மூழ்கிக் கொண்டிருக்கிறாள் என்றால் ரோபோ முதலில் யாரைக் காப்பாற்ற வேண்டும்? பகுத்தறிவுடன் சிந்தித்தால் சிறுமியைக் காப்பாற்ற வேண்டும்.

இந்த அடிப்படையைப் புரிந்து கொண்டால் நாம் செயற்கை நுண்ணறிவு என்பதை நான்கு விதமாக விளக்கலாம்.

1 மனிதனைப் போல் சிந்திப்பது: உதாரணம், கவிதை எழுதுவது. ஓவியம் வரைவது. ஒரு கேள்வி கேட்டால் புரிந்து கொண்டு பதில் சொல்வது.

2. மனிதனைப் போல் செயல்படுவது: எடுத்துக்காட்டாக ஒரு மனிதன் நடப்பது, ஓடுவது, நாட்டியம் ஆடுவது, ஒரு விளையாட்டைக் கற்றுக்கொண்டு விளையாடி வெல்வது.

3 பகுத்தறிவுடன் சிந்திப்பது: மனிதர்கள் அனைவரும் பகுத்தறிவுடன் சிந்திக்கிறார்கள் என்று சொல்லிவிட முடியாது. பல நேரங்களில் மனிதர்கள் பகுத்தறிவுடன் சிந்திக்காமல் தவறிழைத்து விடுகிறார்கள். ஆனால் நுண்ணறிவு என்று விளக்க முனைந்தால் பகுத்தறிவுடன் சிந்திப்பது என்பது மிகவும் அத்தியாவசியமாகிறது. எடுத்துக்காட்டாக மனிதன் எப்படி உருவானான் என்று நீங்கள் செயற்கை நுண்ணறிவைக் கேட்டால், அது கதை விடாமல் டார்வின் பரிணாமக் கொள்கையைப் பதிலாகக் கொடுக்கவேண்டும்.



4. பகுத்தறிவுடன் செயல்படுவது: நாம் ஏற்கனவே பார்த்த சிறுமி எடுத்துக்காட்டு தான். கடலில் ஓர் எந்திரம் முழ்கிக் கொண்டிருக்கிறது அதே நேரம் ஒரு சிறுமியும் முழ்கிக் கொண்டிருக்கிறாள்

என்றால், ரோபோ உடனடியாகச் சிறுமியைக் காப்பாற்ற முனைய வேண்டும். இது பகுத்தறிவுடன் செயல்படுவதற்கான ஓர் எடுத்துக்காட்டு.

ஒரு ரோபோவோ அல்லது ஒரு மென்பொருளோ மேலே நாம் பார்த்த நான்கு விதங்களில் செயல்பட்டால் அதைச் செயற்கை நுண்ணறிவு அமைப்பு என்று அழைக்கலாம்.

ஆனால் மனிதனின் சிந்தனையை ஒரே ஒரு கணிதத்தின் மூலம் ஓர் எந்திரத்திற்குப் புகுத்தி விட முடியாது என்பதுதான் உண்மை. 19 ஆம் நூற்றாண்டு இறுதியில் அறிவியல் வளர்ந்த வேகத்தில் சிந்திக்கும் எந்திரங்கள் சாத்தியம் எனப் பலர் முழுமையாக நம்பினார்கள்.

ஆனால், அந்தக் காலத்தில் இருந்த எந்திரங்கள் சிந்திப்பது என்பது எல்லாம் கனவில் கூட நினைத்துப் பார்க்க முடியாத ஒரு கற்பனை.

1940 களில் ஆலன் எனும் கணிதமேதை கணினி எந்திரங்கள் தொடர்பான ஆராய்ச்சிக் கட்டுரைகளை வெளியிட்டார். இன்று நாம் பயன்படுத்தும் நவீனக் கணினிகளின் தந்தை என்று இவரை அழைக்கலாம். இரண்டாம் உலகப்போரில் ஜெர்மன் நாஜிக்கள் மிகச் சிக்கலான எனிக்மா எனும் ரகசியக் குறியிலக்கத் தகவல் தொடர்பு சாதனத்தைப் பயன்படுத்தினார்கள். அதை முறியடிக்க ஒரே வழி என ஆலன் டூரிங் கணினியை உருவாக்கினார். நவீனக் கணினிக்கும் அதற்கும் வேறுபாடு உண்டு என்றாலும், ஓரளவு நவீனக் கணினியின் ஆரம்ப வடிவம் என இதை அழைக்கலாம். இதன் வெற்றி தான் அவரை செயற்கை நுண்ணறிவு பற்றிச் சிந்திக்க வைத்தது.

– விநோத் ஆறுமுகம்

இந்தக் கட்டுரை பெரியார் பிஞ்சு இதழில் விநோத் ஆறுமுகம் என்பவரால் எழுதப்பட்டது.

## செயல்பாடுகள்

- செயற்கை நுண்ணறிவு பற்றிச் சிறு சொற்பொழிவைத் தயாரியுங்கள்.
- செயற்கை நுண்ணறிவின் பிரிவுகளை வரிசைப்படுத்துங்கள்.
- உமது பள்ளித் தகவல் தொழில் நுட்ப மன்றம் தயாரித்த ரோபோவிற்கு ஏற்ற விளம்பரம் தயார் செய்யுங்கள்.

## அன்பான அறிவியல்

ஒரு விவசாயி, தன் வேலைக்காரர்கள், தான் ஏவியபடிச் சரியாக வேலை செய்யவில்லையென்று வருந்தினார். எடுத்துச் சொல்லியும் வேலைக்காரர்கள் கேட்கவில்லை. கோபம் அடைந்த அவர் கடவுளை நோக்கித் தவம் செய்தார்.

விவசாயியின் முன் கடவுள் தோன்றினார். "பக்தனே உன் தவத்தினை மெச்சினேன்", உனக்கு என்ன வரம்வேண்டும் என்றார்.

"ஆண்டவரே, மனிதர்கள் நான் விரும்புவது போல வேலை செய்யவில்லை. அவர்கள் சோம்பேறித் தனம் எனக்கு வெறுப்புத் தருகிறது. ஓயாமல் சளசளவென்று பேசுகிறார்கள். வேலையிலும் சுத்தமில்லை, வேகம் இல்லவே இல்லை."

"அதற்கு நான் என்ன செய்ய வேண்டும்?" ஆண்டவர் கேட்டார்.

"நான் ஏவுகிற படி வேகமாகவும் கறாராகவும் வேலை செய்கிற ஒரு வேலைக்காரன் வேண்டும் ஆண்டவரே," என்றார் விவசாயி. கடவுள் லேசாகச் சிரித்துவிட்டுச் சொன்னார். "நீ கேட்ட வரம் தருகிறேன். ஆனால் ஒரு நிபந்தனை."

விவசாயிக்குத் தாங்க முடியாத மகிழ்ச்சி. "நீங்கள் எந்த நிபந்தனை போட்டாலும் ஏற்றுக்கொள்கிறேன் ஆண்டவரே. அந்த வேலையாளை எனக்குக் கொடுங்கள்."

"நிபந்தனையைச் சொல்லுகிறேன் கேள்" என்றார் கடவுள். அந்த வேலையாள் எந்த வேலையையும் விரைவாகவும் – சரியாகவும் செய்வார். ஆனால் தான் தங்குமிடத்தை அவர் பாழ்படுத்தி விடுவாரே! என்றார். அதுபற்றிக் கவலை இல்லை. என்றார் விவசாயி.

"இன்னொன்று, அவரால் வேலையில்லாமல் இருக்கவே முடியாது. நீ வேலை கொடுக்கவில்லையென்றால், மறு கணம் அவர் உன்னையே சாப்பிட்டுவிடுவார்". ............



"வேலை கொடுப்பதா பெரிசு? முதலில் வேலையாளைக் கொடுங்கள். மற்றவைகளை நான் பார்த்துக்கொள்கிறேன்" என்றார் விவசாயி. ஆண்டவர் அவர் முன்னால் ஒரு வேலையாளை நிறுத்திவிட்டு மறைந்துவிட்டார்.

அந்த வேலையாள் இரும்பாலானவர். நல்ல உயரம். கண்கள் இரண்டும் கண்ணாடி உருளைகள். மலைப் பாம்புக்குப் போல் வாய் அகலமாகவும் எதையும் விழுங்கக் கூடியதாகவும் இருந்தது. அதன் இதயம் கரகரவெனச் சதா இரைந்து கொண்டிருந்தது. மூக்கிலிருந்து புகை வந்துகொண்டிருந்தது.

"வேலை கொடு" அந்த எந்திரம் இரும்புக் குரலில் உறுமியது.

விவசாயிக்குச் சந்தோசம் தாங்கமுடியவில்லை.

"வயலை உழுது போடு!" அவர் தன் வயல்காடுகளைச் சுட்டிக் காட்டினார். அந்த



எந்திரம் கண்ணை மூடித் திறப்பதற்குள் எல்லா வயல்களையும் உழுதுவிட்டது. ஆனால் அது நடந்த பாதையிலோ புல் பூண்டு அழிந்துவிட்டது. ஆனாலும் விவசாயி கவலைப்படவில்லை.

"தண்ணீர் பாய்ச்சு" அடுத்து ஆணையிட்டார் அவர். அது மண்ணைத் துளைத்துத் தண்ணீரை உறிஞ்சி, எல்லா இடத்துக்கும் பாய்ச்சியது.

"விறகுகளையெல்லாம் வெட்டி உடைத்து அடுக்கி வை".

அந்த வேலையையும் அது முடித்தது, இப்படியே அவர் கொடுக்க வேண்டிய வேலையையெல்லாம் கொடுத்தார். எல்லாவற்றையும் உடனுக்குடன் முடித்துவிட்டு, அந்த எந்திரம் அவரைத் தன் பீங்கான் கண்களால் உற்றுப் பார்த்தது, "வேலை கொடு!" விவசாயி நடுங்கத் தொடங்கினார்.

"செய்வதற்குரிய எல்லா வேலைகளும் முடிந்துவிட்டது. இனி என்ன செய்ய?"

"சற்றுப் பொறுப்பா, யோசிக்கிறேன்", என்றார்.

"யோசிக்க நேரமில்லை. வேலை கொடு! தன் எஃகு விரல்களை விரித்துக்கொண்டு வாயைப் பிளந்தது எந்திரம்.

–பொன்னீலன்.

**பொன்னீலன்:** இவரது இயற்பெயர் முகண்டேஸ்வர பக்தவத்சலன். இவர் கன்னியாகுமரி மாவட்டத்தில் 1940 ல் பிறந்தார். 1976 இல் வெளிவந்த கரிசல் என்ற நாவலைத் தொடர்ந்து ஊற்றில் மலர்ந்தது, புதிய தரிசனங்கள், தேடல், மறுபக்கம், பிச்சிப்பூ போன்றன இவரது படைப்புக்கள். இவரின் நாவல்களுள், புதிய தரிசனங்கள் என்ற நாவலுக்கு சாகித்ய அகாதமி விருது கிடைத்துள்ளது.



## செயல்பாடுகள்

- அன்பான அறிவியல் என்ற கதையை விமர்சனம் செய்து எழுதுங்கள்.
- அறிவியல் தொடர்பான கதைகளைத் திரட்டி வெளியிடுங்கள்.
- அன்பான அறிவியல் என்ற கதையை நாடக வடிவில் எழுதி நடியுங்கள்.

## மோமோ

சங்கரின் ஆய்வுக்கூடம் நகரிலிருந்து சற்றுத் தொலைவில் உள்ள ஒரு மலையடிவாரத்தின் அருவிக்கரையில் அமைந்திருந்தது.

அதிகாலை வேளை பறவைகளின் கீச் ... கீச்.. ஒலியில் மெதுவாக கண் விழித்தனர் செழியனும் இனியாவும்.

இருவரும் சிறிய மலையருவி ஒன்றில் மேகங்கள் தழுவிச் செல்லும் அழகிய காட்சியையும் அணில் ஒன்று ஜன்னலின் அருகில் உள்ள மரக்கிளையில் துள்ளி விளையாடும் அழகினையும் ரசித்துக் கொண்டு இருந்தனர்.

சீக்கிரமாகவே எழுந்திட்டீங்க போல! என்று கேட்டுக் கொண்டே சங்கர் அறைக்குள் நுழைந்தார். இருவரும் பாதி தூக்கத்துடனே தலையசைத்தனர்.

உங்களிடம் ஒரு முக்கியமான விஷயம் சொல்ல வேண்டும்.

இருவரும் ஆச்சரியத்துடன் சங்கரின் முகத்தைப் பார்த்தனர்.

ஆர்ட்டிக் பகுதியில் உள்ள நமது ஆராய்ச்சிக் கூடமான கங்கோத்ரி, மைத்ரி ஆய்வு மையத்திற்கு நான் அவசரமாக வரவேண்டும் என அழைப்பு வந்துள்ளது. எனவே நான் இப்போதே புறப்பட வேண்டும்.

அதைக்கேட்ட இருவரும் சிறிது அதிர்ச்சியுற்றனர். நீங்க ஊருக்குப் போயிட்டா நாங்க என்ன பண்றது மாமா! என்று சோகமாகக் கேட்டாள் இனியா .




கவலைப்படாதீங்க! மோமோ உங்களைப் பார்த்துக் கொள்ளும். அதற்கான புரோகிராமையும் பண்ணிட்டேன். நீங்க என்ன பண்றீங்கன்னு நான் ஆன்லைன் மூலம் கவனித்துக் கொண்டுதான் இருப்பேன் சரியா! நேரமாச்சு நான் ஏர்போர்ட்டுக்குப் போகணும். நீங்கள் என்னை வழியனுப்ப ஏர்போர்ட் வரை வருவதாக இருந்தால் புறப்படுங்கள் என்றார்.

அரைகுறை மனதுடன் இருவரும் தயாராகி விமான நிலையம் வரைச் சென்று சங்கரை வழியனுப்பி வைத்தனர்.

சரி இப்போது எப்படி வீட்டுக்குத் திரும்பிச் செல்வது? மோமோ உனக்கு கார் ஓட்டத் தெரியுமா? என்றாள் இனியா.

இது ஸ்மார்ட் கார். நாம் போக வேண்டிய இடத்தின் பெயரைக் கொடுத்தால் போதும்; அதுவே கொண்டு போய் விட்டுவிடும். ஓட்டுநர்





தேவை இல்லை என்றது மோமோ.

ஓ... அப்படியா! ஆச்சரியமாக உள்ளது எனச் சொல்லிக் கொண்டே இருவரும் காரில் ஏறி சீட்பெல்ட்டு அணிந்து கொண்டனர். கார் மெதுவாகப் புறப்பட்டு வீட்டை அடைந்தது. சரி, மோமோ நீ எப்படி எங்களைப் பார்த்துக் கொள்வாய் என்றாள் இனியா.

சங்கர் சார் என்னைச் செயற்கை நுண்ணறிவுடன் வடிவமைத்துள்ளார். அதுபோக கடந்த இரண்டு வருடங்களாக இயந்திரக் கற்றல் (Machine Learning) மூலம் எனக்கு பயிற்சியும் அளித்துள்ளார்.

இயந்திரக் கற்றலா! புதியதாக உள்ளதே, அப்படி என்றால் என்ன மோமோ? ஆச்சரியத்துடன் கேட்டாள் இனியா.

இயந்திரக் கற்றல் என்றால் என்ன? என்று சொல்வதற்கு முன்பு செயற்கை நுண்ணறிவு என்றால் என்ன? என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

மனிதனைப் போலவே இயங்கும் இயந்திரங்களைச் செயற்கை நுண்ணறிவு இயந்திரங்கள் என்பர். கரெக்ட்தானே மோமோ! என்றான் செழியன். ரொம்ப கரெக்ட் செழியா. உனக்கு எப்படி இது தெரியும்?

எங்கள் பள்ளிப் புத்தகத்தில் செயற்கை நுண்ணறிவு ரோபோ பற்றி பாடம் உள்ளது. அதைப் படித்துத் தெரிந்து கொண்டேன் மோமோ.

அப்படியா? சந்தோசம். அப்படி என்றால் உங்களுக்குப் புரிய வைப்பது எனக்கு எளிது.

எனக்கு செயற்கை நுண்ணறிவு பற்றிக் கொஞ்சம் தெளிவாகச் சொல்லு மோமோ! என்றாள் இனியா.

ம்... சொல்றேன் கேளுங்க.

மனிதன் ஒரு விஷயத்தைத் தன் மூளையினால்

### ஆண்ட்ராய்டு குஞ்ஞப்பன்

2019 ஆம் ஆண்டு மலையாள மொழியில் வெளிவந்த திரைப்படம் 'ஆண்ட்ராய்டு குஞ்ஞப்பன்.' ஒரு வயதான அப்பாவைப் பராமரிப்பதற்கு மகன், மனித வடிவிலான ஒரு ரோபோவை வீட்டிற்குக் கொண்டு வருகிறான் அந்த ரோபோவால் வயதான மனிதர் வாழ்க்கையில் ஏற்பட்ட மாற்றங்களை இத்திரைப்படம் நகைச்சுவையுடன் சித்தரிக்கிறது.

பகுப்பாய்ந்து முடிவுகளை எடுப்பான். அதுபோல செயற்கை நுண்ணறிவு கொண்ட ரோபோக்களும் மனிதன் போலவே நிரல்கள் (Programme) மூலம் சிந்தித்து முடிவு எடுக்கும். இதனைச் செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence) என்பர்.

மனிதர்களைப் போல சிந்தித்து கரெக்டான முடிவு எடுக்குமா? செழியனும் இனியாவும் இணைந்து கேட்டனர்.

மனிதர்களைப் போல அல்ல, மனிதர்களைவிடச் சிறப்பாக முடிவு எடுக்கும் இனியா. அப்படியா! என்று ஆச்சரியத்துடன் வாயைப் பிளந்தாள் இனியா

1997–ஆம் ஆண்டு ஐ.பி.எம். (IBM) நிறுவனம் உருவாக்கிய செஸ் விளையாடும் கணினி மனிதர்களுடன் போட்டிப் போட்டு பலமுறை வென்றிருக்கிறது. 2011–இல் வாட்சன் என்ற கணினி தொலைக்காட்சி பொது அறிவு நிகழ்வில் கலந்துகொண்டு வெற்றி பெற்றுள்ளது.

ஓ.. அப்படியா! என்னால் நம்பவே முடியவில்லை ஆச்சரியமாக இருக்கு மோமோ! என்றான் செழியன்.

அதுபோலவே நானும் செயற்கை நுண்ணறிவுடன் கூடிய ஒரு ரோபோட். அதனால் தான் என்ன நம்பி உங்கள் இருவரையும் சங்கர் சார் விட்டுச் சென்றுள்ளார்.

இயந்திரக் கற்றல் என்றால் என்ன? என்று சொல்கிறேன் என்று சொன்னாயே மோமோ அதுபற்றிச் சொல்; கேட்க மிகவும் ஆவலாக உள்ளேன்.

உங்களுக்கு சைக்கிள் ஓட்டத் தெரியுமா?

சைக்கிள் ஓட்டுவதற்கும் இயந்திரக் கற்றலுக்கும் என்ன சம்பந்தம்?

சொல்கிறேன். உங்களுக்கு சைக்கிள் ஓட்டத் தெரியுமா என்பதை முதலில் சொல்லுங்கள். ம்ம்... இரண்டு பேருக்கும் நன்றாக ஓட்டத் தெரியும்.

முதலில் சைக்கிள் ஓட்டப் பழகும்போது தட்டுத்தடுமாறி பலமுறை விழுந்து இருப்பீரகள். அதன்பின் தவறுகளைச் சரிசெய்து கொண்டு கொஞ்சம் கொஞ்சமாக நன்றாக ஓட்டிப் பழகி இருப்பீர்கள்: சரிதானே?

ஆமாம்! என்று இருவரும் தலையசைத்தனர்.

அதுபோல இயந்திரங்கள் செய்த தவறை, தாங்களாகவே சரி செய்து தங்களை மேம்படுத்திக் கொள்வது இயந்திரக் கற்றல்.

புரியவில்லை! கொஞ்சம் புரியும்படி சொல்லு மோமோ...

"உங்களை மிகவும் புத்திசாலி என்று நினைத்துவிட்டேன்" என்று கூறி மோமோ அவர்களைக் கேலி செய்தது.

இயந்திரத்தால் சுயமாகச் சிந்திக்க முடியாது. நாம் கொடுக்கும் தரவுகள் மற்றும் நிரல்கள் அடிப்படையிலேயே அது இயங்குகிறது. உதாரணமாக

ஒரு வாழைப்பழத்தை அதனிடம் காண்பித்து இதன் பெயர் வாழைப்பழம் என்று கற்றுத் தந்தால், அது அதனின் அளவு, நிறம் ஆகியவற்றைக் கொண்டு நினைவில் வைத்துக் கொள்ளும். நீங்கள் மறுபடியும் வாழைப்பழத்தைக் காண்பித்து என்ன என்று கேட்டால் உடனே கூறிவிடும். ஆனால் செவ்வாழையைக் காண்பித்துக் கேட்டால் அது பதில் சொல்லாது, அல்லது தவறான பதில் சொல்லும். ஏனென்றால் வாழைப்பழம் என்றால் அது மஞ்சள் நிறம் என்று மட்டும் அதன் நினைவில் இருக்கும். இந்தத் தகவலை சரிசெய்ய செவ்வாழை, பச்சை வாழைப்பழம் போன்ற பலவகை வாழைப் பழங்களைக் காட்டி அதற்குப் பயிற்சி கொடுக்க வேண்டும். இதன்மூலம் அது தன் தவறைத் திருத்திக் கொள்ளும். அதன் துல்லிய தன்மையும் அதிகரிக்கும். இதுவே இயந்திரக் கற்றல்.

இப்போது புரிகிறதா...

ஓ.....நன்றாகப் புரிகிறதே ரொம்ப தேங்க்ஸ் மோமோ. மிகவும் தெளிவாக விளக்கினாய்.

ரொம்ப போர் அடிக்கிறது. ஒரு விளையாட்டு விளையாடலாம் மோமோ என்றான் செழியன்.

ம்ம்.. நான் ரெடி நீங்க ரெடியா?

இது கேள்வி பதில் விளையாட்டு, கேள்விகளுக்கு ஒரு வார்த்தை அல்லது ஒரு வரியில் பதில் சொல்ல வேண்டும் என்றான் செழியன்.

கேள்விகளை நீங்கள் கேட்கிறீர்களா? அல்லது நான் கேட்கட்டுமா? என்றது மோமோ.

அய்யோ! எங்களுக்கு கேள்வி கேட்க மட்டும்தான் தெரியும். அதுவும் கம்ப்யூட்டரைப் பார்த்து தான் கேள்விகளைக் கேட்போம்.

கேளுங்கள்! கேட்டுப் பாருங்கள் என்று, வேகமாக தலையை அசைத்துக் கொண்டேக் கூறியது மோமோ.

| | | |
|---|---|---|
| இனியா | : | சிந்திக்கும் இயந்திரங்களை உருவாக்க முடியும் என்று கூறியவர்? |
| மோமோ | : | பிரிட்டனைச் சேர்ந்த ஆலன் டியூரிங் |
| செழியன் | : | செயற்கை நுண்ணறிவு என்ற பெயரை முன்மொழிந்தவர்? |
| மோமோ | : | ஜான் மெக்கார்த்தி, |
| செழியன் | : | முதன்முதலில் செயற்கை நுண்ணறிவுடன் பதிலளித்த இயந்திரம் சாட்போட் (Chat Bot) எது? |
| மோமோ | : | எம்.ஐ.டி (MIT – Massachusehts Instsitute of Technolo–gy)–ஆல் உருவாக்கப்பட்ட எலிசா என்ற சாட்போட் (Chat Bot). |
| செழியன் | : | முதன்முதலில் குடியுரிமை பெற்ற ரோபோட் எது? |
| மோமோ | : | சோபியா. |

செழியன் : இயந்திரக் கற்றல் எனும் சொல் யாரால் முதன் முதலில் பயன்படுத்தப்பட்டது?

மோமோ : 1959–இல் ஐ.பி.எம். (IBM – International Business Machines) நிறுவனப் பொறியாளர் ஆர்தர் சாமுவேல் என்பவரால் பயன்படுத்தப்பட்டது. போதும்.. போதும்.. எல்லாக் கேள்விகளுக்கும்

உனக்கு விடை தெரிகிறதே, சபாஷ் மோமோ என்று மோமோவை மகிழ்ச்சி பொங்க பாராட்டினாள் இனியா!

இப்போது சாட் ஜிபிடி (Chat GPT) என்ற செயற்கை நுண்ணறிவு கொண்ட சாட் பாட் பற்றியச் செய்தி அடிக்கடி செய்தித்தாள்களில் இடம்பெறுகிறது. அதுபற்றி சொல்லு மோமோ என்றான் செழியன்.

எனக்குப் பசிக்கிறது. சாப்பிட்டுவிட்டு போசுவோம் என்றாள் இனியா.

உங்களிடம் பேசிக்கொண்டே இருந்ததால் உங்களுக்கான உணவுகளைச் சமைக்க மறந்துவிட்டேன் உனக்குச் சமைக்கத் தெரியுமா? என்று ஆச்சரியத்துடன் இருவரும் ஒருசேர மோமோவிடம் கேட்டனர். எல்லாமே கம்ப்யூட்டரில் புரோக்ராம் செய்யப்பட்டுள்ளது. உணவின் பெயரைப் பதிவிட்டால் போதும் 10 நிமிடத்தில் இங்குள்ள ஸ்மார்ட் கிச்சன் மூலம் ரெடியாகிவிடும். நான் உங்களுக்குப் பரிமாறுவது மட்டுமே என் வேலை.

சங்கர் சாரின் சூப்பர் கண்டுபிடிப்புகள் இவையெல்லாம் என்று கூறிக்கொண்டே ஸ்மார்ட் கிச்சனை நோக்கி நடந்தது மோமோ. இனியாவும் செழியனும் ஆச்சரியத்துடன் மோமோவைப் பின்தொடர்ந்தனர்.

– பேராசிரியர் இளையராஜா

'நமது அறிவியல்' என்ற இதழிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது. இக்கட்டுரையின் ஆசிரியர் பேராசிரியர் இளையராஜா.

## செயல்பாடுகள்

- மோமோ என்ற ரோபோவின் செயல்பாடுகளைக் கலந்துரையாடிக் குறிப்பு எழுதுங்கள்.
- மோமோ என்ற கதையை நாடக வடிவில் எழுதுங்கள்
- மோமோ என்ற பகுதியில் இடம்பெற்ற உரையாடலைத் தனிநபர் நடிப்பாக நடியுங்கள்
- பாடப்பகுதியில் இடம்பெற்ற ஆங்கிலச் சொற்களைக் கண்டறிந்து அதற்கு இணையான தமிழ்ச் சொற்களை எழுதுங்கள்.



# உள்ளங்கையில் உலகம்



## யுடியூப் மாயாஜாலங்கள்

யுடியூப்' மாயாஜாலங்கள் விவரம் தெரிந்த மழலைகள் முதல் தள்ளாடும் தாத்தா–பாட்டிகள் வரை ஸ்மார்ட் செல்போனைப் பயன்படுத்துவது தொழில்நுட்ப வளர்ச்சியின் சாதனைக்குச் சிறந்த எடுத்துக்காட்டு. அதிலும் குறிப்பாக மாணவ, இளைய சமுதாயத்தைச் சொல்ல வேண்டும். செல்போன்களின் ஆதிக்கத்தில் சிக்கிக்கிடக்கிறார்கள். வாட்ஸ்அப், முகநூல், டுவிட்டர் என்று சமூக வலைத்தளங்கள் அவர்களை வளைத்துப்போட்டு உள்ளன. இணைய தள வசதி கொண்ட செல்போன்களில் சமூகவலைத்தளங்கள் மட்டுமின்றி இன்னும் பல இணைய தளங்களும் அதிக பயன்பாட்டில் உள்ளன. அவற்றில் முன்னணியில் இருப்பது 'யுடியூப்' என்ற வீடியோ பகிர்வு இணையதளம். உலகில் எந்த ஒரு மூலையிலும் ஏதாவது வித்தியாசமான சம்பவங்களோ, நிகழ்வுகளோ நடந்தால் உடனடியாக இந்த இணைய தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுவிடும். அதுமட்டுமின்றி பொதுஅறிவு, அறிவியல், சமூகம், விளையாட்டு, மருத்துவம், விஞ்ஞானம், கல்வி, பொழுதுபோக்கு அம்சங்கள், வர்த்தகம்,



அரசியல் உள்ளிட்ட அத்தனை தேவைகளுக்கும் வீடியோ பதிவுகள் மூலம் விளக்கம் பெற வேண்டுமானால், இந்த இணைய தளம் மிகவும் உதவிகரமாக இருக்கிறது. இதனால் கோடிக்கணக்கானோர் இந்த இணைய தளத்துக்கு ரசிகர்களாக இருக்கிறார்கள். மாயாஜாலங்கள் நிறைந்த 'யுடியூப்' வீடியோ பகிர்வு இணைய தளம் தோன்றிய விதம் சுவாரசியமானது. இதை உருவாக்கியவர்கள் கம்ப்யூட்டர் பட்டதாரிகள் 3 பேர். அமெரிக்கா பென்சில்வேனியாவில் உள்ள இண்டியானா பல்கலைக்கழகத்தில் கம்ப்யூட்டர் டிசைனிங் படித்த சாட்ஹர்லி மற்றும் இலினாய்ஸ் பல்கலைக்கழகத்தில் கம்ப்யூட்டர் அறிவியல் படித்த ஸ்டீவ்சென், ஜாவித்கரீம் ஆகிய 3 பேர் சேர்ந்து உருவாக்கினார்கள். இவர்கள் மூவரும் பேபால் என்ற நிறுவனத்தில் பணியில் இருந்தபோது, இந்த இணைய தளம் கடந்த 2005–ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 14–ஆம் தேதி இரவு 9.13 மணிக்குச் செயல்பாட்டுக்கு வந்தது. அதே ஆண்டில் ஏப்ரல் மாதம் 23– ஆம் தேதி அந்த இணைய தளத்தில் வீடியோ பதிவேற்றும் வசதி கொண்டுவரப்பட்டது. 'யுடியூப்' இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்ட முதல் வீடியோ காட்சியின் தலைப்பு 'மிருககாட்சி சாலையில் நான்" என்பதாகும். அதில் முதலில் தோன்றியவர் இணைய தளத்தை உருவாக்கியவர்களுள் ஒருவரான ஜாவித்கரீம். இவர் சான்டிகோ என்ற மிருக காட்சி சாலையில் இருந்தபோது எடுத்த வீடியோவைத்தான் முதலில் பதிவேற்றம் செய்தனர். இது தொடங்கப்பட்ட சிறிது காலத்திலேயே உலக அளவில் சிறப்பான வளர்ச்சியைக் காண ஆரம்பித்தது. 2006–ஆம் ஆண்டு ஜூலை மாதத்திலேயே ஒரு நாளைக்கு 10 கோடி வீடியோ காட்சிகளைக் காண்பிக்கும் அளவுக்கு வளர்ச்சி பெற்று அலெக்சாவில் 5–ஆவது அதிபிரசித்தி பெற்றதாக மாறியது. இதை மாதத்துக்குச் சராசரியாக 20 கோடி பேர் பார்வையிடுகிறார்கள் என்று 2006–ம் ஆண்டிலேயே நீல்சன்நெட் சர்வேயில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் வளர்ச்சியைக் கண்ட கூகுள் நிறுவனம் 2006–ம் ஆண்டிலேயே 'யுடியூப்'பை வாங்கிக் கொண்டது. அதன்பிறகு 'யுடியூப்' வளர்ச்சிப் பாதையில் வேகமெடுத்தது. சி.என்.என், எம்.ஜி.எம், ஏ.பி.எஸ் போன்ற









நிறுவனங்களுடன் இணைந்து டி.வி. நிகழ்ச்சிகள், உரையாடல்கள், முழுநீள திரைப்படங்கள், விளையாட்டுகள் போன்றவற்றை வழங்கியது. 2009–ஆம் ஆண்டில் 4 ஆயிரம் முழுநீள நிகழ்ச்சிகளை 60 பங்குதாரர்களுடன் இணைந்து வெளியிட்டது. 2010–ஆம் ஆண்டில் இந்தியன் பிரிமீயர் லீக் எனும் 60 ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டிகளைத் தனது இணைய தளத்தில் பதிவேற்றம் செய்து அத்துணைக் கிரிக்கெட் ரசிகர்களையும் தன்வசம் ஈர்த்துக் கொண்டது. 'யுடியூப்'. இதன்மூலம் உலக அளவில் முதன் முதலாக மிகப்பெரிய கிரிக்கெட் போட்டிகளை இலவசமாக வெளியிட்ட பெருமையைத் தக்கவைத்துக் கொண்டது. பல்வேறு மாற்றங்களைச் செய்து வந்த 'யுடியூப்'பில் 2012–ஆம் ஆண்டு டிசம்பர் 4–ஆம் தேதி முதல் செல்போன் மற்றும் டேப்லெட்டுகளில் (கையடக்க கணினி) பார்க்கும் வசதி ஏற்படுத்தப்பட்டது. அன்று முதல் கம்ப்யூட்டர்களில் ஆதிக்கம் செலுத்தி வந்த 'யுடியூப்', செல்போன்கள் மற்றும் டேப்லெட்டுகளிலும் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கியது. அதன்பிறகு 2013–ஆம் ஆண்டில் 'யுடியூப்' வீடியோ இணைய தளத்தைப் பார்க்கும் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை மாதத்துக்கு 100 கோடியைத் தாண்டிவிட்டதாக அந்நிறுவனம் கணக்கெடுத்துள்ளது.

இந்த எண்ணிக்கை இப்போது பலநூறு கோடிகளைத் தாண்டிவிட்டது. பல்வேறு புதுமை வீடியோக்களைப் பதிவேற்றம் செய்து வந்த இந்த நிறுவனம் மொழி வாரியாகவும் தனது எல்லைகளை விரிவடையச் செய்ய தவறியதில்லை. ஆங்கிலம், போர்ச்சுக்கீசியம், இத்தாலி. ஜப்பானிஷ், ஸ்பானிஷ், சீன மொழி, பிரெஞ்ச், அரேபியம் என்று உலக மொழிகள் பலவற்றைப் புகுத்திய 'யுடியூப், இந்தியாவில் 2008–ஆம் ஆண்டு இந்தி, வங்காளம், ஆங்கிலம், குஜராத்தி, கன்னடம், மலையாளம், தமிழ், மராட்டியம், தெலுங்கு மற்றும் உருது ஆகிய மொழிகளைத் தன்னுள் ஏற்றுக் கொண்டது. நிறுவனம் தொடங்கப் பட்டபோது கலிபோர்னியாவில் உள்ள சான் மேத்யோ என்ற ஜப்பானிய உணவகக் கட்டிடத்தில் செயல்பட்டது. தற்போது இதன் தலைமையகம் கலிபோர்னியாவில் சான்புருனோவில் செயல்படுகிறது. சிறந்த ஜனநாயகத்தை உருவாக்கும் வகையில் 'ஸ்பீக்கர்ஸ்

கார்னர்ஸ்' என்ற உரையாடல் நிகழ்ச்சியை நடத்தியதற்காக 'பேபாடி' என்ற விருது, சிறந்த வீடியோக்களை வெளியிட்டதற்காக சிறப்பு விருதுகள் என 'யுடியூப்' பல்வேறு விருதுகளை அள்ளி இருக்கிறது. பல்வேறு வீடியோ இணைய தளங்களுக்கு நடுவே நீண்டகாலமாக பலதரப்பட்ட மக்கள் மனதில் நிலைத்து நிற்கும் தனித்துவம் கொண்ட 'யுடியூப்' செயல் பாட்டுக்கு வந்த தினம் பிப்ரவரி 14.

இணைய செய்திகளிலிருந்து தொகுக்கப்பட்டது.

### செயல்பாடுகள்

- பாடப்பகுதியில் இடம்பெற்ற அறிவியல் சொற்களுக்குப் பொருத்தமான தமிழ்க் கலைச் சொற்களைக் கண்டறிந்து எழுதுங்கள்.
- யுடியூப் தினத்தன்று மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் முறையில் துண்டுப் பிரசுரம் தயார் செய்யுங்கள்.
- யுடியூப்பினால் ஏற்படும் நன்மை தீமைகளை எழுதுங்கள்.

## முகநூல் தன் வரலாறு கூறுதல்

முகநூல் என்று அன்போடு அழைக்கப்படும் நான் பிறந்த இடம் ஹார்வர்ட் பல்கலைக்கழகம். பிறந்த நாள் 04–02–2004 ஆகும். மார்க் சுக்கர் பர்க் என்ற மாணவர் தான் என்னை உருவாக்கினார்.

இணைய வழியில் இரண்டாவது பிரபலமாக நான் இருப்பது எனக்கு மிகுந்த பெருமையாகத்தான் இருக்கு

என்னுடைய சேவை இன்று உலக அளவில்,மனித வாழ்வில் ஒரு அங்கமாகவே ஆகிவிட்டது.




அகநக நட்பு என்பது உருமாறி இன்று முகமறியா நட்பால் நாடு, இனம், மொழி என்பதையே மறந்து மனித உறவுகள் பரந்து விரிந்து கடல் கடந்தும் தழைத்துக் கொண்டிருக்கிறது.

நான் ஆங்கிலம் பேசுகிற நாட்டில் பிறந்ததால் எனக்கு 'பேஸ்புக்' என்று ஆங்கில மொழியிலேயே பெயரை வச்சிட்டாங்க.. தமிழ் மொழியில் எனக்கு முகநூல் என்று பெயர் வைத்திருப்பது பாராட்டுக்குரியது. ஆன்ட்ராய்ட் போன் வைத்திருக்கும் கைபேசி அனைத்திலும் நான் இருப்பது எனக்கு ரொம்பவும் ஆனந்தமாக உள்ளது.



என் பெயரைச் சொல்லி என்னைப் பலபேர் நன்றாக பயன்படுத்துகிறார்கள். சில பேர் தவறான வழியில் என்னைப் பயன்படுத்துவது எனக்கு வருத்தமாகத் தான் இருக்கிறது. என்னை உருவாக்கும் போதே எனக்குச் சில கோட்பாடுகளையும் வகுத்திருந்தனர். ஆனாலும் அதையெல்லாம் மீறி என் மூலமாக பல தவறான செயல்களைச் செய்வது தொடர் கதையாகவே உள்ளது.

முகநூலான என் மூலமாக பலபேர் உலகத்தில் நடக்கும் அன்றாட நிகழ்வுகளைத் தினசரி தனது பெயரில் பதிவு செய்துகொண்டு இருப்பது அனை வருக்கும் பயனுள்ளதாக இருக்கிறது. ஒருவருக்கு விபத்து ஏற்பட்டு உயிருக்குப் போராடும் சூழ்நிலையில், அவருக்குத் தேவையான இரத்தம் பெறுவதிலிருந்து பாதிக்கப்பட்டவரின் உறவினர்கள் அவர் சிகிச்சை பெறும் மருத்துவமனைக்கு உடனடியாகச் சென்று பார்க்கக்கூடிய வசதியும் என் மூலமாகக் கிடைக்கிறது.

என் வழியாகப் பெரிய வர்த்தக நிறுவனங்களின் விளம்பரங்கள் வெளிவரும் போது அந்த நிறுவனங்கள் பொது மக்கள் மத்தியில் பிரபலமாகி அவர்களின் தயாரிப்புகள் அதிக அளவில் விற்பனையாகிறது. வர்த்தகமும் பெருகிக் கொண்டே இருக்கிறது. ஏழ்மை நிலையில் இருக்கும் குடும்பத்திற்கு உதவும் களமாகவும் நான் இருக்கிறேன். முகநூலாகிய நான் உலக அளவில் ஒரு பொதுத் தளமாகவே இருப்பதை நீங்கள் நினைவில் வைத்துக் கொள்ளவேண்டியது அவசியமாகும்.

ஏழ்மையான என் குழந்தை இதய நோயால் அவதிப்படுவதாகவும், அறுவை சிகிச்சை செய்ய அவசரமாகப் பணம் தேவை என்று பொய்யான தகவலைப் பதிவு செய்து தவறான வழியில் பணம் பறிப்பவர்களும் இருக்கிறார்கள்.

இதனால் உண்மையாகப் பாதிக்கப் பட்டவர்களுக்கு உதவ முடியாத சூழலும் பலநேரங்களில் ஏற்பட்டு வருகிறது. அதேபோன்று முகநூலில் பல போலி நிறுவனங்கள் எனது நிறுவனத்தில் முதலீடு செய்தால் அதிக வட்டி தருகிறேன் என்று ஆசை வார்த்தை காட்டி மோசடி செய்வதும் நாளும் தொடர்ந்தவாறு இருக்கிறது.

மனிதனால் கண்டு பிடிக்கப்பட்ட விஞ்ஞான சாதனங்களால், மனித இனத்துக்கே தீங்கு ஏற்படக்கூடிய நிலைமை உள்ளதை நினைத்து பலநேரங்களில் நான் வருத்தப்படுவதும் உண்டு. ஆனால் என்னை உருவாக்கியவர்கள் என் மூலமாக உலகத்தவருக்கு நல்லதே நடக்க

வேண்டும் என்ற நோக்கத்தோடு தான் முகநூலாகிய என்னை உருவாக்கியிருப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கு எப்போதும் உண்டு என்பதை நீங்களும் புரிந்து கொண்டால் அனைவருக்கும் நன்மையே என்னால் கிடைக்கும்.

– நன்னிலம் இளங்கோவன்

கவிஞர் நன்னிலம் இளங்கோவன் மயிலாடுதுறையைச் சேர்ந்தவர். சிறந்த கவிஞர். பல சிறுகதைகளை எழுதியுள்ளார்.

### செயல்பாடுகள்

- பாடப்பகுதியைப் போல் நீங்கள் அறிந்த ஏதேனும் ஒரு தன்வரலாற்றைத் திரட்டி எழுதுங்கள்.
- முக நூலின் சேவைகளை வரிசைப்படுத்தி எழுதுங்கள்
- சமூக ஊடகங்களால் ஏற்படும் தீமைகளை வலியுறுத்தி பத்திரிகைக்குத் தலையங்கம் எழுதுங்கள்.
- முகநூலில் பதிவு செய்யும் போலிச் செய்திகளால் பாதிக்கப்படும் மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கில் துண்டுப்பிரசுரம் தயார் செய்யுங்கள்
- 'சமூகமும் வலை தளங்களும்' என்ற தலைப்பில் கட்டுரை தயார் செய்யுங்கள்.

## 'சைபர்' குற்றங்களைச் 'சைபர்' ஆக்குவோம்

வலைதள வலைகளில் விழாமல் இருப்போம்
சைபர் குற்றங்களை சைபர் ஆக்குவோம்.

'சைபர்' குற்றம் என்றால் என்ன தெரியுமா?

சாலையில் நடந்து போகிறோம். எதிரே வந்து ஒருவர் திடீரென்று கத்தியைக் காட்டி மிரட்டி. "சத்தம் போட்டே..... குத்திக்கொன்றுடுவேன். எடு மணிப் பர்சை" என்கிறார். பயத்தால் பர்சை கொடுக்கிறோம். அவர் பறந்துவிடுகிறார். இதை வழிப்பறி என்கிறோம். இதுபோன்ற செயல்களை மனிதர்கள் செய்வதால், இதை மனிதக் குற்றம் என்று சொல்லலாம்.

கம்ப்யூட்டர், செல்போன்கள் உதவியோடு வலைத்தள வழிகளில் இதுபோன்று நடைபெறுவதுதான் தொழில்நுட்ப வழிப்பறி. இதை சைபர் குற்றம் என்கிறோம்.

இந்த இரண்டு வழிப்பறிகளையும் மனிதர்கள்தான் செய்கிறார்கள். முதல் வழிப்பறியை மனிதன் நேரடியாகச் செய்கிறான். இரண்டாவதை தொழில்நுட்பங்களில் நுழைந்து அவனே செய்கிறான். இரண்டிலும் நாம் பணத்தை இழக்கிறோம். பயமுறுத்தப்படுகிறோம். அவமானப்படுகிறோம்.

### சைபர் குற்றங்கள் அதிகரிப்பு

இன்று மின்னணு தொழில்நுட்பம் (டிஜிட்டல் டெக்னாலஜி) வளர்ந்து இணையதளத்தின் பயன்பாடு எழுச்சி அடைந்து வருவதுடன் சைபர் குற்றங்களும் அதிகரித்து வருகின்றன.

வங்கி ஏ.டி.எம் கார்டு காலாவதியாகப் போகிறது. அதனைப் புதுப்பிப்பதற்கு உங்களது ஏ.டி.எம். கார்டு எண் மற்றும் ரகசிய குறியீடு எண்ணைக் கொடுங்கள் என்று தமிழ் கலந்த இந்தியில் பேசி கொள்ளையர்கள் கைவரிசை காட்டுகிறார்கள். அவர்கள் வங்கியில் இருந்து தான் பேசுகிறார்கள் என்று நினைத்து ரகசிய குறியீடு எண்ணைக் கொடுத்து பணத்தை இழந்தவர்கள் ஏராளம்.

வங்கியில் ஆதார் கார்டு எண்ணை இணைக்காவிட்டால் வங்கிக் கணக்கு முடக்கப்பட்டுவிடும். மின் கட்டணத்தை உடனடியாகச் செலுத்தாவிட்டால் மின் சேவை நிறுத்தப்படும். போக்குவரத்து விதிமீறல் அபராத கட்டணத்தைச் செலுத்துங்கள் என, செல்போன் எண்களுக்கு குறுஞ்செய்தி மற்றும் இ. மெயிலுக்கு அனுப்பும் மோசடி லிங்குகள் மூலம் நிழல் உலகில் இருந்துகொண்டு மோசடி மன்னர்கள் பணம் பறித்து வருகிறார்கள்.

நெட் பேங்கிங் வசதி துண்டிக்கப்பட்டுவிடும், பகுதி நேர வேலைவாய்ப்பு, ஆன்லைன் திருமண மோசடி, ஆபாச வீடியோ கால் அழைப்பு, முக்கிய பிரமுகரின் பெயரில் பேஸ்புக், டுவிட்டர் உள்ளிட்ட சமூக ஊடகங்களில் போலிக் கணக்குகளைத் தொடங்கி, அந்த நபர்கள் மற்றும் உறவினர்களிடம் பணம் பறித்தல் என மாறு வேடங்களில் நம்மைச் சுற்றியே அலைகின்றன சைபர் குற்றங்கள்.

உலகக் கோப்பை போட்டியைப் பார்ப்பதற்கு 50 ஜி.பி. டேட்டா இலவசமாக வழங்குவதாக 'லிங்க்' ஒன்றை சமூக ஊடகங்களில் மோசடிக்காரர்கள் அனுப்பினர்கள். இதன் தீய நோக்கத்தைக் கண்டுபிடித்த சைபர் கிரைம் போலீசார் எச்சரித்தனர்.

சைபர் கிரைம் குற்றவாளிகள் ஆசையைத் தூண்டும் விதமாக தூண்டிலை வீசி, அதில் மாட்டிக்கொள்பவர்களை லாவகமாக அமுக்கிவிடுகிறார்கள். இதனால் வியர்வை சிந்தி உழைத்த பணத்தை பலர் நொடிப்பொழுதில் இழந்து தவிக்கிறார்கள்.









சிலந்தி வலை போன்று பின்னிக்கிடக்கும் இணைய வலையில். விழுந்தால் நாம் இழப்பது பணம் மட்டும் அல்ல மானமும்தான் என்பதை மறந்துவிடக் கூடாது.

'சைபர் கிரைம்' குற்றம் தொடர்பாக உள்ளூர் முதல் சர்வதேச அளவில் பல கொள்ளைக் கும்பல்கள் செயல்படுகின்றன. அந்த கும்பலைச் சேர்ந்தவர்கள் யார்? என்று அடையாளம் காண்பதில்தான் சிக்கல் இருக்கிறது.

புதுப்புது அவதாரம் எடுக்கும் சைபர் கிரைம் குற்றவாளிகளை ஒடுக்குவது என்பது சைபர் கிரைம் போலீசாருக்கு சவாலான பணியாகும். எனவே பொதுமக்கள்தான் சைபர் கிரைம் என்ற மாய வலையில் சிக்காமல் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும். அப்போதுதான் சைபர் குற்றங்களின் எண்ணிக்கையை சைபர் (பூஜியம்) ஆக்கமுடியும்.

## செயல்பாடுகள்

- 'சைபர் குற்றங்களைத் தடுப்போம்' என்ற பொருண்மையில் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு வழங்கும் பொருட்டு துண்டுப்பிரசுரம் தயாரியுங்கள்.
- சைபர் குற்றங்களைத் தவிர்ப்பதற்கான வழிமுறைகளைக் கலந்துரையாடி வரிசைப்படுத்துங்கள்.



# திரையினூடே....



## திரைப்படம்



திரைப் படத்தைக் காண்பதால்
தினமும் உலகில் வளர்ந்திடும்
குறைவில் லாத அறிவினைக்
கொண்டு நாமும் உயரலாம்.

தூர தேசம் யாவையும்
சுற்றித் திரிந்து கண்டிடும்
பேர திசயம் யாவையும்
படத்தில் கண்டு மகிழலாம்.

புத்த கத்தில் படித்திடும்
புத்தம் புதிய கலைகளை
நித்தம் வாழ்வில் காட்டியே
நிறைவை யளிக்கும் திரைப்படம்.

நாட்டின் நலனைக் கருதியே
நல்ல தலைவர் கூடிடும்
கூட்டந் தன்னைப் பார்க்கலாம்
கூறும் சொற்கள் கேட்கலாம்

– புலவர் சி. மாணிக்கம்

**சி. மாணிக்கம்:** இவர் மிகச் சிறந்த எழுத்தாளர். சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் எனும் ஊரில் வசித்து வரும் இவர் தமிழாசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். பத்து நூல்களையும் மூன்று கவிதைத் தொகுப்புகளையும் வெளியிட்டுள்ளார். மாணிக்கப்பாடல்கள்என்னும்கவிதைத்தொகுப்பிலிருந்துஇப்பாடல்எடுக்கப்பட்டுள்ளது.

### செயல்பாடுகள்

- திரைப்படத்தின் பயன்களை வரிசைப்படுத்துங்கள்.
- திரைப்படம் என்ற கவிதையினை நயம் பாராட்டி எழுதுங்கள்.
- உங்களுக்கு விருப்பமான திரைப்படத்திற்கு விமர்சனக் குறிப்பு தயார் செய்யுங்கள்.

## திரைப்பட வரலாறு

இயந்திர உலகில் மனிதன் இயந்திரம் போலவே வாழ்ந்து வருகிறான். அவனுக்கு ஏதேனும் ஒரு வகையில் நிம்மதி தர வேண்டும். அதற்கு உறுதுணையாக இருப்பது திரைப்படமே. அறிவியல் கண்டுபிடிப்புகளில் இதுவும் ஒன்று. உலக மக்கள் அனைவரும் சொந்தம் கொண்டாடுகிற பொதுவானதொரு உலகக்கலை திரைப்படமாகும்.

ஒரு நாட்டில் எது இருக்கிறதோ இல்லையோ, நிச்சயம் திரையரங்குகள் உண்டு. மிகவும் சக்தி வாய்ந்த, கவர்ச்சிகரமான, சிறந்த பொழுதுபோக்கு சாதனமாகவும் விளங்கி வருகிறது. விஞ்ஞானி தாமஸ் ஆல்வா எடிசனால் 1886–ஆம் ஆண்டில் கண்டறியப்பட்டது. அவர் கண்டறிந்த கருவி 'கிளிட்டோஸ்கோப்' எனப்படும். அதனை அடிப்படையாகக் கொண்டு 1889–ஆம் ஆண்டு வில்லியம் ஃபிரிஸ்கிரின் என்பவர் 'செலுலாயிட்' எனும் படம் பிடிக்கும் கருவியைக் கண்டுபிடித்தார்.

பிரான்சு நாட்டைச் சேர்ந்த லூமி சகோதரர் 1895–ஆம் ஆண்டு பிலிம் ஓடக்கூடிய படத்தினைக் கண்டறிந்தார். இதற்கு 'சினிமாக்டோ கிராஃபி' என்று பெயர். இதுவே சினிமா என்ற பெயரானது. ஆரம்பத்தில் 50 அடி நீளத்தில் தயாரிக்கப்பட்டது. நாளடைவில் 1000 அடியாகத் தயாரிப்பு நீண்டது.

1896–ஆம் ஆண்டு 'Vitascope என்ற நிழற்படம் முதன்முதலில் அமெரிக்காவில் உள்ள நியூயார்க்கில் காட்டப்பட்டது. அதே ஆண்டு மும்பையிலும் 'ஏசுவின் வாழ்க்கை' எனும் ஊமைப்படம் காட்டப்பட்டது. 1913–ஆம் ஆண்டில் 'நல்லதங்காள் கதை' சினிமா வாக வெளியிடப்பட்டது. 1916–ஆம் ஆண்டு முதல் 1932 வரை யிலும் தென்னிந்தியாவில் சுமார் 108 படங்கள் தயாரிக்கப்பட்டன.

1929–ஆம் ஆண்டில் 'ஷோபேட்' எனும் ஆங்கிலப்படம் 60 சதவீதம்

ஊமையாகவும், 40 சதவீதம் பேசும் படமாகவும் காட்டப்பட்டது. 1931–ஆம் ஆண்டு 'காளிதாஸ்' எனும் இந்திப்படம் காட்டப்பட்டது. அதன்பின் பேசும் படங்கள் அதிகம் வரத் தொடங்கின

செய்திப்படங்கள், விளக்கப்படங்கள், அறிவியல் படங்கள், சமூகம், புராணம் ஆகிய கதைப்படங்கள், விளம்பரப் படங்கள், மாணவர்கள், குழந்தைகள், பெரியவர்களுக்கென தனித்தனி படங்கள், அந்தந்த நாடுகளின் பண்பாட்டையும் பழக்க வழக்கங்களையும் நாகரிகத்தையும் உணர்த்தும் விதமான படங்கள், அண்ணன்–தங்கை பாசம், கணவன் – மனைவி அன்பு, மாமனார்– மாமியாரின் மரியாதை போன்றவற்றை வலியுறுத்தும் கதைகள் படங்களாக வெளிவந்து பயன் தருகின்றன.

திரைப்படங்களில் இடம்பெறும் கருத்தினைக் கவனிக்காமல், காட்சிக்கு அடிமையாகிறார்கள். ஒரு படத்தை பல தடவை பார்ப்பதும், நடிகைக்குக் கோயில் கட்டுவதும், நடிகர் அணியும் ஆடைகளைப் போன்றும் முடியினைப் போன்றும் தம்மை அலங்கரித்துக் கொள்வதும் சிலரிடம் காணப்படும் பழக்கங்களாகும். குடும்பத்துடன் உட்கார்ந்து பார்க்கும் படங்கள் இல்லாமல் வன்முறை, ஆபாசங்களைச் சில படங்களில் காட்டுகின்றனர். ஒரு தடவைக்குப் பதிலாக நூற்றுக்கணக்கான தடவைகள் பார்ப்பதினால் வீண் செலவு ஏற்படுகிறது. கால விரையம் ஏற்படுவதோடு உடல்நலத்தினைப் பாதிக்கவும் செய்கிறது. கண் பார்வைதனைக் கெடுக்கிறது. படங்களில் வரும் ஆபாசம், வன்முறைக் காட்சிகள் மனதினைக் கெடுத்து குற்றவாளிகளாக்குகின்றன. நூறாவது நாள் போன்ற படம் ஒன்பது கொலைகள் செய்யத் தூண்டியது. இதுபோன்ற தீமைகள் அதிகமாக உள்ளன.

திரைப்படங்களின் மூலம் தீமைகள் இருப்பினும், அதற்காக முற்றிலும் திரைப்படங்களை ஒதுக்காமல் பாலினை மட்டும் பிரித்தெடுக்கும் அன்னப்பறவை போன்று திரைப்படங்களில் உள்ள நன்மையினை மட்டும் எடுத்துக்கொண்டு வாழ்வில் நலம் பெற திரைப்படங்களைப் பயன்படுத்துவோமாக.

–சு. குப்புசாமி

### ஆஸ்கார் விருது

ஆஸ்கார் விருது அல்லது ஒஸ்கார் விருது எனப் பரவலாக அறியப்படும் அகாதமி விருதுகள் அமெரிக்காவில் திரைத்துறைக்கு வழங்கப்படும் மிகவும் முக்கிய விருதாகும். மேலும் உலகிலேயே அதிகளவில் தொலைக்காட்சி மூலம் பார்வையிடப்படும் விருது வழங்கும் விழாக்களில் முதன்மையான விழாவாகும். முதன்முதலாக அகாதமி விருதுகள் மே 16, 1929 ஆம் ஆண்டு ஹாலிவுட் ரூஸ்வெல்ட் ஹோட்டலில் 270 மக்கள் முன்னிலையில் நடந்தது. பின்னர் மேபைர் ஹோட்டலில் பெரிதாக நடந்தது. மொத்தம் பதினைந்து விருதுகள் வழங்கப்பட்டன. வெற்றியாளர்கள் நிகழ்ச்சிக்கு மூன்று மாதங்கள் முன்னதாக அறிவிக்கப்பட்டனர். 2010 ஆம் வருடம் வரைக்கும் மொத்தம் 2789 விருதுகள் வழங்கப்பட்டன.

**சு. குப்புசாமி :** இவர் கள்ளிப்பட்டி சு குப்புசாமி 1948 ஆம் ஆண்டு தேனி மாவட்டத்தில் பிறந்தார். இவர் நடுநிலைப்பள்ளி ஆசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். இவருக்கு தமிழ்நாடு அரசின் நல்லாசிரியர் விருது எனும் டாக்டர் ராதாகிருஷ்ணன் விருது. தமிழ்ச்செம்மல் விருது போன்றவை கிடைத்துள்ளன. ஐம்பதுக்கும் அதிகமான நூல்களை எழுதியுள்ளார். 2021 ல் காலமானார்.

### செயல்பாடுகள்

- சிறந்த இயக்குநருக்கான பிலிம்பேர் விருது, பத்மஸ்ரீ போன்ற விருதுகளைப் பெற்ற இயக்குநர் மணிரத்தினம் பள்ளிக் கலை விழாவில் வர உள்ளார். அவரை வரவேற்பதற்கான உரை தயார் செய்யுங்கள்.
- இன்றைய திரைப்படங்களின் வளர்ச்சிக்கு நவீனத் தொழில் நுட்பங்கள் பெரிதும் உதவுகின்றன என்பதை வலியுறுத்தி விமர்சனக் கட்டுரை தயார் செய்யுங்கள்.

## யானைகளும் மனிதர்களும் (The Elephant Whisperers)

(ஆஸ்கார் விருது பெற்ற ஆவணப்படம்)

மூன்று ஆண்டுகளுக்கு முன் முதுமலைச் சரணாலயத்திலுள்ள தெப்பக்காடு யானை முகாமிற்குச் சென்றிருந்தேன். யானைகளுக்கு உணவு தயாரிப்பதை வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தபோது அந்த வளாகத்தின் ஓரத்தில் ஒரு புதிய அடைப்பிடம் எழுந்துள்ளதைக் கவனித்து அங்கே சென்றேன் (இம்மாதிரி அடைப்பிடம் kraal என்று குறிப்பிடப்படுகிறது). அங்கே படுத்துக் கிடந்த ஒரு யானைக்குட்டிக்கு அருகே பழங்குடிப் பெண்மணி ஒருவர் அமர்ந்திருந்தார். அந்தக் குட்டியின் தாய் யானை இறந்துவிட்டதாகவும் அதைக் கவனித்துக்கொள்ளத் தான் அமர்த்தப்பட்டிருப்பதாகவும் சொன்னார். சில வருடங்களுக்குப் பின் இந்தியாவின் முதல் ஆஸ்கார் விருது பெற்ற படத்தில் இவர் தோன்றி உலகப்புகழ் பெறுவார் என்று அன்று நான் அறிந்திருக்கவில்லை.

> **ஜே.சி. டேனியல் விருது**
>
> ஜே.சி. டேனியல் விருது என்பது மலையாள திரையுலகின் மிக உயரிய விருதாகும். கேரள மாநில சலசித்ரா அகாடமியால் 1992-ஆம் ஆண்டு முதல் இவ்விருது வழங்கப்பட்டு வருகிறது. மலையாளத்திரையுலகில் சிறந்த பங்களிப்பை ஆற்றிய தனிநபர்களை கௌரவப்படுத்தும் வகையில் இவ்விருது வழங்கப்படுகிறது. மலையாளத் திரையுலகின் தந்தை என்று அழைக்கப்படும் இந்தியத் திரைப்படத் தயாரிப்பாளர் ஜே.சி. டேனியலின் பங்களிப்பை நினைவுகூரும் வகையில் கேரள அரசு இந்த விருதை ஏற்படுத்தியது.

பொம்மி என்ற பெயர் கொண்ட இவரும் பொம்மன் என்பவரும் காட்டு நாயக்கர் சமூகத்தைச் சேர்ந்தவர்கள். இந்த யானைக்குட்டியை வளர்க்கும் பணி அவர்களிடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. காட்டானைத்திரளை விட்டுப்பிரிந்த குட்டி அல்லது தாய் யானை இறந்துவிட்டதால் அனாதையாகும் யானைகளை வளர்ப்பது சிரமம் என்றும் பல செத்துப்போகின்றன என்றும் வனத்துறையினர் சொல்கிறார்கள். குட்டி யானை ரகுவைக் காப்பாற்றிவிட வேண்டும் என்ற ஆர்வத்தில் இந்த இருவரையும் பணிக்கு அமர்த்துகிறார்கள்.



இந்த இரு பழங்குடியினருக்கும் குட்டி யானைக்கும் உருவாகும் பிணைப்பு, காட்டு நாயக்கர்களின் வாழ்க்கை, இவை ஆசிய யானையின் வாழ்விடமான மேற்குத் தொடர்ச்சி மலைக்காட்டின் பின்புலத்தில் சொல்லப்படுகின்றன. இதுதான் The Elephant Whis-perers என்ற ஆவணப்படத்தின் சாரம். இந்தக் குறும்படத்தின் குவிமையம் யானை.

இந்தக் குறும்படத்திற்கு வேறு சில பரிமாணங்களும் உண்டு. அநாதையான ஒரு யானைக் குட்டியின் கதையைச் சொல்லும் போதே காட்டுயிர் பேணலில் உள்ள சில பிரச்சினைகளை நீளப் பிரசங்கம் ஒன்றும் செய்யாமல், இப்படம் வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது. அதில் ஒன்று காட்டுயிர். மனிதர் உரசல். குட்டி ரகுவின் தாய் யானை மின்சார வேலியினால் உயிரிழந்தது. இத்தகைய யானை மரணங்களைப் பற்றி நாளிதழ்களில் படிக்கிறோம். அது மட்டுமல்ல காட்டானைகளால் மனித மரணங்களும் ஏற்படுகின்றன. குட்டியைப் பராமரிக்கும் பெள்ளியின் கணவரை ஒரு வேங்கை அடித்துக் கொன்றுவிட்டது. இது நாடு முழுவதும் வனத்துறை எதிர்கொள்ளும் பிரச்சினை.

இந்தப் படத்தில் மேற்குத் தொடர்ச்சி மலையின் பல்லுயிரியம் அருமையாகக் காட்சிப்படுத்தப்படுகிறது. மலபார் அணில் தொடங்கி காட்டு மாடு, சாம்பர் மான், குட்டியை அணைக்கும் வாங்குர் மந்தி, ஆடி அசைந்து வரும் கரடி என இவற்றைப் பார்க்கிறோம். ஆம். வேங்கையும் உண்டு. முதுமலை புலிக் காப்பகமாயிற்றே. பாம்புக் கழுகைப் பார்க்கிறோம். இன்று வெகு அரிதாயிருக்கும் பிணந்தின்னிக் கழுகு என்று குறிப்பிடப்பட்ட பாறு கழுகைக் காட்டுகிறார்கள்.

அவ்வப்போது வரும் நிலப்பரப்புக் காட்சிகள், யானையின் வாழிடமான இலையுதிர்க் காட்டை அற்புதமாகக் காட்சிப்படுத்துகின்றன. திரை முழுக்கத் தெரியும் இலையற்ற மருதமரங்களைக் கொண்ட காடு, ஒன்றன் பின் ஒன்றாக மலைத் தொடர்கள், மோயார் அருவி, காட்டு ஓடைகள், பருவ மழையை அறிவிக்கும் சூல் கொண்ட மேகங்கள், தங்கத் தாம்பளம் போல தொடுவானத்தில் மறையும் சூரியன், விண்மீன்கள் நிறைந்த வானம் இவையாவுமே மனத்தைத் தொடும் பிம்பங்கள். காட்டானைத் திரள் ஒன்று வனப்பாதையில் செல்லும் காட்சி மனத்தில் நிற்கிறது. எல்லாக் காட்சிகளுமே சுற்றுப்புற ஒளியில் தான் படமாக்கப்பட்டுள்ளன. ட்ரோன் காமெராவை நன்கு பயன்படுத்தியுள்ளார்கள். அவ்வப்போது பின்னணியில் ஒலிக்கும் புல்லாங்குழல் இசை, காட்சிப் படிமங்களோடு ஒன்றிப் போகிறது. இசை பெல்ஜிய இளைஞர் ஸ்வென்ஃ பால்கோன்.

காட்டுயிர்களை இயற்கையாகப் படமெடுப்பதில் சில சிரமங்கள்



உள்ளன. உயிரினங்களின் நடவடிக்கை இயக்குநரின் கட்டுப்பாட்டில் இருப்பதில்லை. ஒரு விலங்கை இயக்குநர் இப்படிச் செய் என்று சொல்ல முடியாது. கையில் ஷூட்டிங் ஸ்கிரிப்டை வைத்துக்கொண்டு காட்டுயிர்களைப் படம் எடுக்க முடியாது. பொதுவான கதைக்கருவை மனத்தில் வைத்துத்தான் படம் எடுக்க முற்பட வேண்டும். கிடைத்ததை வைத்துப் படத்தை உருவாக்க வேண்டும். இங்குதான் எடிட்டரின் வேலை மிக முக்கியமாகிறது.

ஊட்டியில் வாழும் இயக்குநர் கார்த்தி கோன்சால்வாஸூக்கு இதுவே முதல் படம் . சினிமாவுடன் நல்ல அறிமுகம் உள்ளவர் என்று தெரிகிறது. சினிமாவின் சாத்தியக் கூறுகளை உணர்ந்திருக்கிறார். திரையின் மூலம் காட்சிப் படிமங்கள் மூலம் பார்வையாளர்களுக்கு விழிப்புணர்வைத் தரமுடியும் என்பதைக் காட்ட இப்படம் நல்ல எடுத்துக்காட்டு.

– சு. தியடோர் பாஸ்கரன்

**சு. தியடோர் பாஸ்கரன்:** எழுத்தாளர், சூழலியல் ஆர்வலர், தமிழ்த்திரைப்பட வரலாற்றாளர். 1940 இல் தாராபுரத்தில் பிறந்தார். சிவதாண்டவம் என்பது இவரது முதல் கட்டுரை. இவர் தமிழில் பல கட்டுரைகளை எழுதியுள்ளார். ஆங்கிலத்திலும் பல நூல்களை எழுதியுள்ளார்.

## செயல்பாடுகள்

- உங்களுக்கு பிடித்த ஏதேனும் ஒரு திரைப்படத்தைப் பற்றி விமர்சனக் குறிப்பு தயார் செய்யுங்கள்

- யானைகளும் மனிதர்களும் என்ற ஆவணப்படத்தின் மையக்கருத்தை எழுதுங்கள்.
- யானைகளும் மனிதர்களும் என்ற பாடப்பகுதியைக் கலந்துரையாடி குறிப்பு தயார் செய்யுங்கள்.
- திரைப்படம் அன்றும், இன்றும் என்ற தலைப்பில் செயல்திட்டம் தயார் செய்யுங்கள்.
- வலையொளி சமூகத்திற்கு நன்மை விளைவிக்கிறதா? தீமை விளைவிக்கிறதா என்ற தலைப்பில் நடைபெறும் பட்டிமன்றத்தில் ஏதேனும் ஒரு தலைப்பில் குறிப்பு தயார் செய்யுங்கள்.
- பள்ளி ஆண்டு மலரில் வெளியிடுவதற்கேற்ற தொழில்நுட்ப வளர்ச்சி குறித்த கவிதைகளைச் சேகரியுங்கள்.




## கலைச்சொல் அகராதி

| | | |
|---|---|---|
| பாகஸ் | – | பெட்டி |
| பிளாஷ்பேக் | – | பழைய நினைவுகள் / பின்னோக்கு உத்தி |
| காஃபின் | – | காப்பியில் அடங்கியிருக்கும் பொருள் |
| ஆல்கஹால் | – | மது |
| கொலஸ்ட்ரால் | – | கொழுப்பு |
| Honourary proffessor | – | வருகைதரு பேராசிரியர் |
| ஐ.எஸ்.ஆர்.ஒ | – | விண்வெளி ஆய்வு மையம் |
| ரோபோ | – | இயந்திரமனிதன் |
| புரோகிராம் | – | நிரல்கள் |
| ஆன்லைன் | – | நிகழ்நிலை |
| ஏர்போர்ட் | – | விமானநிலையம் |
| சாட்போட் | – | ஒருமென் பொருள் |
| சாட் ஜிபிடி | – | ஒரு செயற்கை நுண்ணறிவுத் தொழில் நுட்பகம் |
| ஸ்மார்ட்கிச்சின் | – | நவீன சமையலறை |
| யுடியூப் | – | வலையொளி |
| வாட்ஸ் அப் | – | புலனம் |
| டிவிட்டர் | – | குறுஞ்செய்தி |
| சைபர் கிரைம் | – | இணையக் குற்றம் |

# சொல்லகராதி

| | | |
|---|---|---|
| அலைவு | – | நோக்கமின்றி சுற்றித்திரிதல் |
| அச்சுறுத்தல் | – | பயமுறுத்தல் |
| அடுக்கம் | – | பக்கம் |
| அருவி | – | நீர்வீழ்ச்சி |
| அல்லல் | – | துன்பம் |
| அவல் | – | பள்ளம் |
| ஆதிக்கம் | – | தலைமைப்பண்பு |
| ஆய்வு | – | ஆராய்ச்சி |
| ஆறலை | – | வழிப்பறி |
| இகம் | – | உலகம் |
| இடர் | – | துன்பம் |
| உபாயம் | – | வழி |
| எஞ்சாமை | – | மிகுதியின்மை |
| எந்தை | – | என் தந்தை |
| எழில் | – | அழகு |
| எஃகு | – | இரும்பு |
| ஏணை | – | தொட்டில் |
| ஐயம் | – | சந்தேகம் |
| ஒவ்வா | – | பொருந்தாத |
| ஓம்புமின் | – | நிறுத்துங்கள் |
| கவ்வை | – | எள் பிஞ்சு |
| களம் | – | போர்க்களம் |
| களர்நிலம் | – | விளைச்சலற்ற நிலம் |
| சீறூர் | – | சிற்றூர் |
| தவசம் | – | தானியம் |
| தெவ்விர் | – | பகைவர் |
| தையலர் | – | பெண்கள் |
| நசித்தல் | – | அழிதல் |
| நிகர் | – | சமம் |
| நுகர்வோர் | – | பயன்படுத்துவோர் |
| புசித்தல் | – | உண்ணல் |

| | | |
|---|---|---|
| புஞ்சை | – | நீர்வளம் நிறைந்த பகுதி, வயல் |
| புஷ்டி | – | வலிமை |
| பொருநன் | – | வீரன் |
| பொற்பு | – | பொலிவு |
| மழலை | – | குழந்தை |
| மழவர் | – | வீரர் |
| மன்றல் | – | திருமணம் |
| மாட்சிமை | – | சிறப்பு |
| மாண்ட | – | சிறப்புடைய |
| மிசையா | – | மேடு |
| முழவு | – | ஓர் இசைக்கருவி |
| மையல் | – | விருப்பம் |
| மோசடி | – | முறைகேடு |
| வதுவை | – | திருமணம் |
| வர்த்தகம் | – | வணிகம் |
| வலித்த | – | செய்த |
| வழுதுணங்காய் | – | கத்தரிக்காய் |
| வனம் | – | காடு |
| விண்மீன் | – | நட்சத்திரம் |
| வேங்கை | – | புலி |
| வேந்தர் | – | அரசர் |
| வைகல் | – | நாள்தோறும் |
| லௌகிகம் | – | உலகப்பற்று. |

# இந்திய அரசியலமைப்புச் சட்டம்

## பாகம் 4 அ

### இந்தியக் குடிமக்களின் அடிப்படைக் கடமைகள்

51 அ பிரிவுக்கூறு

(அ) இந்திய அரசியலமைப்புச் சட்டத்துக்கு இணங்கி ஒழுகுதலும், அதன் உயரிய நோக்கங்களையும் நிறுவனங்களையும் மற்றும் தேசியக் கொடியையும் தேசிய கீதத்தையும் மதித்தலும்;

(ஆ) நம் நாட்டின் விடுதலைப் போராட்டத்திற்கு எழுச்சியூட்டிய உயர்ந்த எண்ணங்களை நெஞ்சில் நிறுத்திப் பின்பற்றுதல்;

(இ) இந்தியாவின் இறையாண்மையையும் ஒற்றுமையையும் நேர்மையையும் நிலைநிறுத்திக் காப்பாற்றுதல்;

(ஈ) இந்திய அரசு வேண்டும்போது நாட்டைப் பாதுகாக்கவும் நாட்டுக்காகத் தொண்டு புரியவும் தயாராயிருத்தல்;

(உ) சமயம், மொழி, வட்டாரம், இன வேற்றுமைகள் வரம்பு மீறுகிற நிலையில் அதற்கு எதிராக எல்லா இந்திய மக்களிடையேயும் நல்லிணக்கத்தையும், பொதுவான உடன்பிறப்பு உணர்வையும் வளர்த்தல்; பெண்மையின் மதிப்புக்கு இழிவு ஏற்படுத்தும் செயல்களை விட்டொழித்தல்;

(ஊ) நமது கலவைப் பண்பாட்டின் உயர்ந்த மரபை மதித்துப் பேணுதல்;

(எ) காடுகள், ஏரிகள், ஆறுகள், வனவிலங்குகள் உள்ளிட்ட இயற்கையான சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாத்து மேம்படுத்தலும், வாழும் உயிர்கள் மீது இரக்கம் கொள்ளுதலும்;

(ஏ) அறிவியல் சார்ந்த மனப்பாங்கு, மனிதநேயம், விசாரித்து அறியும் உள்ளறிவுத்திறம், சீர்திருத்தத்திறம் ஆகியவற்றை வளர்த்தல்.

(ஐ) பொது உடைமைகளைப் பாதுகாத்தலும் வன்முறையை விட்டொழித்தலும்;

(ஒ) பெரும் முயற்சிகள் சாதனைகளின் உயர்ந்த படிகளை நோக்கி இடைவிடாமல் முன்னேறத்தக்க வகையில் தனிமனித கூட்டு நடவடிக்கையின் எல்லாப் பரப்புகளிலும் முதன்மை நிலை எய்த முயலுதல்;

(ஓ) ஆறு வயதிற்கும் பதிநான்கு வயதிற்கும் இடைப்பட்ட பருவமுள்ள தன் குழந்தைக்கு, அதன் பெற்றோர் அல்லது பாதுகாவலர் கல்விக்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தல்;

ஆகிய இவையனைத்தும் ஒவ்வொரு இந்தியக் குடிமகனின் அடிப்படைக் கடமைகளாகும்.

# குழந்தைகளின் உரிமைகள்

*அன்பார்ந்த குழந்தைகளே,*

*உங்கள் உரிமைகள் எவையென்று தெரியவேண்டாமா? உங்கள் உரிமைகளைப் பாதுகாக்கத் தற்போது ஓர் ஆணையம் செயல்பட்டு வருகிறது. அதன் பெயர் கேரள மாநிலப் பாலர் உரிமைப் பாதுகாப்பு ஆணையம் என்பதாகும். உரிமைகள் பற்றிய அறிவு, உங்கள் பங்கேற்பு, பாதுகாப்பு, சமூகநீதி போன்றவற்றை உறுதிப்படுத்த ஆக்கமும் ஊக்கமும் அளிக்கிறது இவ்வாணையம். உங்கள் உரிமைகள் எவையென்று பார்ப்போம்.*

- பேசுவதற்கும்கருத்து வெளியீட்டிற்குமான சுதந்திரம்.
- தனிநபர் சுதந்திரம் மற்றும் உயிர் பாதுகாப்பு உரிமை.
- வாழ்வதற்கும் வளர்வதற்குமான உரிமை.
- ஜாதி-மத-இன-நிற சிந்தனைகளுக்கு அப்பாற்பட்டு மதிப்பதற்கும் அங்கீகரிப் பதற்குமான உரிமை.
- உடல், உள, பால் பலாத்காரங்களிலிருந்து பாதுகாத்துக்கொள்வதற்கும் பராமரிப்பதற் குமான உரிமை.
- பங்கேற்பிற்கான உரிமை.
- குழந்தைத் தொழில் மற்றும் ஆபத்தான தொழில்களிலிருந்து விடுதலை.
- குழந்தைத்திருமணத்திலிருந்து பாதுகாப்பு.
- தமது பண்பாட்டை அறிந்து அதற்கேற்ப வாழ் வதற்கான உரிமை.
- புறக்கணிப்புகளிலிருந்து பாதுகாப்பு.
- இலவச - கட்டாயக் கல்விக்கான உரிமை.
- விளையாடுவதற்கும் கற்பதற்குமான உரிமை.
- அன்பும் பாதுகாப்பும் நிறைந்த குடும்பத்தையும் சமூகத்தையும் பெறுவதற்கான உரிமை

## சில கடமைகள்

- பள்ளிக்கூடம், பொதுஇடங்கள் ஆகியவற்றை அழியாமல் பாதுகாக்க வேண்டும்.
- பள்ளிக்கூடத்திலும் கற்றல் செயல்பாடு களிலும் ஒழுக்கத்தைக் கடைபிடிக்க வேண்டும்.
- பள்ளிக்கூட அதிகாரிகள், ஆசிரியர், பெற்றோர், உடன் பயில்வோரை மதிக்கவும் அங்கீகரிக் கவும் வேண்டும்.
- ஜாதி-மத-இன-நிறச் சிந்தனைகளுக்கு அப்பாற் பட்டு எல்லோரையும் மதித்து அங்கீகரிப்பதற் கான மன நிலையை அடையவேண்டும்

*தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:*

**கேரளமாநிலக் குழந்தைகள் உரிமைப் பாதுகாப்பு மையம்**
சமூக நீதித்துறை இயக்ககம், அனெக்ஸ் பில்டிங்,
பூஜப்புரை, திருவனந்தபுரம் - 12, தொலைபேசி எண் : 0471 - 2326603
இ-மெயில் : childrights.cpcr@kerala.gov.in, rte.cpcr@kerala.gov.in
www.kescpcr.kerala.gov.in

**சைல்டு ஹெல்ப் லைன்-1098, கிரைம் ஸ்டோப்பர்-1090, நிர்பயா-1800 425 1400**
**கேரள போலீஸ் ஹெல்ப் லைன் - 0471-324300/44000/45000**

*Online* ***R. T. E Monitoring*** *: www.nireekshana.org.in*